ஸ்ரீ

சுபமஸ்து

# ருதுநூல் சாஸ்த்ரம்

இஃது

காவேரிப்பாக்கம்

K. M. தெய்வசிகாமணி சோதிடரால்

எழுதியது

அ. முத்துவடிவேல் முதலியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

காபிரைட்] 1938 [விலை அணா 8

## ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமான பேர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:— "ருதுநூல் சாஸ்திரம்" என்னும் இந்நூல் காவேரிப்பாக்கம் - தெய்வ காமணி சோதிடர் அவர்களால் எழுதியதை, அடியிற் கையொப்ப ட்டுள்ள யான் ஷெயாரிடம் சர்வசுதந்தரமும் பெற்று என்னால் அச்சிட்டு மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப் டிக்கு காபிரைட் செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் இதனை னது உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரிவித் க்கிறேன்.

இப்படிக்கு,

அ. முத்துவடிவேல் முதலியார்,

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

# முகவுரை

இப்பூமியின்கண் உண்டாயுள்ள ஆத்மகோடிகள் பலவற்றுள் இம் மானிடதேகமே மிக்க சிரேஷ்டமானதென்பது தெரிந்த விஷயமேயாயினும் இம்மானிடர்களின் வருகாலபலனை விளக்கும் சாஸ்திரங்கள் அனேகம். அனேக தபசிகளாலும் ஞானிகளாலும் உண்டாகி பிற்காலத்தில் அவை அனேக தமிழ் வல்லவர்களாலும் சோதிட விற்பன்னர்களாலும் வெளிவந்துள்ளவாயினும் மானிடர்களுக்கு விசேஷ மாய் வாழ்க்கை என்னும் குடும்பசுகமே முக்கியமாகும். அவ்வாறு வாழ்க்கைத் துணைவியைத்தேடி அவளின் இன்பதுன்பங்களை யறிந்து கொள்ளும் சாஸ்திரங்களனேகம் ஆதியிலேயே வெளிவந்துள்ளன வாயினும், நம் காலத்தவர்கள் அதனைக் கைக்கொள்ளாது மற்றும் பொதுவாகக்கூறிய ஜாதகபலத்தையே சிரேஷ்டமென நினைத்துக் கைகொண்டுவருவது கருதி, பெண்களுக்கு ருதுஜனனமே முக்கியமெனத் தீர்மானித்து, ஷை ருதுபாவ விஷயங்களைப் பல நூலாசிரியர்களின் நூலின் ஆதாரவைக்கொண்டு அவற்றிலிருந்து முக்கிய சாராம் சங்களைச் சேர்த்துத் திரட்டி 'ருதுநூல் சாஸ்திரம்' எனப்பெயரிட்டு, ஆண்களும் பெண்களும் ருதுவிஷயப்பலனை எல்லோரும் அறியும் வண்ணம் எளிய நடையில் எழுதி வெளியிடப்பட்டுள்ளன.

ஆதலால், இதனை ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் இப் புத்தகத்தை வாங்கி வாசித்து தன் இன்பதுன்பங்களையும், இனிவருங் கால விசேஷங்களையும் எளிதிலறிந்துகொள்ளுமாறு இந்நூலில் ருதுவாகும் காலம், ருது என்பது என்னவென்பதையும், பன்னிரண்டு பாவ விசேஷத்தால் தன்வாழ்க்கை விஷயம், புத்திர விஷயம், பர்த்தா விஷயம், பொருள் விஷயமென்னும் விசேஷங்களும், மாதபலன் - நக்ஷத்திரபலன் - திதிப்பலன் - வாரபலன் - லக்கினபலன் என்னும் முக்கிய விசேஷங்களையும், விரிவாயெழுதி இவ்வுலகோர்க்குப் பெரிதும் பயன்படுமாறு எழுதியுள்ளோம்.

மற்றும் பாவாத்பாவ விசேஷத்தால் கொடியவர்கள் சுபராக மாறுவதையும், சுபகோட்கள் பாவர்களாக மாறுவதையும், ஸ்திரீ புருஷர்களுக்குச் சொல்லிய முறைப்படியல்லாது ருது ஜாதகத்திற்கு வேண்டிய நூதன முறைப்படி "சாதக அலங்காரம், சாதக சிந்தாமணி,

குமாரசுவாமியம், வீமேசுர வுள்ளமுடையான்'' முதலிய நூற்களிலிருந்து முக்கிய விஷயங்களைத் திரட்டியும், மற்றும் அனேக சோதிடர்களின் அபிப்பிராயங்களை அறிந்தும், அவ்வாறு சம்மதித்துள்ள விஷய பாவங்களுக்கு, மற்றும் அனேக நூற்களிலிருந்து தருந்த மேற்கோளுடன் விரிவாயும் வெள்ளைச் சொற்களாகவும் சோதிடம் கற்போரும், கற்ருேரும் மற்றுமுள்ள ஆண்பெண்களும் ஓர் ருது ஜாதகத்தைக்கொண்டு அவளின் குணுதிசயமும் சுமங்கலி அமாங்கலி என்னும் ரகஸ்ய விசேஷங்களையும் விவரித்துள்ளனம்.

இந்நூலானது அனேகமாய் ஏட்டுப் பிரதிகளின் ஆதாரத்தாலும் ருதுவிளக்கமென்னும் கிரந்த பாஷையிலும் உள்ளதைத் தழுவிய தாகையாலும் இந்நூலிலுள்ள விஷயங்கள் யாவும் அனுபவத்திலும் மிக்க ஒற்றுமையுடனிருக்குமெனவும், இந்நூல் ஆரம்பமுதல் அந்தம் வரையில் பிழையின்றி எழுதி முடிக்கும்படி கருணைகூர்ந்த ஸ்ரீ முருகப்பிரான் இந்நூலின் விஷயங்களும் பொய்க்காது மெய்ப்பொருளாய் விளங்குமாறு வணங்குகின்றனம்.

காவேரிபாக்கம்
1-10-38

இங்ஙனம்
K. M. தேய்வசிகாமணி சோதிடர்.

# ருதுநூல் சாஸ்திரம்

## விநாயகர் துதி

சுந்தரனிரைந்திலகு கந்தரவர்முன்னோன்
சிந்தையில்நினைந்துதினம் அஞ்சலிகள்செய்வாம்.

## முருகன் துதி

ஓராறு முகமுடையாய் உனைத்தொழுவோர் இடரனைத்தும்
உருக்குவாய்நீ
ஈராறு கரமுடையாய் என்மனதிற் குடியிருந்து
இந்தநூலில்
பேராரும் பலன்களெலாம் மானிடர்க்கு எடுத்துரைக்க
பெரிதும்நின்று
சீரார முடித்துவைக்க திருமலர்கள் அதனைதினம்
சேவித்தேனே.

## நூல்

ருது என்பது பருவம் என்று பெயர். ருதுவானவ ளியல்பை இங்கு கூறுகையில் ருதுநூல் சாஸ்திரம் என்னும் பெயர் உண்டா யிற்று.

பருவம் என்பது ஓர் பெண்ணின் சேர்க்கையைக் குறிப்பிட்ட தாகும். பருவமடைந்த பின்னரே சேர்க்கைகாலத்திற்கு உரியகாலம் எனப் பெரியோராலும், தற்கால அனுபவப்படியும் சம்மதப்பட்டிருப் பதால் பருவகாலம் வாய்க்கும் நேரத்தால் அவளது வாழ்க்கையின் நன்மை தீமைகளை யிங்கு விவரிப்போம்.

ஓர் ஸ்திரீபிரஜையோ, அல்லது புருடப்பிறவியோ தான் ஜெனிக் கும் காலத்திலேயே தன் அவயவங்கள் முழுமையு மமைந்து ஜனிப்ப தில்லை; அனேகமாய் எவர்களுக்கும் தன் சரீரத்தினுள்ளே உள்ள அவயவங்களில் அனேகம் குறைவாயும், அனேக அவயவங்களில்லா மலும் பிறக்குமென்று நம்நாட்டு சாஸ்திர மேதாவிகளாலும், மேல் நாட்டு சாஸ்திர நிபுணர்களாலும் சம்மதிக்கப்பட்டு வருகிறது.

ஓர் ஸ்திரீபிரஜை ஜனிக்கும் காலத்தில், தன் சரீரத்தினுள்ளிருக்கும் அவயவங்களில் அனேகம் குறைவாயும், சில அவயவங்கள் உண்டாகாமலு மிருக்கும். அதனை எவ்வாறு வளர்ப்பது? அலது எவ்வாறு வளரும்? என்பதைக் கவனிக்குமிடத்து, ஓர் விருக்ஷமானது வித்தால் முளைத்ததென்றாலும், அந்த முளைக்கு இலை, கிளையில்லாவிடில் மரமென்னும் பெயர் உண்டாகாது. அந்த இலையும் கிளையுமுண்டாக நாம் ஷை முளைக்குத் தினந்தோறும் ஜலம் ஊற்றி அதனை வளரச்செய்வதுபோலவே நாம் கூறப்போகும் ஸ்திரீ ஜாதகத்தில் ஷை ஸ்திரீயானவள் தாயின் கெர்ப்பத்திலிருந்து பிறந்துவிட்டாளெனினும், அந்த ஸ்திரீயின் உள் அவயவங்களை வளர்க்க அதற்கென்ன செய்கிறாமென்றால், அந்தக் குழந்தையின் தாயானவள் பலவித ஆகாரபக்ஷணத்தால், ஷை பக்ஷணம் தாயின் உடலில் ஊறி அமுதமென்னும் பால்சுரக்க ஷை பாலை அந்தக் குழந்தைக்கு ஊட்டுகிறாள். இப்படி சிலகாலம் சென்றபின்பு, ஷை குழந்தையே ஆகாரம் சாப்பிட எத்தனிக்கையால், ஷை ஆகாரமானது அன்னரசமென்னும் இரத்தமாக மாறி அக்குழந்தையின் சரீரத்துள்ளிருக்கும் மிகச் சிறியதும் வளராததுமான அவயவங்களை வளர்த்து வருகிறது.

கவனிப்பு. ஆகாரம் அருந்தா காலங்களில் தாயின் முலைப்பால் இரத்தமாகியும், ஆகாரம் அருந்துங் காலங்களில் ஷை ஆகாரமானது ரத்தமாக மாறியும், ஷை அவயவங்களை வளர்த்துவருகிறது.

இப்படியே ஷை அவயவங்கள் வளர வளர ஷை பெண்ணும் வளர்ந்துகொண்டே வருகிறாள். இப்படியே தான் ஜெனித்த 12-ஆம் வருடங்களுக்குமேல் சுமார் பதினாறம் வயதுக்குள் ஷை ஸ்திரீயினது உள் அவயவங்கள் பூர்த்தியாகிவிடுமென்பது சாஸ்திரிகளின் கணக்காகும்.

மேற்சொன்னபடியே ஸ்திரீயின் உள் அவயவங்கள் வளர சிறு குழந்தையில் தாயின் முலைப்பாலாலும், மழலைப்பருவம் நீங்கியவுடன் ஆகாரங்களாலும், தன் உள் அவயவம் வளருகிறதாக வைத்துக்கொள்வோம். ஷை ரத்தங்கள் எங்கே பாய்கிறது? தன் உள்ளிருக்கும் அவயவங்களை வளர்க்கவேயாகும். அவ்வாறாய் தன் சரீரத்தின் உட்புறத்திலும் மேற்புறத்திலுமிருக்கும் அவயவங்கள் வளர்ந்தபின்பும், மேற்சொன்ன ஸ்திரீயானவள் அருந்தும் அன்னரசமான இரத்தம் எங்கே செல்லுகிறது? என்றால் ஷை அவயவங்கள் மறுபடியும் குறையாமலும், பட்டுப்போகாமலும் காப்பாற்றவேண்டி பாய்ந்த

ரத்தம் போக மற்ற இரத்தங்கள் ஏற்கனவே கடவுளால் உண்டாக்கி வைத்திருக்கும் இரத்த பாண்டத்தில் வந்துசேருகிறது.

இவ்வாறே மேற்சொன்ன பாண்டத்தில் தன் அவயவங்கள் பட்டுப்போகாதிருக்கும்படி ஊரிய இரத்தம்போக மற்றுமுள்ள அன்னரஸ சத்துவை எவ்வளவு தாங்கும்? தாங்கியவரையில் தாங்குகிறது தாங்கமுடியாதகாலம் ஊற்றிவிடுகிறது; ஊற்றுங்காலம் திடீரென்று நீர்க்குடம் கவிந்தால் எவ்வாறு அந்தப் பாண்டத்தின் ஜலம் மொத்தமும் ஊற்றிவிடுமோ அவ்வாறே ஸ்திரீயின் கர்ப்பத்திலிருக்கும் இரத்தப்பை சாயும்போது அந்தப் பையினுள்ளிருக்கும் இரத்தமுழுமையுமே சாய்ந்துபோகும்.

அவை எந்தவழியாய் வெளிவருவது? நவதுவாரங்களில் எந்த வழியானுலும் செல்லலாம். கண்-காது-மூக்கு-வாய்-தொப்புள் என்னும் வழியே ஷை ரத்தம் வெளியாகுமாகில் ஸ்திரீயின் பிராணன் போம். இதனுல் தெய்வானுகிரகத்தால் யோனியின் வழியாய் செல்லுகிறது.

மேற்சொன்னபடி தன் கர்ப்பத்திலிருக்கும் இரத்தப்பையிலிருக்கும் இரத்தமானது கவிழ்ந்தகாலத்தையே நாம் ருது என்கிறோம். அதுவயாவன. ஒருபெண்ணின் அவயவங்கள் பூர்த்தியானது; அல்லது பருவகாலம் வந்துவிட்டது என்கிறோம்.

ஷை பெண்ணுனவள் தனது அவயவங்களை வளர்த்துக்கொண்டு பருவகாலமடைந்தபின், தான் அருந்தும் ஆகாரம் அன்னரசமாகிப் பின் உண்டாகும் இரத்தம் எங்கே செல்லுகிறதெனில் முன் சொன்னபடி தன் உள்ளும் புறமுமுள்ள அவயவங்களுக்கு ஊரியதுபோக மற்றவை முன் சொன்ன இரத்தப்பைக்குள்ளேயே போய்ச் சேருகிறது. இப்படி நாளாவட்டமாய் தனது அவயவத்திற்குரிய இரத்தம்போக முன்சொன்ன ரத்தபாண்டத்தில் சேர்ந்துகொண்டே வருகிறது. மறுபடியும் ஷை ரத்தபாண்டமானது நிரம்பிவிட்டால் என்ன செய்யும்? மறுபடியும் ஷை ரத்தபாண்டம் தன்னுல் தாங்கமுடியாது கவிழ்ந்துபோம். அப்போதும் ஷை ரத்தமானது முன்சொன்ன யோனிவழியாகவே வெளியாகிறது இதனை மாதவிடாயென்கிறோம். இவை ஏறக்குறைய 24-க்குப்பின், முப்பத்து மூன்றுநாளுக்குமுன் உண்டாகுமெனவுங் கூறப்படுகிறது.

இதன்பின் மாதாமாதம் மேற்சொன்ன விதமாயுண்டாகும் உதிரப்பெருக்கையே மாதவிடா யென்கிறோம்.

சிலகாலங்களில் ஷை ஸ்திரீயானவள் கர்ப்பமாயிருக்கும்போது மேற்சொன்ன விதமாய் மாதவிடாயாவதில்லை யாதலால் அக்காலத்தில் தானருந்தும் அன்னரசமான உதிரம் எங்கே செல்லுகிறதென்றால் தன் கர்ப்பத்திலுள்ள குழவியை வளர்க்க அந்த இரத்தம் சிலவாகி விடுகையால் ஷை இரத்தம் வெளியாக யிடமில்லையென்பது சாஸ்திர மறிந்த மேதாவிகள் கூறியதாகும்.

இவை பெண்களுக்குரியதாகும். ஆடவர்களோவெனில் தன் பருவகாலம் வரையில் ஷை இரத்தம் அவயவங்களை வளர்க்க ஊறு கிறதென்றும், அவயவங்கள் வளர்ந்து பருவகாலம் வந்தவுடன் ஷை ரத்தமானது இந்திரியம் என்னும் ஓர்வித சக்தியாய் 60-துளி கொண்ட உதிரம் ஓர்துளி இந்திரியமாய் சம்போககாலம் வெளியாகிற தாகக் கூறப்படுகிறது.

இவை இவ்வாறிருக்க பருவகாலம்வந்த பெண்ணை ருதுவானவள் என்று கூறுவதால் ருதுவானவள் விஷயம் என்னவென்பதை யிங்கு கவனிப்போம்.

ருது என்பது பருவகாலம் என்பதை முன்னமே விளக்கி னோம். மேற்படி பருவகாலம் அவயவங்களை பூர்த்தியாக்கி யிருந்துள்ள இரத்தமே வெளியாகும் என்றுங் கூறியுள்ளதால் அவ்வாறு பருவ காலமடைந்த ஸ்திரீயின் தேகத்தைக்கொண்டு அவளின் பின்வரும் வாழ்க்கையைக்கூற யிடமுண்டு. எப்படியெனில் பருவகாலமடைந்த போது ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரம் கிரகம் என்பவர்கள் எவ்வித ஆக்ருஷ்ண சக்தியுடன் பூமியில் வீசியுள்ளது? அவ்விதமான சக்தியில் மேற்படி பெண்ணின் தேகமானது எவ்வித தேகமாய் பண்பட் டுள்ளது? அப்படி ஏதோ ஓர்விதமாய் பண்பட்டுள்ள சரீரம் பிற்காலத் தில் என்னபயனை யடைந்திருக்குமென்பதை யறிந்துகொண்டோ மானால் அவளின் வாழ்க்கையை முன்னமே யறிந்துகொள்ளலாமாகை யால், மேற்படி பெண் ருதுவான (அல்லது) பருவகாலமடைந்தபோது கிரகம் நக்ஷத்திரம் என்னுமிவைகளின் சக்தி எவ்வாறிருந்தது என் பதை ஆராயவேண்டும்.

இவ்வாறு ஆராய்ந்தறிய சோதிடசாத்திரத்தால் நம் முன்னோர் கூறிய சில முக்கிய விஷயங்களை இங்கு கூறுவோம்.

முதன்முதலாக காலம் என்னும் நேரத்தை கவனிக்கும்போது காலத்தாலேயே கிரகபலம், நக்ஷத்திரபலம், திதிபலம் என்பவற்றை

யறியலாமென நம் முன்னோராலும் தற்போதுள்ள அனுபவத்தாலும் கூறயிடமுண்டு. ஆதலால் முதலாவதாக காலம் என்னும் நேரத்தைக் கவனிப்போம்.

நாம் குறித்தநாளில் சூரிய உதயமுதல் சூரியன் உதயமாகி அஸ்தமிக்கும் வரையில் மேற்படி சூரியனின் ஆக்ருஷ்ண சக்தியானது பலவித கிரகணங்களாய் பூமியில் வீசுவதை நாம் அறிகிறோம். சூரியன் அஸ்தமயமான பின்பும் மேற்படி சூரியன் ஆக்ருஷ்ண சக்தியும் மற்றும் இராக்காலங்களில் பிரகாசிக்கும் கிரகங்கள் நக்ஷத்திரங்களிவைகளின் சக்தியும் முன் சொன்னபடியே அடிக்கடி பலவித மாறுபாடுடன் பிரகாசிக்குமென்றும், அவற்றால் பலவித சக்தி நமக்குண்டாகிறதென்றும் நம்முன்னோர் கூறியுள்ளார்.

இவ்வாறிருக்கையில் ஒரு பெண்ணின் பருவகால நேரத்தை எவ்வாறறிவது? என்றால்,

| | |
|---|---|
| சூரியன் | ஆத்மத்திற்கும் |
| சந்திரன் | இரத்தத்திற்கும் |
| செவ்வாய் | எலும்பினுள்ளிருக்கும் மூளைக்கும் |
| புதன் | தோலென்னும் தசைக்கும் |
| குரு | அறிவு என்னும் மூளைக்கும் |
| சுக்கிரன் | இந்திரியத்திற்கும் |
| சனி ராகு கேது | இவர்கள் நரம்புகளுக்கும் |

காத்தா என்று கூறியதால் மேலே சொன்னபடி மேற்படி பெண்ணின் பருவகாலத்தை கிரகங்களாலேயே அறியலாமென்பது கருத்தாகிறது.

**சோதிடர்களுக்கு அறிவிப்பு:** எவரொருவர்கள் ருதுப்பலன்கேட்க உம்மிடம் வந்தார்களோ அவர் சொல்லிய ருதுவான வருடம் மாதம் தேதியில் சந்திர உச்சம் எந்தகாலத்தி லுண்டாயினவோ அல்லது சூரிய உச்சம் உண்டாயினவோ அவையே ருதுகாலம் எனக் கொள்ள வேண்டும். சூரிய உச்சத்தை எல்லோரும் எளிதிலறியலாமாகையால் சந்திர உச்சத்தை இங்கு விவரிப்போம்.

எப்படியெனில், குறித்தநாள் அல்லது ருதுவானநாள் சுக்கில பக்ஷமாகில் சுக்கிலபக்ஷ பிரதமை முதலாயும், கிருஷ்ணபக்ஷமாகில் கிருஷ்ணபக்ஷ பிரதமை முதலாயும், தான் குறித்தநாள் வரையில் எத்தனை பக்கம் அல்லது எத்தனை திதிகளாயின என்பதையும், மேற்படி திதிகள் நாளொன்றுக்கு அல்லது மொத்தத்தில் எத்தனை நாழிகை

வரையிலுமிருந்தன என்பதைப் பஞ்சாங்க வாயிலாகவோ அல்லது அவரவர்கள் கணிதஸ்புடப்படியோ தெரிந்து மொத்த நாழிகையை ஒன்ருய்க்கூட்டி மூன்று பாகமாக்கி முதற்பாகமும் கடைப்பாகமும் விடுத்து நடுபாகத்தை நேரமாகக்கொண்டு, அந்த நேரத்திற்கு லக்கின மறிந்து அந்த லக்கினத்தை சூரியன், சந்திரன், செவ்வாய் இம்மூவரி லொருவர் முழுநோக்காய் நோக்குகின்றனராவென்றும், நோக்காவிடில் மேற்படி ராசியில் சேர்ந்திருக்கின்றனராவென்றும் கண்டு அந்த நேரத்தையே ருதுகாலமென்னும் லக்கினமாகக் கொள்ள வேண்டும்.

உதாரணம்: வெகுதானியஹு வைகாசீ 2-தேதியில், இரவு ருதுவானவள் காலத்தை கவனிப்போம்.

வெகுதான்னிய வருஷம் வைகாசிமாதம் 1-ம் தேதியில் பகல் நாழிகை 21-26-க்கு பின்பே பிரதமை வந்தது. அவை மறுநாள் 24-53 வரையிலு மிருப்பதால் இதன்மத்தியில் மொத்த நாழிகை

| | |
|---|---|
| யறிய முன்னுளில் | 38-34 |
| மறுநாளில் பகலில் பிரதமை | 29-13 |
| ஆக மொத்தம் நாழிகை | 67-வி-47 |

2-ஆம் தேதியில் பகல் 24-53-க்குப் பின் பிரதமை பின்னுன துதிகை வந்துளது மூன்ரும் தேதியில் பகல் 2[illegible]

| | |
|---|---|
| வரையிலிருப்பதால் 2-ஆம் தேதி நாழிகை 60-ல் இருப்பு | 35-[illegible]7 |
| 3-ஆம் தேதியில் | 29-13 |
| ஆக இரண்டையுங் கூட்ட | 64-20 |
| ஆகிறது. ஆனதால் இவ்விரண்டையும் ஒன்ருய்க் கூட்ட | 64-20 |
| மொத்தம் | 132-[illegible]7 |

இதனை பிரதமைமுதல் துதியைவரையிலான திதிகள் 2-க்கு பங்கிட (அவையாவன) 60-ஆல் வகுக்க மிச்சம் 12-7-ஆகும் ஆனதாலும்,

துதிகை 2-ஆம் தேதியிலிருந்து 3-ஆம் தேதி பகல் 29-13-க்கு முன் செல்லாகிய மொத்த நாழிகை 64-வி-20-ஐ மூன்ருல் வகுக்க பாகம் 1-க்கு 16.5-ஆகும். ஆனதால் 2-ஆம் தேதியில்

திதியை பிறந்த 29-13-க்குப்பின் மேற்சொன்னபடி முதல்பாகம் 16- 5 கூட்ட மொத்தம் 45-18 ஆகிறது.

ஆனதால் இரண்டாம் தேதியில் இரவு 45-18-க்குப் பின் நாழிகை 16-வி-5-க்குள் சந்திரனுக்கு உச்சகாலம் வரும். ஆனதால் மேற்சொன்ன 45-18-க்குப்பின் லக்கினமெடுத்து ஷை லக்கினத்தை முன் கூறியபடி சூரியன்-குஜன்-சந்திரன்-இவர்கள் லக்கினத்திலாவது அல்லது லக்கினத்தை பார்த்தாவது இருக்கின் அவையே ருது லக்கினமாகக்கொள்ளவும். ஆயினும் லக்கினத்தை ஸ்திரப்படுத்த கீழ்கண்ட அத்தாக்ஷியின்படி முன் பின்னாகக் கணக்கிட்டு அடையாளங்களை யறிந்துகொண்டு நேரம் என்னு மிலக்கினத்தை தெரிந்து கொண்டபிறகே கீழ்வரும் வருங்காலம் உரைப்பது நலம்.

## ருதுகால அடையாள விஷயங்கள்

(ருதுவாகுங் காலங்களி லணிந்தசேலை)

1. ஜென்மராசி எந்தராசியாயினும் அந்த ராசியில் சூரியனிருக்கில் சிவந்த சேலையும், சந்திரனிற்கில் வெண்மைநிறச்சேலையும், செவ்வாய் நிற்கில் இருசிவப்பான சேலையும், புதன் நிற்கில் நீல்நிற சேலையும், சுக்கிரனிற்கில் மங்கிய வெண்மைநிறச்சேலையும், சனி நிற்கில் கறுத்தசேலையும், இராகு நிற்கில் பொன்னிறமுள்ள சேலையும், கேது நிற்கில் சுத்த சிவப்பான சேலைகளை யணிந்திருப்பாளென்பது சாஸ்திரங்களின் கருத்து.

2. லக்கினத்தில் ஒரு கிரகத்திற்குமேல் எத்தனை கிரகங்கள் கூடியிருந்தாலும் மேலே சொன்ன நிறத்தின்படி பலநிறங்களையுடைய சேலை யணிந்திருப்பாளென்றுங் கூறுக.

## ருதுவான ஸ்திரீயை யார் நோக்கினரெனல்

3. ருதுலக்கினத்திற்கு 7-ல் சந்திரனிருக்கில் தாயும், சூரியனிருக்கில் சிற்றன்னை பெரிய அன்னை என்பவரும், செவ்வாய் நிற்கில் மூத்தசகோதரி அல்லது இளையசகோதரியென்றும், புதன் நிற்கில் தாய் பந்துக்களும், குரு நிற்கில் பிதாவின்பந்து ஸ்திரீகளும், சுக்கிரனிற்கில் தன்பர்த்தாவுக்கு முன்னவன் மனைவி அல்லது பின்னவன் மனைவியென்றும் சனி-ராகு-கேதுக்கள் நிற்கில் அன்னிய ஸ்திரீகள் அல்லது நீச்சஸ்திரீகள் கண்டாரெனவுங் கூறுக.

4. மேற்சொன்னபடியே 7-ஆம் ராசியில் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்க ளிருக்குமானல் எத்தனை கிரகங்கள் நின்றனவோ அத்தனை பேர் பார்த்தார்கள் என்றுங் கொள்க.

## ருதுவான பெண்ணைப் பார்த்தவர் சுமங்கலியா அமங்கலியா எனல்

5. சுமங்கலி அமங்கலி யென்பதை சுபகிரகங்களான சந்திரன்-புதன்-சுக்கிரனுகில் சுமங்கலியென்றும், சூரியன்-சனி-குஜன்-இராகு-கேதுவை அமங்கலியென்றும் கூறுவதுண்டு.

6. ருதுலக்கினத்திற்கு 7-ஆம் வீட்டிலோ அல்லது 7-ஆம் வீட்டுக் குடையவனுடனே மேற்சொன்ன சுபர்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும் அல்லது 7-ஆம் வீட்டிலேயே நின்றாலும் சுபர்கள் நோக்கினரென்றும் முன்சொன்னபடி 7-ஆம் வீட்டிலாவது 7-ஆம் வீட்டுக்குடையனுடனாவது அல்லது ஏழாம் வீட்டோனைப் பார்த்த வர்களாவது பாவகிரகமாயின் அமங்கலி பார்த்தார்களென்றுங் கூறுக.

## ருதுவான இடம்

7. ருது லக்கினதிபதி மேஷம் விருச்சிகமென்னும் செவ்வாய் வீட்டிலிருக்க வெளிப்புறத்திலும் ரிடபம் துலாம் என்னுமிராசியாகில் மாட்டுத்தொழுவத்திலும், மிதுனம் கன்னியாகில் வீட்டின் உட்புறத்திலும், கடகமாகில் ஜலக்கரையிலும், சிங்கமாகில் வீட்டுவாசலிலும், தனுசு மீனமாகில், கிணறு அல்லது பலஸ்திரீகள் சங்கமாயிருக்குமிடத்திலும், மகரம் கும்பமாகில் குப்பைமேடு, களம், அன்னியர்வீடு முதலிய இடங்களில் ருதுவானளென்றுங் கொள்க.

## ருதுவானபோது என்ன செய்திருந்தாளெனல்

8. ஜென்மலக்கினதிபதி சந்திரனுடன் கூடியிருக்கில் ஜலபாண்டம் வைத்திருந்தாளென்றும், குஜன்கூடில் அடுப்பங்கரையில் வேலை செய்திருந்தாளென்றும், புதன்கூடில் பலவித வர்ணங்கள் நிறைந்த பொருளுடன் விளையாடிக்கொண்டிருந்தாளென்றும், சுக்கிரன் கூடில் நடக்கும் வழியிலென்றும் கேளி விலாசமாய் பேசிக்கொண்டிருக்கையிலென்றும், சனிகூடில் நித்திரை காலத்திலென்றும், இராகுகூடில் சம்போக காலத்திலென்றும், கேதுகூடில் இருட்டறையிலிருந்த காலத்திலென்றுங் கூறவேண்டும்.

9. சிலர் சந்திரன்கூடில் ஜலக்கரையென்றும், சுக்கிரன் கூடில் சங்கீதம்பாடிக்கொண்டு இருந்தாளென்றுங் கூறுவதுண்டு. சூரியன் கூடில் ஊர் பிரயாணம் செய்கையில் ருதுவானளென்றும் சிலர் கூறுவதுண்டு.

## ருதுபர்வபலன் விளக்கம்.

### லக்னபாவம்

10. ருது லக்கினத்தில் சூரியன் நிற்கில், வன்னெஞ்சமுடைய வள், பணம் சேகரித்து திடீரென்று சிலவு செய்பவள், எவரையும் மதியாது தன் வாழ்க்கையை நடத்துபவள் என்றும்.

11. சந்திரன் நிற்கில் சாந்தம் தயை அடக்கமுடையவளும், சில காலங்களில் மேலான ராஜயோகமும், சிலகாலங்களில் கொஞ்சம் உடையவள், தன் விஷயங்களைப் பிறரிடம் சொல்லாதவள், மனோ பலமும் சத்தியமும் உடையவள் என்றும்.

12. செவ்வாய் நிற்கில் தனது புருஷனை வெகு தந்திரமாய் வைத்துக்கொண்டிருப்பவளும், பலவிதமான தொழிலும் தெரிந்தவளும், தனது தாய்தந்தை தங்கை தமயன் முதலியோருக்கு உதவிசெய்பவளும், மனதில் திகில் விசனம் உடையவளுமாவாளென்றுங் கூறுக.

13. புதன் நிற்கில் சுகதேகி எவ்வித துன்பத்தையும் பொருட் படுத்தாதவள், புத்திரசம்பத்தும் செல்வசம்பத்தும் அதிகமுடைய வள், பொன்பூஷணம் அணிவதில் மிக்க ஆசையும் சேர்க்கையுமுடையவள் என்றும்.

14. குரு நிற்கில் எவராலும் மதிப்பிடத்தக்கவளும், நன்மைகளைப் பல செய்பவளும், ஆயுராரோக்கியமும் சொந்த பூஸ்திதியுடையவளும், தாய் தந்தையரின் பூஸ்திதியுடையவளும், பர்த்தாவின் பூஸ்திதி கொஞ்சமுடையவளும்.

15. சுக்கிரன் நிற்கில் நல்ல அழகானதேகியும், பொன்பூஷணச் சேர்க்கையுடையவளும், தனது கணவனால் பலவித பாக்கியமுடைய வளும், தான் குறித்தபடி செய்யுந் தன்மையுடையவளும், கடவுளிடம் பக்தி செய்பவளும்.

16. சனி நிற்கில் குரூரபுத்தியும் புருஷனாலும் மற்றவராலும் இகழப்படுபவளும், சில காலங்களில் கஷ்டம் துக்கம் உடையவளும், பலவித கஷ்டத்தால் ஜீவனம் செய்பவளும், சிலநாளிருந்து விவாகம் செய்துக்கொள்ளுபவளும், அடிமைகளை யுடையவளும் பலயீனதேகியுமாவாள் என்றும்.

17. இராகு நிற்கில் பலதேசங்களைத் தெரிந்தவளும், மைந்தராலும் கணவனாலும் சில கஷ்டமுடையவளும், நானாவித செயல்களை யுடையவளும்.

18. கேது நிற்கில் தன் மனம்போல் நடந்துகொள்ளுபவளும், சரீர கஷ்டப்பட்டு ஜீவனம் செய்பவளும், மனமார்த்தமாய் பொருள் மோசம் போகுபவளும், கஷ்டதேகியும் ஆவாள்.

## 2-ஆம் இடப்பலன்

19. ருது லக்கினத்திற்கு இரண்டாமிராசியில் சூரியன் நிற்கில் தனச்சேதம், மனவருத்தம், அதிக சிலவும், எவருக்கும் பொல்லாதவளென்றும், குடும்பத் தொல்லைகளைப் பலவுடையவளென்றுங் கூறுக.

20. சந்திரன் நிற்கில் தன் குடும்பத்தை பலரும் பெருமையாய் பேசிக்கொள்வதும், ஆயுராரோக்கியம், சந்தோஷம், குடும்ப ஒற்றுமை, பொன்பொருள் முதலியன சேர்க்கையுடையவளும்.

21. குஜன் நிற்கில் பலருக்கும் வெறுப்புடையவள், எல்லா விஷயங்களுக்கும் சந்தேகி, எவராலும் உதவியில்லாதவள், பலருக்கும் கெட்டவள், நவதான்னியசேர்க்கை யில்லாதவள் என்றும்.

22. புதன்நிற்கில் வியாபாரம் செய்யத்தகுந்தவளும், வியாபாரத்தால் செல்வமுடையவளும், நாற்கால் ஜீவன்களைப் பலவுடையவளும், அன்னியோன்னிய சினேகமுடையவளும், அழகுடையவளுமாம்.

23. குரு நிற்கில் எவராலும் நன்கு புகழப்பெற்றவளும், ஆபரணங்களைப் பல உடையவளும், தெய்வபக்தி நிறைந்தவளும், எவருக்கும் உபகாரம் செய்பவளும், நான்குகால் ஜீவன் சேர்க்கையுடையவளுமாம்.

24. சுக்கிரன் நிற்கில் இளம்பிராயத்திலேயே விவாகமுடையவளும், தனது குடும்பத்தை சிதற விட்டாமல் பாதுகாத்துக்கொள்ளுபவளும், பொருள் சேகரிக்குந் திறமுடையவளும் ஆவாள் என்றும்.

25. சனி நிற்கில் தனது குடும்பத்தில் அடிக்கடி கோள்கலகங்களைப் பல உடையவளும், வறுமையுடையவளும், என்னாளும் நீங்காத விசனமுடையவளும், மனோதிடமுடையவளுமாம்.

26. இராகு நிற்கில் குடும்பத்தில் பல தொல்லைகளையுடையவளும், அயிஸ்வரியங்களைச் சம்பாதித்து சிலவு செய்பவளும், பழிகாரியும் ஆவாள்.

27. கேது நிற்கில் வைராக்கியம் சன்யாசத்துவமென்னு மிவைகளையுடையவளும், வஞ்சம் செய்யாதவளும், ஒருவரு மறியாதவளும் ஆவாளென்று இரண்டாமிடத்தைக்கொண்டு கூறுவர்.

## 3-ஆம் இடப்பலன்

28. ருது லக்கினத்திற்கு மூன்றாமிராசியில் சூரியன் நிற்கில் எவரையும் மதியாதவளும், நல்லெண்ணம் நல்லொழுக்க முதலியன உடையவளும், சயனம் சந்தோஷம் முதலியன உடையவளும்.

29. சந்திரன் நிற்கில் பலராலும் பலவுதவியும், தனது பர்த்தா குடும்பத்தவரால் நன்கு மதிக்கப்பெற்றவளும், தனம் தான்னியம் என்னும் சம்பத்துகளை பலவுடையவளும், விருதாவான காரியங் களுக்கு பிரவேசியாதவளுமாம்.

30. செவ்வாய் நிற்கில் எத்தொழிலாலும் சீர் சிறப்பு இல்லாத வளும், தனது ஐஸ்வர்யத்தைப் பிறருக்குச் செலவழிப்பவளும், நானு விதமான தொல்லைகளைப் பலவுடையவளும், இளம்மைந்தர்களை பல வுடையவளும் ஆவாள்.

31. புதன் நிற்கில் ஸ்தூலதேகமும் வாய்வு சரீரமும் உடைய வளும், விருதாவான காரியங்களுக்கு பிரவேசியாதவளும், தார தம்மிய முள்ளவளும் ஆவாளென்றுங் கூறுவர்.

32. குரு நிற்கில் தான் சம்பாதித்துத் தன் புருஷனுக்கு சிலவு செய்பவளும், நல்லோர் நேசமுடையவளும், எவருக்கும் பயப்படாத வளும், தாய் தந்தையரின் உதவியில்லாதவளுமாம்.

33. சுக்கிரன் நிற்கில் தனது பர்த்தாவால் சுகமில்லாதவளும், விஷயானுபவங்களில் குறைந்தவளும், புராணம் காவியம் முதலிய வற்றைத் தெரிந்தவளும் ஆவாள்.

34. சனி நிற்கில் எத்தொழிலினும் பயனடையாதவளும், விவ சாயத்தொழி லறிந்தவளும், கஷ்டதேகியும் எவரையும் ஆதரிப் பவளும், சயனசுகங் குறைந்தவளுமாவாள்.

35. இராகு நிற்கில் தன் இனத்தவரால் உதவியில்லாதவள், எந்நாளும் துன்பமுடையவள், தனது பூர்வோத்திர சொத்தால் சுக மடைபவள், நன்மார்க்க செயல்களை யுடையவளென்றும், கேது நிற் கில் பலவித கஷ்டங்களும், சகோதர த்வேஷமும் பலரால் தூஷிக்கப் படுபவளும், எவராலும் சுகமில்லாதவளுமாவாளென்றுங் கூறுக.

## 4-ஆம் இடப்பலன்

36. ருது லக்கினத்திற்கு நான்காமிராசியில் சூரியன் நிற்கில் வித்தை யுள்ளவள், பசுவாகனச் சேர்க்கையுடையவள், சீக்கிரத்தில் விவாகம் செய்துகொள்ளுபவள் என்றும்.

37. சந்திரன் நிற்கில் பல சாஸ்திரங்களை யறிந்துகொள்ளுபவளும், ஆலஸ்யகுணமும், நாற்கால் ஜீவசேர்க்கையும், எவருக்கும் நல்லவளுமாம்.

38. குஜன் நிற்கில் அடிக்கடி ஊஷ்ண வியாதி யுடையவளும், சயன மதிகமுடையவளும், தான் குறித்த வஸ்துவை வாங்குந் திறமுடையவளும், மனவருத்த மில்லாதவளும், தனது பர்த்தா சுசம் குறைந்தவளுமாம்.

39. புதன் நிற்கில் எக்காலமும் நீங்காத சம்பத்தும் சுகமுமுடையவளும், வியாபாரம் வாகனம் பலவுடையவளும், சகல ஐஸ்வர்யங்களு முடையவளும் நன்மார்க்க முடையவளுமாம்.

40. குரு நிற்கில் விவேக மதிகமுடையவளும், பிறருக்கு உபகாரியும், எந்நாளும் நீங்காத செல்வம் கல்வி முதலியன உடையவளும் மனவருத்த மில்லாதவளுமாம்.

41. சுக்கிரன் நிற்கில் மன சந்தோஷம் சேவகாவிருத்தி கைப்பொருள் சேர்க்கை யுடையவளும், தனது வைதீகமார்க்கத்தை எந்நாளும் மறவாதவளுமாம்.

42. சனி நிற்கில் கெர்ப்பமூலமான பிணி பீடைகளை யதிகமுடையவளும், எத்தன்மையான சுகமும் தானே தேடிக்கொள்ளுபவளும், நயனவார்த்தை யுடையவளுமாம்.

43. இராகு நிற்கில் சகல சுகபோகங்களை யுடையவளும், நலிந்த தேகியும் சயனங்குறைந்தவளும், பலவித வியாபாரம்செய்து பிழைக்கத் தகுந்தவளும், எத்தனகாரிய சேர்க்கையு முடையவளாம்.

44. கேது நிற்கில் பலவித அலைச்சலுடையவளும், நன்மார்க்கம் நிறைந்தவளும், தனித்து ஒளித்து வாழ்பவளும், சயனசுகத்தில் இச்சை குறைந்தவளுமாம்.

## 5-ஆம் இடப்பலன்

45. ருது லக்கினத்திற்கு 5-ஆம் மிராசியில் சூரிய னிற்கில் பிதுர்சுக மதிகமுடையவள், பிதாவின் செருக்கு முதலியவை அதிகமுடையவள் தன்புத்திரர்சுகம் இல்லாதவளும்.

46. சந்திரன் நிற்கில் வறுமை யில்லாதவள், பூர்வபூஸ்திதி நிறைந்தவள், மனவருத்த மில்லாதவள், மனம் கோணுதவள், சயனசுகபோக மதிகமுடையவள், வஞ்சகமில்லாதவளென்றும்.

47. குஜன் நிற்கில் விவசாயம் நிறைந்தவளும், எத்தொழிலும் செய்யத் துணிந்தவளும், வண்டி வாகனங்களைப் பலசேர்க்கை யுடைய வளும், தனதுவர்க்க உதவியும் மேன்மையுமுடையவள்.

48. புதன் நிற்கில் பூர்வோத்திர பூஸ்திதி யுடையவளும், தன் தாய்வகையில் சுகமுடையவளும், ஆபரணபூஷணம் சேர்க்கையுடைய வளும், தனதான்ய சேர்க்கையுமுடையவள்.

49. குரு நிற்கில் பொன் வெள்ளி முதலிய பூஷண அலங்காரப் பிரியமும் வியாபாரம் விவகாரம் முதலியன வறிந்தவளும், தன் சுய செல்வ மதிக முடையவளுமாம்.

50. சுக்கிரன் நிற்கில் பர்த்தாவால் பொன் பொருள் பூமி யென்னும் பலவற்றையுடையவளும், நாற்கால் ஜீவன்களால் விசேஷ சுக முடையவளும், தனது சுயசெல்வத்தால் இல்லம் உடையவளுமாவாள்.

51. சனி நிற்கில் மேலான பிரபுஸ்திரீ ஜனங்களின் சேர்க்கை யுடையவளும், அடிக்கடி தனது சுயசெல்வத்தை விரயம் செய்பவளும், மனவியாகூல முடையவளுமாம்.

52. இராகு நிற்கில் புத்திரர்களின் உதவி குறைந்தவளும், மன வியாகூல மதிகமுடையவளும், எந்நாளும் சிரமப்பட்டு வாழ்பவளும், மனமார்த்தமாய் மோசம் போகுபவளுமாம்.

53. கேது நிற்கில் புத்திரரில்லாதவளும், நன்மை தீமை யென்னும் இவ்விரண்டையுங் கலந்து அனுபவிப்பவளும், விவசாயமென்னும் பயிர்த்தொழிலால் ஜீவிப்பவளும் ஆவாள்.

## 6-ஆம் இடப்பலன்

54. ருது லக்கினத்திற்கு 6-ஆம் மிடத்தில் சூரியன் நிற்கில் தைரியம் வீரம் பராக்கிரமம் உடையவளும், நன்மைகள் பலவுடைய வளும், எந்நாளும் நீங்காத செல்வமுடையவளுமாம்.

55. சந்திரன் நிற்கில் வியாதி யதிகமுடையவளும், ஸ்தூல தேகியும் அடிக்கடி துன்பமுடையவளும், நன்மையில்லாதவளும், நீர்வியாதியுமுடையவளும் ஆவாள்.

56. குஜன் நிற்கில் சீக்கிரசந்தோஷியும், வியாதியைச் சட்டை பண்ணாதவளும், காமம் குறைந்தவளும், பலவிதமான சுகம் நிறைந் தவளும், தனது சுயயில்லத்திலேயே வாழ்பவளுமாவாள்.

57. புதன் நிற்கில் எவராலும் சுகமில்லாதவள், அனைவரும் தூஷிக்கத்தகுந்தவள், எத்தனைவிதமான வியாபாரம் செய்யினும் வருமான மில்லாதவள், எவருக்கும் அஞ்சுபவளாம்.

58. குரு நிற்கில் மனதில் திகில் உடையவளும், மனமார்த்த மாய் மோசம் போகுபவளும், எத்தன்மையான பந்துக்களாலும் சுக மில்லாதவள் விதவையென்றுங் கூறுக.

59. சுக்கிரன் நிற்கில் தனக்கும் தனதுபுருடனுக்கும் எந்நாளும் நீங்காத பகையும் துக்கமும் உடையவள், தனது பர்த்தாவின் சுகம் குறைந்தவள், நன்மையில்லாதவளென்றும்.

60. சனி நிற்கில் எவரையும் மதியாதவளும், வியாதியென்பதை நினையாதவளும், தனது உற்றோரையும் மற்றோரையும் நினையாத வளும் வாக்குசுத்த மில்லாதவளுமாம்.

61. இராகு நிற்கில் தைரியம் வீரம் பராக்கிரமம் தொழில் விருத்தி முதலியன உடையவளும், வியாதியில்லாதவளும், எவருக் கும் அஞ்சாதவளும் ஆவாள்.

62. கேது நிற்கில் சிற்சில காலங்களில் அன்னிய கிராமவாச முடையவளும், தன் உற்றோரால் சுகசௌக்கியங்களைப் பலவுடைய வளும், எல்லோருக்கும் பொல்லாதவள் என்னு மிவ்வியல்புகளை யுடையவளுமாவாளென்று கூறுக.

## 7-ஆம் இடப்பலன்

63. ருது லக்கினத்திற்கு ஏழில் சூரியன் நிற்கில் தனது புரு ஷனால் பல தொந்தரவு உடையவள், மனஸ்தாபமும் தொல்லையுமுடை யவள், எவ்விதமும் தைரியமும் தரித்திரமும் உடையவள்.

64. சந்திரன் நிற்கில் தன் வாழ்நாட்களில் நீண்ட செல்வமும் பிரபுத்துவமும், எவராலும் நன்கு மதிப்பிடத்தக்கவளும், பொன் பூஷணாதிகள் அதிகம் சேர்க்கையுடையவளுமாம்.

65. செவ்வாய் நிற்கில் பர்த்தா தோஷமுடையவள், வன்னெஞ்ச முடையவள், தொல்லையான குடும்பமுடையவள், தரித்திரமுடைய வள், என்னாளும் மனஸ்தாபம் தொல்லையுடையவள்.

66. புதன் நிற்கில் சரீரபுஷ்டியும் சகல சௌக்கியமும் உடைய வள், இலேசான வித்தை கல்வி செல்வமுடையவள், தனது பந்துக்க ளால் நன்கு மதிக்கப்பெற்றவள்.

67. குரு நிற்கில் நீண்டகால சுமங்கலி, தனது புருஷனால் எல்லாவிதமான சுகசௌக்கியங்களும் உடையவள், விவசாயத்தாலும் வியாபாரத்தாலும் தனச்சேர்க்கையுடையவள்.

68. சுக்கிரன் நிற்கில் சுபபந்துவில் பர்த்தாவுள்ளவளும், ஆலஸ்ய மில்லா மனமுடையவளும், புத்திரசம்பத்து நிறைந்தவளும், தார தம்மிய முடையவளும் ஆவாள்.

69. சனி நிற்கில் தொல்லையுடையவள், புருஷனால் சுகமில்லா தவள், தன் சரீரம்வாட கஷ்டப்பட்டு சம்பாதித்துத் தின்பவள், மன மறிந்து பொய் சொல்லுபவள்.

70. இராகு நிற்கில் சிலநாளிருந்து கலியாணம் செய்துக்கொள் ளுபவள், வளமான தேகமும் பலருக்கும் தெரிந்தவளும், நாலாவித மான வருமானமுடையவளும் ஆவாள்.

71. கேது நிற்கில் மனவருத்தமுடையவளும், கல்வி சம்பத்து அதிக முடையவளும், தனது பர்த்தாவின் செல்வத்தை வீண் சிலவு செய்பவளும், நன்மையில்லாதவளும் ஆவாள்.

## 8-ஆம் இடப்பலன்

72. ருது லக்கினத்திற்கு 8-ல் ரவி நிற்கில் விருதாப்பிய விதவை, தன் மனம்போல் எல்லாவிஷயமும் செய்பவள், கஷ்ட ஜீவனம் செய் பவள், எவராலும் சுகமில்லாதவள், நன்மை பொருந்தியவள் என்றும்.

73. சந்திரன் நிற்கில் சகலபாக்கியமும் பொருந்தியவளும், இன்றியமையாத புத்திரர்களை யுடையவளும், தனது எத்தன காரியத் தைத் தன் மனம்போல் செய்பவளும், குடும்பத்திற்கு நல்லவளுமாம்.

74. குஜன் நிற்கில் பாக்கியமில்லாதவள், புருஷசுகம் குறைந் தவள், ஆபரணச் சேர்க்கையில்லாதவள், நன்மையான மனமுடைய வள், ஆபத்து அதிகமுடையவள், சயனசம்பிரமம் அதிகமுடை யவளும் ஆவாள்.

75. புதன் நிற்கில் வியாபாரம் விவசாயத்தால் நஷ்டமுடையவ ளும், மனமார்த்தமாய் பொய் சொல்லுபவளும், எவருக்கும் பயப்படா தவளும், நன்மைபொருந்திய இல்லமொன்று உடையவளும் ஆவாள்.

76. குரு நிற்கில் அனேக புத்திரர்களைப் பெறுபவளும், சுல்ப புத்திரரே பூரண ஆயுளுடையவளும், தனது பிதா செல்வத்தால் ஜீவனம் செய்பவளும், பலதேச சஞ்சாரியுமாம்.

77. சுக்கிரன் நிற்கில் கேளி விலாசமாய் தன் வாழ்க்கையை நடத்துபவளும், ஆபரணவிருத்தி அதிகமுடையவளும், தனது பர்த்தாவின்மேல் கோபம் வெறுப்பு உடையவளுமாம்.

78. சனி நிற்கில் கோபம் அதிகம் உடையவள், பாவச்செயல்களையுடையவள், மன்னரைப்போன்றவள், சுகபோக இச்சை அதிகமுடையவள், கூர்மையான புத்தியுடையவளென்றுங் கூறுக.

79. இராகு நிற்கில் பிதுர்சுகமும் பர்த்தாசுகமும் குறைந்தவள், மனோதிடமுடையவள், சலிப்பில்லாதவள், குணமார்க்கங்களை அதிகமுடையவள், சஞ்சலம் துன்பமுடையவள்.

80. கேது நிற்கில் பிறரால் மோசம் போகுபவள், பலவித வஸ்திரங்களால் அலங்காரம்செய்யப் பிரியமுடையவள், வறுமையுடையவள், கொடியவளென்று பலரும் சொல்லுபவளாய் இருப்பாளென்றுங் கூறுக.

## 9-ஆம் இடப்பலன்

81. ருது லக்கினத்திற்கு 9-ல் இரவி நிற்கில் தனது பிதாவால் பலவித செல்வமுடையவள், மேலான கௌரவமுடையவள், விவகார விவசாயசுகம் அதிகமுடையவள், நன்மார்க்க செயலுடையவள்.

82. சந்திரன் நிற்கில் பாக்கியச்சிறப்பும் கல்விசிறப்பும் உடையவள், தனது சுயபூஸ்திதியால் பெருமையும் சந்தோஷமு முடையவள், நன்மார்க்க செயலுடையவள் என்றும் கூறுக.

83. குஜன் நிற்கில் அடிக்கடி சம்பாதித்து சிலவு செய்பவள், விளைபூமி அதிகமுடையவள், மனோதிடமும் கல்விதிடமும் உடையவள், சுகதேகி விசுவாசமுடையவள், எவரும் நம்பத்தகுந்தவள்.

84. புதன் நிற்கில் எத்தேசகாலமும் கல்வி சந்தோஷம் முதலியன வுடையவள், ஆபரணம் அதிக முடையவள், வியாபாரத்தால் அதிக தனமுடையவள், வன்மனெஞ்சமுடையவளும் ஆவாள்.

85. குரு நிற்கில் விவேகமுடைய புராணம் காவிய முதலியவற்றைக் கேட்கவும் பார்க்கவும் ஆசையுடையவள், கைப்பொருள் சேர்க்கையுடையவள், வருத்தமில்லாதவளுமாம்.

86. சுக்கிரன் நிற்கில் கல்வி செல்வம் புத்திரன் என்னும் சுகம் கடைசிவரையிலுடையவள், மனமார்த்தமாய் தருமம் செய்பவள், பொன்போலும் மொழியுடையவளுமாம்.

87. சனி நிற்கில் மனதிகில் உடையவளும், புத்திரரால் சிலவு அதிகமுடையவளும், கையிலுள்ள பொருளைப் பிறருக்குக் கொடுத்து மோசம் போகுபவளும், இஷ்ட ஜனங்களால் சிலவுடையவளும் ஆவாள்.

88. இராகு நிற்கில் புத்திரசுகங் குறைந்தவள், தருமம் செய்பவள், பலவிதத்தொழிலும் தெரிந்தவள், நன்மையுடைய சகோதரிகளுடையவள், வனசஞ்சாரியென்றுங் கூறுக.

89. கேது நிற்கில் சந்தோஷமில்லாதவள், ரொக்கதன மில்லாதவள், கையிலுள்ள நகை நாணயங்களை யிழப்பவள், வஸ்திரம் நிறைந்தவள், பயிர்த்தொழிலால் ஜீவிப்பவளென்றுங் கூறுக.

## 10-ஆம் இடப்பலன்

90. ருது லக்கினத்திற்கு 10-ஆம் ராசியில் சூரியன் நிற்கில் சகல கலையுந் தெரிந்தவள், சாமார்த்தியமுடையவள், நன்மைபொருந்தியவள், ஆபரணம் பொன்பூஷணமுடையவள்.

91. சந்திரன் நிற்கில் குடும்பசந்தோஷியும், புத்திரசந்தோஷியும் புத்திரர்களால் யோகமுடையவளும், நானுவித வியாபாரியும், ஜலயாத்திரை செய்பவளும், எந்நாளும் நீங்காத் தனமுடையவளுமாம்.

92. செவ்வாய் நிற்கில் எத்தொழில் செய்யினும் பங்கமுடையவளும், பிராதுரு சுகமுடையவளும், வாகனம் பூமி முதலிய சேர்க்கையுடையவளும், கோரியபடி செய்யவல்லவளுமாம்.

93. புதன் நிற்கில் வியாபாரம் செய்பவளும், பசு வாகனங்களையுடையவளும், விஷ்ணுபக்தி யுடையவளும், எக்காலமும் நீங்காத சிநேகிதருடையவளும், தனது கணவனால் சகலபாக்கிய முடையவளும் ஆவாள்.

94. குரு நிற்கில் யாகம் ஓமம்செய்ய பக்தியுடையவள், சிவபெருமான் கிருபையுடையவள், சயனசந்தோஷமுடையவள், விருதாவான காரியங்களைச் செய்யாதவள், தருமம் நிறைந்தவளென்றும் சத்தியவதியென்றுங் கூறுக.

95. சுக்கிரன் நிற்கில் ஆபரணம் வஸ்திரம் இவைகளை யனேகமுடையவளும், பொன் வெள்ளி முதலிய நாணயங்களையுடையவளும், தான்கண்ட பொருளின்மேல் ஆசையையுடையவளும் ஆவாள்.

96. சனி நிற்கில் சிக்கனச் சிலவுடையவளும், பந்து மித்திரர்களை மதியாதவளும், விளைபொருள்களைக்கொண்டு ஜீவனம் செய்பவளும், தீர்க்க ஆயுளுடையவளும் ஆவாள்.

97. இராகு நிற்கில் உத்தியோகம் செய்பவளும், அதிக சிலவுடையவள், படபடவென்று பேசத்தகுந்தவள், சிற்றின்பப் பிரீதியுடையவள், நவரத்தினச் சேர்க்கையுடையவள்.

98. கேது நிற்கில் ஞானமார்க்க மறிந்தவள், பெரியோர் நேயமுடையவள், எவ்விதகாரியங்களையும் துடுக்காய் செய்பவள், புத்திரரால் தொல்லையுடையவளென்றுங் கூறுக.

## 11-ம் இடப்பலன்

99. ருது லக்கினத்திற்கு 11-ஆம் இடத்தில் சூரியன் நிற்கில் லாபங்குறைந்தவள், சகோதரரால் சுகமில்லாதவள், மதிகுறைந்தவள், சண்டைக்காரி என்னும் பெயருடையவள்.

100. சந்திரன் நிற்கில் அழகு தேஜோன்மயமுடையவளும், எவர்களிடமும் அன்பாய் பேசவல்லவளும், தாய் தந்தையருக்கு பிரியமுடையவளும், இடது புருவத்தில் அடையாளமுடையவளும் ஆவாள்.

101. செவ்வாய் நிற்கில் வரவுக்கு மீறிய சிலவு செய்பவள், சில காலங்களில் தரித்திரமுடையவள், பெருமையில்லாதவள், தனது பர்த்தாவால் சிலகாலங்களில் துன்பமுடையவளும் ஆவாள்.

102. புதன் நிற்கில் அழகுடைய கணவனையும், நீண்ட ஆயுளும், நன்மார்க்கமுமுடைய புத்திரர்களை யுடையவளும், எந்நாளும் நீங்காத சம்பத்துடையவளும், தனது பந்துக்களிடம் மதிப்புமுடையவள்.

103. குரு நிற்கில் பல தேசங்களையும் பல ஆலயங்களையும் கண்டு தரிசிப்பவள், தெய்வபக்தி நிறைந்தவள், எந்நாளும் நீங்காத இன்பமுடையவள், சமர்த்தானவளென்றுங் கூறுக.

104. சுக்கிரன் நிற்கில் விஷய ஆலோசனை மிகுதியுடையவளும், நற்செய்கை நற்குணமென்னும் பலவகை சிறந்த குணமுடையவளும், ஆபரணாதிகள் சேர்க்கையுடையவளும் ஆவாள்.

105. சனி நிற்கில் விருதாவான காரியங்களில் பிரவேசிப்பவளும், வீண் விரயம், சிலகாலங்களில் வறுமை, சகோதரர்களால் உதவியில்லாதவள், மனதிடம் உடையவள் என்றுங் கூறுக.

106. இராகு நிற்கில் மனமார்த்தமாய் பிறருக்கு எதொரு பொருளும் கொடாதவளும், சிற்றின்பப் பிரியமும், ஏழைகளை ஆதரிக்கும் குணமும், பிடிவாத முதலியன உடையவளும் ஆவாள்.

107. கேது நிற்கில் ஊஷ்ணதேகமும், சஞ்சலமனமும், செய்தொழில் பங்கமும் உடையவள், நானுவித கல்வியும் சங்கீதமும் அழகும் வாய்ந்தவள், நேத்ரரோக முடையவளென்றுங் கூறுவாயாக.

## 12-ஆம் இடப்பலன்

108. ருது லக்கினத்திற்கு 12-ஆம் ராசியில் சூரியன் நிற்கில் வியாதி யில்லாதவளும், வேகமான நடையுடையவளும், பற்பல புண்ணியகாரியங்களைச் செய்பவளும், நற்காரியங்களில் சிலவு செய்பவளுமாம்.

109. சந்திரன் நிற்கில் தன் சுயகாரியங்களுக்கு தடையுண்டாதலும், எப்பொருளையும் மதியாதவள், பெண்களை யதிகமுடையவள், வாக்கு விரோதமில்லாதவள், தீர்க்க சுமங்கிலியென்றும்.

110. செவ்வாய் நிற்கில் புருஷசுகங் குறைந்தவள், இல்லையேல் புருஷனுல் பலவித விவாதமுள்ளவள், நற்சேர்க்கையில்லாதவள், பலருக்கும் கெட்டவள், பூஸ்திதி யுடையவளென்றும்.

111. புதன் நிற்கில் வியாபார நஷ்டமும், பொன் பூமி முதலியவற்றை இழந்துபோகுபவளும், நல்வசனமுடையவளும், பலதேசங்களையும் தெரிந்தவள், சீக்கிரம் விவாகம் செய்துக்கொள்ளுபவளும் ஆவாள்.

112. குரு நிற்கில் ஆலயம் முதலியவற்றைத் கட்டுவித்துத் தன் சொந்தபொருளைச் சிலவழிப்பவள், வைராக்கியமுடையவள், கடவுளிடத்தும் ஞானிகளிடத்தும் பக்தியுடையவள், அழகிய புத்திரர்களை அனேகமாய் பெற்றும் அற்புபுத்திரருடையவள்.

113. சுக்கிரன் நிற்கில் பொன் பொருளைச் சம்பாதித்து உடனுக்குடன் சிலவு செய்பவள், பர்த்தாவின் சுகங் குறைந்தவள், சிற்றின்ப இச்சையில்லாதவள், எவருக்கும் பெரியவளாவாள்.

114. சனி நிற்கில் எவ்வித வியாதியையும் சட்டை செய்யாதவள், எவரையும் மதியாது தன் குடும்பவாழ்க்கையைப் பெருமையாய் நடத்திக்கொள்ளுபவள், மெலிந்த தேகமுடையவள்.

115. இராகு நிற்கில் வெகு வைராக்கியம் கோபம் முதலியன வுடையவள், கையில் ஒருகாசும் வைத்துக்கொள்ளாதவள், காளி பைரவியென்னும் தேவதை யுபாசனமுடையவள்.

116. கேது நிற்கில் சகல ஐஸ்வர்யமிருந்தும் சன்யாசியைப் போன்றவள், குருவுபதேசமுடையவள், எவருக்கும் பதுங்கி ஒதுங்கி நடப்பவள், எவருக்கும் நன்மையே செய்பவளாகும்.

## பொது

சீர்சிறந்த பெண்களுக்கு ருதுபாவம்கூறில்
சிறப்புபெற்ற ருதுராசி ஏழாம்ராசி
பேர்பெற்ற அஷ்டமும் மதியுமாய்ந்து
பிரபலமும் யோகம்வரும் வகையும்சொல்வர்
நேர்பெற்ற லக்கினத்தோன் மதியின்வீட்டோன்
நிச்சயமாய் சுக்கிரனின் வகையுமாய்ந்து
ஏர்பெற்ற ருதுபலனை யுரைக்கவேண்டும்
என்னுளுங் கணிதத்தோ ருரைத்தவாரே.

(இ-ள்) சிறப்புற்றோங்கிய ஸ்திரீகளின் ருதுபாவ விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுவதெனில்; இராசிகள் பன்னிரண்டிலும் முதன்மையாகவுடைய ருது லக்கினத்தையும், ருது லக்கினத்திற்கு ஏழாம் ராசியைக்கொண்டும், எவரும் சொல்லப்பட்ட அஷ்டம ஸ்தானத்தைக்கொண்டும், சந்திர லக்கினமான உடல் லக்கினத்தையும் ஆராய்ந்து அவள் கௌரவங்களையும் யோகமுண்டாகும் வகையுங் கூறுவர். மேற்படி ஸ்தானங்களுடன் ருது லக்கினாதிபதியிருக்கும் தன்மையும், சந்திரனிருக்கும் வீட்டுக்குடையோன் தாராதரமும், சுக்கிரனின் வண்மையுங்கொண்டு ருதுபலன் சொல்லவேண்டுமென்பது ருதுநூற்கணித ஆராய்ச்சி செய்பவரின் முக்கிய கருத்தாகும் எ-று.

இச் செய்யுளில் முதன் முதலாம் ருது லக்கினம், ருது லக்கினத்திற்கு ஏழாம்ராசி, ருது லக்கினத்திற்கு அஷ்டமம், சந்திர லக்கினம் இவற்றை ஆராய்ந்து அறியவேண்டுமென்றனர்.

| | |
|---|---|
| ஏனெனில் ருது லக்கினமே | ஜென்மம் |
| 2-ஆம் இடமே | அவள் குடும்பம் |
| 3-ஆம் இடமே | அவளின்பலஉபகாரஸ்தர் |
| 4-ஆம் இடமே | அவளின் சுகம் |
| 5-ஆம் இடமே | அவளின் பிதுர் விஷயம் |

| | |
|---|---|
| 6-ஆம் இடமே | அவளின் வியாதி தைரியம் |
| 7-ஆம் இடமே | அவளின் பர்த்தா |
| 8-ஆம் இடமே | அவளின் மாங்கல்யம் |
| 9-ஆம் இடமே | அவள் புத்திர விஷயம் |
| 10-ஆம் இடமே | அவளின் தொழில் |
| 11-ஆம் இடமே | அவளுக்குண்டாகும் லாபம் |
| 12-ஆம் இடமே | அவளின் கடைசி விஷயமெனக் |

கூறியிருப்பதா லென்க. சிலர் ஸ்திரீ புருஷ ஜனன ஜாதகப்படி 5-ஆம் இடம் புத்திர ஸ்தானமும், 9-ஆம் இடம் பிதுருஸ்தானம் என்றுங் கூறுவாருளர்.

ஆனல் இவ்விரண்டையும் சோதிடபல பாவவிளக்கமாகிய நவநீதம் முதலிய நூற்களில் கூறுது 9-புத்திரத்தானமும் 5-பிதுர்த் தானமும் என்றே கூறியுள்ளார்.

இதனுலேயே மேற்சொன்ன அதிகாரங்களும், லக்கினதிபதி சந்திரலக்கினதிபதி சுக்கிரன் இவர்களையும் ஆராயவேண்டுமென்றனர்.

மற்றும் சாதக அலங்கார நூலுடையார் பெண்கள் சாதகத்தின் முதற் செய்யுளில் கருஉதய லக்கினமும், சசிலக்கினமும் கண்டு வடிவுடன் நிறமும் கருதியிடல் வேண்டும், என்றும், மருவு சப்தம ராசியாலவடன் குணமும் மகிழ் நன்குணமும் தெரிந்து வழுத்தலுமே வேண்டும் என்று கூறினர். அவையாவன ஏழாம் வீட்டாள் அவள் புருஷன் குணமும், அந்த ஜாதகியின் குணமும் தெரியலாம் என்றனர்.

ஆனதால் ருதுபாவம் என்பது ருது லக்கினத்தால் அவள் குணமும், 7-ஆம் பாவத்தால் தனது கணவனையும், 8-ஆம் பாவத்தால் மாங்கல்ய விஷயமும், 9-ஆம் வீட்டால் புத்திரவிஷயங்களையும் கூறுவதே கடமையாகும்.

மற்றுமொரு நூலாசிரியர்

செய்யசனியுங்கருங்கோள் சேயுடனேபுகரும்
சேர்ந்துஅட்டமாதிபனுக்கே விரயம்பெரினும்
உய்யுபுகரிருந்ததற்கு வியதிலேசனியும்
ஊன்றியிருக்கில் விதவையெனஉரைப்பர்மேலும்
துய்யமதிக்கெட்டினிலே சனிராகுகூடித்
தோன்றினும்தோஷமுண்டு சனிசேயுங்கூடில்

பையவைந்துபதினேந்தில் விதவையுமேயாவள்
பார்ப்பவர்கள்சுபராயினு றேழுஆண்டே என்றனர்.

(இ-ள்) சனி-இராகு-செவ்வாய்-சுக்கிரன் இந்நால்வரும் சேர்ந்து ருது லக்கினத்திற்கு அஷ்டமாதிபன் எந்தராசியிலிருந்தால் அந்த ராசிக்கு 12-ஆம் ராசியிலிருக்கினும், சுக்கிரனிருந்த ராசிக்கு விரய ஸ்தானத்தில் சனிமாத்திரம் ஆக்ஷி உச்சங்களால் பலம்பெற்றிருக்கினும், அந்த ஜாதகி விதவையாவாளென்றும், மற்றும் சந்திரனின்ற ராசிக்கு எட்டாமிராசியில் சனி இராகுவும் மேற்படி தோஷமுண்டு. அவை எப்போதெனில், தன் வயது 20-ல் விதவையாகும், மேற் சொன்ன கோட்களை குருபார்க்கில் 42-ம் ஆண்டில் விதவையாவாள் என்றுங் கூறுக எ-று.

இச் செய்யுளால் ருது லக்கினத்திற்கு 8-ஆம் ராசியே மாங்கல்ய ஸ்தானம் என்று கருத்தாகிறதாலும், இத்துடன் சந்திர லக்கினத்திற்கு எட்டாமிராசியையுங்கொண்டு கூறவேண்டியதாகிறது.

1. மற்றும் மாங்கல்யபாவங்களைக் கூறுமிடத்து 8-ஆம் வீட்டோன் சுபனுகவிருந்து ருது லக்கினத்திற்கு கேந்திரம் கோணமென்னு மிராசிகளிலிருக்கில் அவள் தீர்க்கசுமங்கிலியென்றும் விவாகமான வயது 50-க்குமேல் மரிப்பாளென்றும்.

2. ருது லக்கினத்திற்கு 8-ஆம் வீட்டோன் பாவியாகவிருந்து மேற்சொன்ன கேந்திரகோணங்களிலிருக்கினும் வயது தீர்க்கமென்றும், மாங்கல்யவதியாய் உயிரிழப்பாளென்றும் கூறுவர்.

3. ருது லக்கினத்திற்கு 8-ஆம் வீட்டோன் பாவியாக இருந்து மேற்சொன்ன கேந்திரகோணங்களிலிருக்கில் வயது தீர்க்கமென்றும் விதவையாகி மரிப்பாளென்றும்.

4. ருது லக்கினத்திற்கு 8-ஆம் வீட்டோன் பாவியாக இருந்து, 8-ஆம் ஸ்தானத்திற்கேனும், ருது லக்கினத்திற்கேனும் 6-8-12-ல் இருக்கில் மத்தியகால விதவையென்றும் பூரண ஆயுள் உடையவள் என்றும்.

5. ருது லக்கினதிபதி பாவனுக இருந்து 2-11-என்னும் க்ஷேத்திரங்களிலிருக்கில் பாலியத்தில் கஷ்டப்பட்டு மறுபடியும் தனது பர்த்தா சுகத்தையடைவாளென்றும்.

6. எட்டாம் வீட்டோன் ருது லக்கினத்திற்கு 3-ல் நீச்சம் பகையென்னுமவற்ருல் பலமிழந்து, ருது லக்கினத்திற்கு விரயாதிபதி

நோக்க அல்லது விரயத்தானாதிபனுடன் கூடியும், 7-ஆம் வீட்டோன் ஆகூஷி உச்சங்களால் பலம்பெற்று இருப்பாரேயாமானால் அந்த ஜாதகி தன் வாலிபபருவத்தில் மாங்கல்யவதியாய் பலரும் துக்கிக்கும்படி மரணமடைவாளென்று ருதுகால நிக்ஷேபம் என்னும் நூலில் கூறியிருப்பதையுங் காணலாம்.

## கணவன் விஷயம்

கொடியிடையாய்கேள்பூத்த லக்கினத்துக்கேழில்
  குருவிருக்கிலழகுடைய கணவனையேஅடைவள்
நெடியபுகர்நோக்கிடிலோ அதிலுமழகுடையாள்
  நால்வழியேமதிகூடில் சுயத்தினிலேகணவன்
வடிவுடையமாரனென வழுத்துவர்கள்மேலோர்
  வந்தமதிநோக்கிடிலோ தாய்வகையாமென்க
துடியிடையாயிவ்விதமா ஏழவனைக்கொண்டு
  தோற்றுமந்தகணவன்வகை துரிதமதாய்கூறே.

(இ-ள்) ஏ பெண்பாவாய்! நான் சொல்லுவதைக் கவனிப்பாய். என்னவென்றால், ருது லக்கினத்திற்கு ஏழாம்ராசியில் குரு நிற்கில் அவள் மிக்க அழகு பொருந்திய கணவனை அடைவாள். மற்றும் ஷை குருவை சுக்கிரன் நோக்கில் அதிலும் மேலான அழகுடையவனை அடைவாள். ஷை குருவுடன் சந்திரனுங் கூடியிருக்கில் தனது சுயபந்துவிலேயே கணவனை அடைவாள். அவன் எப்படிப்பட்டவனெனில், மன்மதனைப்போன்ற வடிவுடையவனென்றும், மேற்படி குருவை சந்திரன் நோக்கில் தாய்வகையில் கணவனை அடைவாளென்றுங் கூறுக. ஏ பெண்பாவாய்! இவ்விதமாகவே ஏழாம்வீட்டோனைக் கொண்டே கணவன் விஷயங்களைக் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச் செய்யுளில் முக்கியமாய் 7-ஆம் வீட்டோனைக் கொண்டே அவள் கணவன் விஷயங்களைக் கூறவேண்டுமென்று வற்புறுத்திக் கூறியுள்ளார். மற்றும் சில நூலாசிரியரும், தற்கால சோதிட வித்வான்களுங்கூட ஏழாம் வீட்டைக்கொண்டே கணவன் விஷயங்களைக்குறித்து கவனிக்கத்தக்க இடமென்பதை சம்மதித்திருக்கின்றனர். ஆனதால்,

7-ஆம் வீட்டோன் சூரியனாக இருக்கில் அவள் கணவன் சிவந்ததேகி, சூரன், வைராக்கியமுடையவன், வெகு சிரத்தையுடையவன் என்றும்.

சந்திரனாகில் வெண்மை நிறமுடையவன், சாந்தம் பொறுமை யுடையவன், எவருக்கும் அஞ்சுபவன், எல்லோரும் மதிப்பிடத்தக்க வன், பொறுமை இல்லாதவனென்றும்.

செவ்வாயாகில் முன்கோபி, எவருக்கும் பயப்படான், பிறர் சொல்லைக் கேளான், நல்லோர் தீயோர் என்னு மிருவர் நேசமும் உடையவன், நம்பினவர்களை ஆதரிக்கும் தன்மையுடையவன் என்றும்.

புதனாகில் பலவித தந்திரோபாயமறிந்தவன், தமிழ் வல்லவன், வியாபாரி, கறுத்ததேகி, குள்ளன், எவரையும் ஏமாற்றுபவன், சமயத் திற்குத் தகுந்தபடி நடப்பவன், சீமான் என்றும்.

குருவாகில் சாஸ்திரசம்பன்னன், எவருக்கும் தெரிந்தவன், எவ் வகையிலும் உயர்ந்தவன், தராசு நிறைபோன்று எவ்விஷயங்களையும் ஆராய்ந்து சொல்லுபவன், பொன்னிறமாயும் உயர்ந்த கால்களையும் உடையவனென்றும்.

சுக்கிரனாகில் லீலாவிநோதன், பெண்கள் சொற்படி நடப்பவன், பெண்கள்போன்ற நடைநொடிபாவனையை யுடையவன், வெண்ணிற சரீரமுடையவன், பொருள்சேகரிப்பதில் சாமர்த்தியனென்றுங்கூறுக.

சனியாகில் துஷ்டன், சண்டைக்காரன், எவரையும் மதியாதவன், படாடோபமுடையவன், சிலவு செய்பவன், தானே பெரியவன் என் பவன், கறுத்து நீண்ட உருவமுடையவனென்றுங் கூறுவர்.

மற்றும் 7-ஆம் வீட்டோனுடன் கூடியவர் பார்த்தவர் என்னும் இவர்களால் மேற்படி குணாகுணங்களும் செய்கை நிறம் உருவம் முத லியன மாறுபடுமாதலால் மேற்சொன்ன அடையாளங்களைக் கொண்டே ஒத்திட்டு கணவன் விஷயங்களை யறியவேண்டும். மற்றும் தனக்கும் தனது பர்த்தாவுக்குமுள்ள தார்தம்மியங்களை ருது லக்கி னதிக்கும், 7-ஆம் பாவாதி என்னும் இருவருள் எவர் வலியர் எவர் சிறியர் என்பதை யோசித்து மேற்படி சதிபதிகளின் மேன்மை தாழ்மையென்பதை அறியவேண்டும். ஒருவரிலொருவர் வலியரென் பதை கீழ்வரும் விதமாயறிக.

## நவகோட்களில் முக்கியமான கிரகம் சூரியன் ஒருவனே என்பர்

செய்யும்புந்தி தனக்கதிகளு
செவ்வாய்வலிது செவ்வாயில்

வெய்யசனியும் வலிவதனை
விடவேயரசன் மிகவலியன்
துய்யவரசன் தனில்வெள்ளி
வலியனவனிற் சோமன்மிகும்
பையசசிக்குக் கதிர்வலிது
பானுவிற்பாம்பே வலிதே.

என்று **சாதக அலங்கார** நூலுடையார் கூறியபடி புதனில் செவ்வாய் வலியனென்றும், செவ்வாயைவிட சனி பலமுடையவனென்றும், சனியைவிட குரு வலியனென்றும், குருவிலும் சுக்கிரன் வலியனென்றும், சுக்கிரனில் சந்திரன் வலியனென்றும், சந்திரனில் சூரியன் வலியனென்றும், சூரியனைவிட பாம்பே வலியதென்று கூறுக.

ஓர் ருதுஜாதகத்தைக்கொண்டு அவள் புருஷனுக்கு அடங்கியவளா? அல்லது தனக்கு புருஷன் அடங்கியவனா? என்பதை அறிய இச்செய்யுள் திறவுகோல் போன்றதாகும்.

## உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| சனி | | கே | சூ ல அ பு |
| குரு | ருதுராசி | | சு |
| | | | |
| சந் | ரா | | |

இந்த ஜாதகப்படி லக்கினாதிபதி புதனும் 7-ஆம் பாவாதி குருவும் ஆனதால் லக்கினாதிபதி புதனைக்காட்டிலும் குரு பலவான் ஆனதால் இந்த ஜாதகியைக் காட்டிலும் இவளுக்குவருங் கணவன் பலவானாக இருப்பான்.

மேற்படி ஜாதகப்படி லக்கினம் தனுசு ஆகில் லக்கினாதிபதியானவன் குருவும், 7-ஆம் வீட்டோன் புதனுமாகையால் இந்த ஜாதகிக்கு வரும் கணவன், இந்த ஜாதகியின் சொற்படி நடக்க வல்லவனாவான் என்றுங் கூறயிடமுண்டு.

இவ்வாறே மற்றுமுள்ள ஜாதகங்களுக்கு லக்கினாதிபதியால் தன் பலமும், 7-ஆம் வீட்டவனால் கணவன் பலமுமறிந்து எவருக்கு எவர் கீழ்ப்படிந்தவர் என்பதை அறிந்துகொள்ளுக.

மற்றும் கணவன் விஷயங்களைபறிய பர்த்தா காரகனுகிய சுக்கிரன் எந்த ராசியிலிருந்தானே, அந்த ராசிக்குடையவனையும், அவனுடன் சேர்ந்தவன் பார்த்தவன் முதலியவர்களைக்கொண்டும் ஆராய வேண்டுவது அவசியமாகும். எப்படியெனில்,

சுக்கிரன்முன்வீணை கன்னிதனிலிருக்க
சுந்தரனும்லீலையினி லாசையுள்ளான்
நக்கதனுமீனத்தி லிருப்பானுகில்
தனவானும்பெரியோர்கள் நேயன்ஞானி
பக்குவமாய்மதிவீட்டி லிருந்தாலப்போ
பார்க்குணனும்சிவந்தமெய்யன் பலர்க்கும்நேயன்
தக்ககுடம்மகரமெனில் கறுத்ததேகி
தயிரியவான்மூர்க்கனென்றும் தனிவாயோதே.

என்றதாலும், மற்றும்

சொல்லுகின்றமேடந் தேள் தனிலேவெள்ளி
சுகமாகவீற்றிருக்கச் சிவந்ததேகி
வெல்லுமந்தகுணமுடையோன் வீரமுள்ளோன்
விவசாயதொழிலுடையோன் கோபியாவன்
நல்லதுலாம்விடையதனி லாக்ஷியாகில்
நாணிலத்திலவளுக்கு புருஷன் தானும்
வல்லவனும்குணவானும் சீமானென்றும்
வழுத்துவர்காண்பெரியோர்கள் நூல்சார்பாலே.

என்றுங் கூறியதால், சுக்கிரனிருந்த வீட்டைக்கொண்டும் அவள் கணவன் விஷயங்களை அறியலாம்.

இவ்விருவரின் ஒற்றுமையைக் குறித்து கவனிக்கவேண்டுவது யாதெனில், ருது லக்கினுதிபதிக்கு 7-ஆம் வீட்டோன் பகையாயிருக்கில் இவளுக்குவரும் கணவன் இவளை எந்நாளும் பகைத்துக் கொண்டே யிருப்பானென்றும், ருது லக்கினுதிபதிக்கு ஏழாம் வீட்டோன் நட்பாகில் அவனுக்குக் கிடைக்கும் புருஷன் எந்நாளும் நீங்காத அன்பே செலுத்துவானென்றும் சமமாகில் தன்னைப் புருஷன் நேசிப்பதுபோலவே தானும் நேசிப்பாளென்று கூறவேண்டும். விவரம் பின்வருமாறு.

### உறவு சமன் பகையென்பது

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | உறவு | அங்காரகன், குரு |
| சந்திரனுக்கு | உறவு | சூரியன், புதன் |

| | | |
|---|---|---|
| செவ்வாய்க்கு | உறவு | சந்திரன், ரவி, குரு |
| புதனுக்கு | உறவு | சூரியன், சுக்கிரன் |
| குருவுக்கு | உறவு | சூரியன், மதி, செவ்வாய் |
| சுக்கிரனுக்கு | உறவு | சனி, புதன் |
| சனிக்கு | உறவு | புதன், சுக்கிரனும் |

## கிரகபகை

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | பகை | சுக்கிரன், சனி |
| சந்திரனுக்கு | பகை | பகைவரில்லை |
| செவ்வாய்க்கு | பகை | புதன் |
| புதனுக்கு | பகை | சந்திரன் |
| குருவுக்கு | பகை | புதன், சுக்கிரன் |
| சுக்கிரனுக்கு | பகை | சூரியன், சந்திரன் |
| சனிக்கு | பகை | சூரியன், சந்திரன், செவ்வாய் |

## கிரகசமம்

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | சமன் | புதன் |
| சந்திரனுக்கு | சமன் | குஜன், குரு, சுக்கிரன், சனி |
| செவ்வாய்க்கு | சமன் | சனி, சுக்கிரன் |
| புதனுக்கு | சமன் | சனி, செவ்வாய், குரு |
| குருவுக்கு | சமன் | சனி |
| சுக்கிரனுக்கு | சமன் | குஜன், குரு |
| சனிக்கு | சமன் | குரு |

மேற்சொன்ன விதங்களாய் அந்த ருது ஜாதகப்படி ருது லக்கினதிக்கு 7-ஆம் வீட்டோன் உறவு கிரகமா? அல்லது பகை கிரகமா? அல்லது சமகிரகமா? என்பதை யாராய்ந்து அவளுக்குக் கிடைக்கும் புருஷன் சமமானவன், அல்லது பகையானவன், அல்லது சினேகமானவன் என்பதை அறியவேண்டும். அப்படி பகையென்று தெரிந்தால் அந்தப் பகையானது எந்தகாலத்தில் உண்டாகுமென்பதை திசைபுக்தியில் மேற்படி பகையானவன் திசைபுக்தி அந்திரம் வருங் காலம் நேரிடுமென்றும், அதன்பிறகு ருது லக்கினதிக்கு உறவானவன் புக்திவருங்காலமே ஒற்றுமை யுண்டாகுமென்றும், அல்லது ஒற்றுமையே உண்டாகாதென்றும், கிரக ஆராய்ச்சியா லாராய்ந்து அறியவேண்டுவது முக்கியமாகும். இவ்விஷயங்களை உதாரணமாய் கீழ்வரும் சக்கரத்தால் ஆராய்வாம்.

## உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| சனி | பு | சூ கே அ-சு | |
| குரு | அஸ்தம் | | |
| | | | ல |
| | ரா | | சந்தி |

மேற்காட்டிய சக்கரத்தில் லக்கினதியான சூரியனுக்கு 7-ஆம் பாவாதி சனி பகைவனாகும். ஆனதால் இந்த ஜாதகியை இவள் புருஷன் பகைக்கவேண்டியே வரும். அது எக்காலமென்றால், 7-ஆம் பாவாதி புக்தி, அந்திரம், திசைகாலங்களிலென்றே கூறவேண்டும்.

அப்படிப் பகையுண்டானாலும், மறுபடியும் வாழ்க்கை ஒற்றுமை உண்டாவெனில், லக்கினதி தசமகேந்திரம் பெற்ற பலத்தாலும், லக்கினத்தை குரு நோக்குவதாலும், வாழ்க்கை பின்னமாகாது. சில காலங்களில் மாத்திரம். அவையாவன: ஷை சனியின் திசைபுக்தி அந்திரகாலங்களில் சிலசிலுகு உண்டாகும் என்று கூறவேண்டும்.

இவ்வாறே ஒவ்வொரு ருது ஜாதகத்திற்கும் ஆராய்ந்தறிந்தால் ருதுவிஷய காலபலனைச் செவ்வனே அறியலாம். மற்றும் சிலர் மாதம்-வாரம்-திதி-நக்ஷத்திரம்-லக்கினம் முதலியவற்றைக்கொண்டு ஸ்தூல மார்க்கமாய் சொல்லியுள்ள பொதுப்பலனை ஆதாரமாய்க்கொண்டு ருது மாதம் சித்திரையாகில் புருஷனுக்கு தோஷம் என்பதைக்கொண்டு அப் பெண்ணைக்கொள்ள அஞ்சுகின்றனர். சித்திரை மாதத்தின் தோஷத்தாலேயே புருஷனைக் கொன்றுவிடாது. இவற்றுடன் மற்றும் பலபாவங்கள் ஈனப்பட்டாலன்றி ஷை தோஷமுண்டாகாதென்பது சாஸ்திர மேதாவிகளின் உண்மை கருத்தாதலால், ஷை சித்திரை மாதம் ருதுவானவளில் இராசி சக்கரத்தாலும், ஷை ராசி சக்கரத்தைக்கொண்டு பின்வரும் துவாதசபாவ விதியாலும் ஷை புருஷனுக்கு தோஷம் செய்யும் செய்யாதென்பதை நிலைகூறவேண்டுவது அவசியமாகும்.

எப்படியெனில்: சோதிட சாஸ்திரத்திற்கு 144-அங்கங்கள் என்று சிலரும், 360-அங்கங்களென்று சிலரும் கூறியதுடன், ஓர்

விஷயத்தை நிலைபடுத்த ஓர்வித காரணத்தைக்கொண்டு சொல்லுவது அபலம் என்று கூறியதைக் கவனிக்கவேண்டும்.

நம் முன்னோர் மாதம்-வாரம் - திதி - நக்ஷத்திரங்கள் லக்கினம் முதலியவைகளுக்குச் சொல்லிய நன்மை தீமைகளை ஆதாரமாய் வைத்து பின்வரும் பாவ விசேஷத்தால் நிலைகூறவேண்டுவது அவசியமாகும். உதாரணமாக கீழ்க்கண்ட இராசி சக்கரத்தை கவனியுங்கள்.

இவை வெகுதான்ய வருஷம் சித்திரை மாதம் 6-ஆம் தேதியில் அனுஷம் கூடிய காலை 6-30-க்கு ருதுவானதாகும். இதற்கு பாவ விசேஷம் கவனியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சனி<br>பு | ல<br>சூ-சு | அ<br>கே | |
| குரு | இராசி | | |
| | | | |
| | சந்<br>ரா | | |

ஷை ராசிசக்கரத்திலுள்ள தோஷங்களிற் சில

1. மாததோஷம் எனெனில் சித்திரை யென்பதாலாகும்.

2. லக்கினாதியான குஜன் பாவகிரகங்கள் ஒன்றுடன்கூடியும், பாவர்களான ராகுவாலும் சனியாலும் பார்க்கப்பட்டனர்.

3. லக்கினத்திருந்தவர்கள் இருவரில் பாவரான சூரியன் ஒருவன் இதனால் சிற்சிலதோஷம் கூறலாம்.

எவையெனில் லக்கினத்தில் சூரியனிருப்பதால் சிற்சில குணங்கள் தீமையுடையதா யிருக்கும். லக்கினாதியுடன் கேதுகூடி இரண்டில் நின்றதால் அந்த ஜாதகியின் குடும்பம் சிலகாலங்களில் க்ஷீணதசை யடையும்.

4. மாங்கல்ய ஸ்தானமான அட்டமத்தில் ராகுநின்று லக்கினாதிபதியை நோக்குவதால் செவ்வாயைவிட ராகு வலியன் என்னும் கருத்தையொட்டி. மாங்கல்ய மற்பம் என்றும், தசமலாபாதியான சனி விரயம்பெற்று நோக்குவதால் சிலவும் கஷ்டமும் உடையவளென்று கூறலாம்.

## ஷ சக்கரத்திலுள்ள நன்மைகளில் சில

1. குடும்பம் பர்த்தா என்னும் 2-7-க் குடையவன் குடும்பத்திற்கு விரயமாயினும், 7-ஆம் வீட்டுக்குடையவன் 7-க்கு 7-ல் நின்று 7-ஐ, நோக்குவதால் இவளுக்கு கிடைக்கும் புருஷன் நற்குணம் நற்செய்கை முதலிய உள்ளவனும் தீர்க்காயுளுடையவனென்றுங் கூறயிடமுண்டு.

2. சுகாதியானமதி லக்கினத்திற்கு அட்டமம் பெற்றதால் சுகயீனமாயினும், 4-க்கு கோணம்பெற்றதால் உடனே சுகம் சௌக்கியமும் உண்டாகும்.

3. லக்கினாதியும் மாங்கல்யஸ்தானாதியென்னும் அட்டமாதிபுமான குஜன் கேதுடன் கூடினானபினும் அட்டமத்தை நோக்குவதால் மாங்கல்ய பலமுண்டு.

4. 9-ஆம் வீட்டோனும் புத்திரகாரகனுமான குரு 9-க்கு 3-ல் நின்றாலும் ருது லக்கினத்திற்கு 11-ம், சந்திரனுக்கு கேந்திரமும் பெற்றதால் புத்திரபலம் உண்டு.

இவற்றுள் முன்சொன்ன தோஷங்களாகச் சொல்லிய 3-ஆம் அத்தியாயத்தில் அற்பமாங்கல்யமும், சுபத்துவத்தில் மூன்றும் அத்தியாயத்தில் மாங்கல்யபலமும் என்று கூறினமையால் ஏறக்குறைய விவாகமான 20-வருடங்களுக்கு பின்பே அமங்கலியாவாள் என்று பொதுப்பட கூறலாம்.

இவ்வாறான ஆராய்ச்சியாலன்றி முன் சொன்னபடி பொதுவாகக் கூறிய விஷயங்களால் எவ்விதத்தைக்கொண்டும் நிச்சயபலனறிவது அசாத்யமேயாகும். பொதுவாய் ஜெனனஜாதகம் அல்லது ருதுஜாதகம் என்னு மிரண்டிற்கும் ஜாதகமென்பது என்ன என்பதை கீரனார் நடராஜரென்பவர்,

குறித்திடுசாதகமென்ப தவரவர்தம்வினையின்
குணங்களறிந்தயன்விதித்த கொள்கையுளதன்றோ
மறித்துமவரவர்தமக்கு வரும்பலபாவகத்தின்
வகையறிந்துபெரியோர்கள் வழுத்தியசொல்லதனை
பிறித்தறிந்துவரும்சுபமென் றுளமகிழ்ச்சிபொங்க

என்று கூறியதால் அறியலாம். அவையாவன: ஜாதகமென்பது அவரவர் வினைக்கேற்றவாறு பிரம்மதேவனால் சிருஷ்டிக்கப்பெற்ற விஷயங்களைப் பெரியோர்களால் பலபாவம் என்னும் பெயருடன்

ஜோதிட நூலென்னும் பெயர்வைத்து இயற்றியதால் ஷ்டி பலபாவங்களை ஆராய்ந்து சுகமுண்டாகும் காலத்தையறிந்து சந்தோஷிக்க வேண்டும் என்றதாம்.

இதனால் எவ்விஷயத்தையும் பலபாவ நிர்ணயத்தாலேயே அறியலாமென்றும், வேறுவிதத்தால் ஸ்தூலமார்க்கமாய் அறியலாமேயன்றி கட்டாயபலனைத் தெரிவது அசாத்தியமென்றே கூறவேண்டுவது அவசியம்.

இங்கு பாவவிஷயங்களைக் கூறுவாம்.

## 1-ஆம் பாவம் ஜாதகி விஷயம்

கடவுள் வணக்கம்

சீர்பெற்றமடவார்கள் பலபாவந்தன்னுள்
   சிரோங்கும்முதற்பாவந் தனையெடுத்துஉரைக்க
பேர்பெற்றவிநாயகரே முன்குருவாய்வந்து
   பிரபலமாயிந்நூலை முடித்தருளல்வேண்டும்
நேர்பெற்றகலைவாணி யென்னுவிலிருந்து
   நினைத்தபடிமுடியும்வண்ணம் கிருபைசெயல்வேண்டும்
வாறுற்றகொங்கைவள்ளி மணவாளனிருந்து
   மறந்ததெலாமெனக்குரைக்க வணங்கிநின்றேனடியேன்.

கண்டபஞ்சபூதமதாய் குருவுமான
   காரணனார்பதம்போற்றி கருத்திலெண்ணி
விண்டருதுநூலினுக்கு பலனைச்சொல்வேன்
   விரவியதோர்லக்கினத்தோனெட்டாகி
சண்டையிடுங்கோனுடனே கூடினாலும்
   சரியற்றபாவருடன் சேர்ந்திட்டாலும்
மிண்டியதோர்பாவத்தில் கொடிதானாலும்
   மேலாகாதவள்விஷயந் துன்பந்தானே.

(இ-ள்) பஞ்சபூதங்களுக்குங் காரண கர்த்தாவாகியும் என் குருவுக்கு குருவுமான ஸ்ரீ சுப்பிரமண்யக் கடவுளின் திருப்பாத கமலங்களைப் பலதரம் துதித்து நீங்காது மனதில் தியானித்து இதுவரையில் சொல்லிவந்த ருதுநூல் என்னும்பலனைச் சொல்லுவேன். எப்படியெனில், மேலேசொன்ன ருது லக்கினாதிபதி ருது லக்கினத்திற்கு ஆறு எட்டு என்னும் க்ஷேத்திரங்களிலிருந்து தனது பகைக்கோட்களுடன் கூடியிருந்தாலும், அல்லது குரூர கிரகங்களுடன் கூடியிருந்தாலும் அல்லது கொடியஸ்தானமான முன்சொன்ன 6-8-போக, 3-12

என்னும் இடங்களிலிருந்தாலும் அவள் பலன் மேன்மைபடாது துன்பமே உண்டாகும் எ-று.

(வி-ரை) இவை எவ்வித ருது ஜாதகங்களுக்கும் பொதுவாயுள்ள விஷயமாகும். எப்படியெனில், ருது லக்கினதிபதி ருது ராசிக்கு 6-8-லிருந்து தனது பகைகோட்களுடன் கூடியிருக்கினும் அல்லது கொடிய கோட்களான சனி-ராகு-கேது இவர்களுடன் கூடியிருந்தாலும் அவள் விஷயபாவம் நன்றல்லவென்றும், ஷை கோட்கள் நின்ற க்ஷேத்திரம் கொடியோர் க்ஷேத்திரமாயினும், அவள் விஷயம் நன்றல்ல என்றும் கூறியுள்ளார்.

ஓர் ஸ்திரீ ஜாதகத்திற்கோ அல்லது புருஷ ஜாதகத்திற்கோ பொதுப்பலனை யோசிக்குமிடத்து லக்கினதியோ, அல்லது வேறு எந்த ஸ்தானதிபதியும் கொடியஸ்தானம் எனப் பெயர்பெற்ற 6-8-12-ல் நிற்கினும் ஷை 6-8-12-க் குடையவர் திசைபுக்தியும் நல்ல பலனைத்தராது கொடிய பலனையே தருவான் என்று கண்டித்துக் கூறிய சாதகசிந்தாமணி நூலுடையார் வாக்கியப்படியே அனுபவ வாயிலாகவும், தற்காலம் நடந்துவருவதை யுத்தேசிக்கின், ஓர் ருதுபாவ விஷயமாய் யோசிக்குமிடத்து ஷை ருதுபாவாதி யென்னும் லக்கினதி 6-8-12-ல் நிற்கில் அவள் பொதுவிஷயம் எக்கெதியாகுமென்பதை வாசகர்கள் நன்கு கவனிப்பாராக. இவ்வாறு பண்டைகாலத்து சாஸ்திர மேதாவிகளாலும், தற்காலமுள்ள பிரபல சாஸ்திர நிபுணர்களாலும் ஆராய்ந்தும் தானே நேரிலறிந்துங் கூறிய பாவவிளக்கத்தைவிட்டு மாததோஷம், வாரதோஷம், நக்ஷத்திரதோஷம் என்னும் பொதுவாய் கூறியநூலை ஆதரித்தும் ஷை பொதுநூலில் கூறிய சாந்தி பரிகாரங்களையும் செய்து எவ்வித சுகபலனையு மடையாது பண்டைய சாஸ்திரங்களுக்குப் பழியும், ஜாதகம் கேட்போருக்கு பணச்சிலவு மனக்கஷ்டம் முதலியன தேடிக்கொள்வது கல்வி செழித்துள்ள இந்நாட்டின் அறியாமைக்கு வருந்துகிறேன்.

ருது லக்கினதிபதி குஜனகவிருந்து. அவையாவன மேடம் விருச்சிகம் ருது ஜென்மராசியாயிருந்து ஷை செவ்வாய் 1-4-7-10-என்னும் க்ஷேத்திரங்களில் சூரியன் குரு என்னு மிவ்விருவருடன் கூடியிருக்கில் அந்த ஜாதகியின் வாழ்க்கை வெகு பிரபல்யமாயும் எந்நாளும் நீங்கப்படாத கல்வி செல்வம் முதலியன உடையவளாய்த் தன் வாழ்நாட்களில் தன் பர்த்தாவின் குடும்பத்தை கௌரவிக்குந் தன்மையுடையவளாவாள் என்பது ருது சூத்திரக் கருத்தாகும்.

## குருசுக்கிரர் இயல்பு

பலரும்புகழ்குருசுக்கிரர் நவமாகியதலமும்
பகலோன்மதியைந்தாகியும் பார்மேடமுதித்தோர்
அலரும்பலமடவார்களை யரசன்முதல்யாரும்
அழகென்றுமதித்தேகுவர் திணும்பலகேளும்
சிலரும்புகழ்நவமாமணி சேரச்செகமதிலே
சீர்பெற்றிடவாழ்வள் திரமாமாளிகைதனிலே
மலரும்மதிராசிக்கொரு நாலில்குருவுறவே
மதியோடணைவோரும்புகழ் மாதாகுவள்தானே.

(இ-ள்) மேடராசியில் ருதுவாகியும் யாவரும் போற்றத்தகுந்த குருசுக்கிரர் இவ்விருவருங்கூடி நவம் என்னும் ஒன்பதாம் ராசியிலிருக்கவும், சூரியன் சந்திரன் என்னும் இவ்விருவரும் மேடராசிக்கு ஐந்தாம் ராசியிலுமிருக்க, ருதுவாகிய பெண்களின் பலனைச் சோதிக்குமிடத்து ஷை பெண்ணை அரசர் முதலிய யாவர்களும் மிக்க அழகுடையவளென்று நன்கு மதிக்கப்படுவாள் என்றும். மற்றுமென்னவெனில், சிலர் புகழத்தகுந்த நவரத்தின முதலியவைகளைச் சேர்க்கையுடையவளாய் நன்கு மதிப்பிடத்தகுந்த மாடகூடமாளிகை யென்னுமிடங்களில் சிறப்புபெற வாழ்ந்திருப்பாள். ஷை ருதுகாலமாகிய சந்திரலக்கினத்திற்கு நான்காமிராசியில் குருவிருப்பானேயானால் ஷை மாதானவள் நல்ல புத்திசாலியென்றும், யாவரும் நன்கு மதிப்பிடத் தகுந்தவள் என்றும் கூறுவர் எ-று.

(வி-ரை) இச் செய்யுளில் மேடலக்கினத்தில் ருதுவாகி குரு சுக்கிரன் ஒன்பதாம் ராசியிலிருக்கில் அவள் அழகுடையவளென்றும், நன்கு மதிப்பிடத்தக்கவளென்றுங் கூறியுள்ளார்.

ஏனெனில் புருஷ ஜாதகத்திற்கு பாக்கியஸ்தானமென்றும்,ஸ்திரீ ருது ஜாதகத்திற்கு புத்திரஸ்தானமென்றும் சொல்லத்தகுந்த ஒன்பதாம் ராசியதிபன் மேடராசிக்கு குருவாதலாலும், ஷை குரு ஆக்ஷி பெறுவதுடன் மேடராசிக்கு 2-7-ஆம் வீட்டோனன வெள்ளியும் சேர்ந்தமையால் ஷை ஜாதகியை சுக்கிரன் கூடியமையால் அழகுடையவளென்றும், குரு சேர்ந்தமையால் யாவரும் மதிப்பிடத்தக்கவளென்று குறிப்பிடவேண்டியதாயிற்று.

பொதுவாக புருஷ ஜாதகத்திற்கு புருஷ லக்கினத்தை சுக்கிரன் நோக்கில் மன்மதனுக்கொப்பானவன் என்று கூறுவதுபோல ருது

ஜாதகத்தை சுக்கிரன் பார்க்கினும் சேரினும் அல்லது லக்கினத்தை நோக்கும் வேறு கோட்களுடன் கூடியிருக்கில் ஷ்ை ஜாதகியை ரதிக்கு ஒப்பானவள் என்று கூறுவதற்கு இடமுண்டு.

ஆகையினலேயே மேற்சொன்ன மேடராசியை 9-ல் நின்ற குரு, லக்கினத்தை நோக்குவதாலும் ஷ்ை குருவுடன் சுக்கிரனும் கூடி யிருப்பதாலும் அந்த ஜாதகியை ரதிதேவிக்கொப்பானவள் என்னும் கருத்தை ஒட்டியே அரசர்களும் மதிப்பிடத்தக்கவள் எனக் கூறி யுள்ளார்.

மற்றும் சந்திரலக்கினத்திற்கு நான்காமிராசியில் குரு நிற்கில் அவள் மகா புத்திசாலியென்றும் அனைவரும் புகழத்தகுந்தவள் என்றுங் கூறியுள்ளார்.

புத்திக்குக் காரகன் குருவாதலாலும், உடலாதிபதி சந்திரனுகை யாலும், ஷ்ை சந்திரகேந்திரத்தில் குருவும், குரு கேந்திரத்தில் சந் திரனுமிருக்கில் அவள் புத்திசாலியென்பது அனைவரும் மறுக்கத் தக்கதல்ல.

மற்றுமொரு ருதுநூலாசிரியர்.

மதிக்கிரண்டிற்சேய்நிற்கில் வாயோட்டக்காரி
மால்நிற்கில்பொறுமையுள்ளாள் ரவிநிற்கில்வைரி
துதிக்குமந்தகுருநிற்கில் மந்திரியைப்போன்று
தூயவார்த்தைகள்சொல்வாள் சுக்கிரனேநிற்கில்
சதிக்கின்பவார்த்தைசொல்லி தன்மையுளாளாகி
தாரணியில்வாழ்ந்திடுவள் சனிநிற்கில்கோபி
வதித்ததொருபாம்பிருக்கில் பொய்சொல்வோளாகி
வாழ்ந்திடுவாள்நூல்முறையின் மர்மமிதுவன்றே.

(இ - ள்) சந்திரனிருந்த ராசிக்கு இரண்டில் செவ்வாய் நிற்கில் வாயாடியென்றும், புதன் நிற்கில் வெகு பொறுமையுடை யவள், சூரியன் நிற்கில் வைராக்கிய வார்த்தையுடையவள், குரு நிற்கில் மந்திரியைப்போன்று தந்திரமொழி சொல்லுவள், சுக்கிரன் நிற்கில் தனது புருஷனுக்கு நல்ல இன்பமாகிய வார்த்தைகளைப் பல உரைத்து மிக்க பிரசித்திபெற வாழ்ந்திருப்பவளென்றும், சனி ஷ்ை ருதுராசிக்கு இரண்டாமிராசியிலிருக்க மிக்க கோபமுடையவள் என்றும் ஷ்ை சந்திரனுக்கு இரண்டாமிராசியில் இராகு கேதுக்களில்

ஒருவரிருக்க பொய் சொல்லுபவளாயும் வாழ்வாளென்று சாஸ்திர நூலின் முறைப்படி கூறியுள்ளார் எ-று.

(வி-ரை) இச் செய்யுளால் சந்திரனுக்கு இரண்டாம் வீட்டைக் கொண்டே அந்த ஜாதகியின் அழகைச் சொல்லவேண்டுவது அவசியமென்று தெரிகிறது. ஏனெனில், சந்திரன் உடலாதிபதியாதலாலும் ஷி சந்திரனுக்கு இரண்டாம் வீட்டை உடல் ஸ்தானம் என்னும் கருத்தைக்கொண்டதாகும். மற்றும் இரண்டாமிடமென்பது வாக்கு ஸ்தானமாதலாலும், வாக்கு ஸ்தானத்தைக்கொண்டு அவன் வாக்கின் தன்மையை உரைக்கவேண்டும் என்பதே கருத்தாகும்.

இன்னும் இதன் விஷயங்களைப் பின்வரும் 2-ஆம் பாவகத்தில் காணலாம்.

உண்டாகியவிடையுந் துலையதிலேருதுவாகி
உயரும்புகர்மதியும் புதனுடனேநவமேற
நண்டாகியகடகம்அதில் நற்கோள்குருவுறவும்
நலமுள்ளவள்கற்பானவள் நாடோறுமதிக்க
பண்டாகியபொருளும் சிலபணியும்உடையவளாய்
பாலர்பலவுடனேயவள் பார்மீதிருந்திடுவள்
கொண்டோன்றனைவெகுவாய் பலவகையும்சுகமெய்தி
குலவும்பலதலயாத்திரை கூடித்திரிந்திடுவள்.

(இ-ள்) இடபம் துலாம் என்னும் இரண்டு லக்கினங்களிலொன்றில் ருதுவாகி சந்திரன் சுக்கிரன் புதன் இம்மூவரும் பாக்கியத்திலும் குரு மூன்றுமிடமான கடகத்திலும், அல்லது துலாராசிக்கு 10-ஆம் இடத்திலுமிருக்கில் அவள் மிகவும் நன்மை பொருந்தியவளென்றும், கற்புடையவளென்றும், உலகின்கண்ணுள்ள அனைவரும் நன்கு மதிக்க வாழ்ந்திருப்பாளென்றும், பழைய பொருளுடையவளும், அணிபணி முதலிய ஆபரணங்களை யுடையவளும், அனேக புத்திரசம்பத்துடன் இப்பூமியின்கண் வாழ்வதுடன் தனது கணவனை வெகுவாய் பூசிப்பதும், பலவித சுகங்களைக் கொடுப்பதுடன் தன் கணவனுடன் ஸ்தலயாத்திரையும் செய்துவருவாள் என்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச் செய்யுளில் ரிடபம்-துலாம் இவற்றில் ருதுவாகி புதன்-சுக்கிரன்-சந்திரன் இவர்கள் 9-லும், கடகத்தில் குருவுமிருக்கில் நல்லவளென்றும், கற்பு-புத்திரர்-செல்வம் ஸ்தலயாத்திரை முதலியவைகளை யுடையவளென்றுங் கூறியுள்ளார்.

இவை இடபம் துலாம் என்னும் ராசிக்குள்ள மருத்துவமாகும். எப்படியெனில், இடபத்தில் ருதுவாகில் சுக்ரன் 1-6-க்குடையவனும், புதன் 2-5-க் குடையவனும், சந்திரன் 3-க் குடையவனுமானதின் நிமித்தம் லக்கினாதி கோணம்பெறின் யோகமுடையவனும், 2-5-ஆம் அதிபதி புதனாகி கோணம்பெற்றதால் புத்திரசம்பத்துடையவளென்றும், போகஸ்தானாதிபதி சந்திரன் கோணம்பெற்றதாலும், 8-ல் குரு நிற்பதாலும் கற்புடையவளென்றும் கருத்தையொட்டி கூறியதாகும். இவை சாஸ்திர சம்மதமேயாகும்.

மற்றும் பல நூலாசிரியர்கள்

மூன்றிடத்தோன்சேய்பாம்பு கூடிநிற்கில்
முழுகபடிசோரஸ்திரீ சனியுங்கூடில்
ஆன்றவர்கள்கருத்துபடி கீழ்ச்சாதியாரை
அணுகிடுவாள்இன்னமொன்று யியம்பக்கேளு
தோன்றுமந்தமூன்றிடத்தோன் சனியும்சேயும்
தோற்றமொடுநிற்கபொன்னன் நோக்குவானேல்
ஈன்றபிதாதாய்புருஷ னறியாவண்ணம்
இவள்போவாள்சோரமென இயம்பலாமே

என்றுங் கூறியுள்ளார்.

பொதுவாய் 1-3-ஆம் வீட்டுக்குடையவர்கள் ஷை சனி-ராகு-செவ்வாய்-கேது இவர்களுடன்கூடி எந்த க்ஷேத்திரத்திலிருந்தாலும் ஷை கோட்களை சூரியன்-சந்திரன் - புதன் - குரு - சுக்கிரன் இவர்களுடன் சேராமலும் பாராமலுமிருந்தால் அவள் விஷயம் சந்தேக விஷயமென்றே கருத சாஸ்திரநூல் இடந்தரும்.

மற்றும் மிதுனம் கன்னியென்னும் ராசியில் ருதுவாகி மேற்படி லக்கினாதி புதன் கேந்திரகோணங்களிலிருக்கினும், கேந்திரகோணங்களிலுள்ள சுபகோட்கள் பார்க்கினும் அவள் மிகு மேன்மையும், சௌக்கியமும், மாங்கல்யவதியாயும் உயிரிழப்பவள்.

மேற்படி புதன் கேந்திரகோணங்களி ளல்லாது வேறு 6-8-3-12 என்னும் க்ஷேத்திரங்களிலிருந்தால் பலவகைத் துன்பத்துடன் இன்பம் கலந்தவளும், சிலகாலம் மனோவேதனையும், சிலகாலம் மனோ சுகமும் உடையவள்.

2-11 என்னும் க்ஷேத்திரங்களில் எவ்விதமான கோட்களுடன் கூடியிருந்தாலும், தனது விவாக ஆரம்பத்திலும், தன் அந்தியகாலத்திலும், யோகமேயல்லது மத்திபவயதில் துன்பமுருபவள்.

கடகம் அல்லது சிங்கம் என்னுமிராசியில் ருதுவாகி ஷை லக்கினதிபதி சந்திரனுகியும், வளர்பிறையை யுடையவனுகவிருந்து ஷை சந்திரன் கேந்திரகோணங்களிலிருக்கில் அவள் விஷயத்தை மகா பார்வதாதேவிக்கு ஒப்பிடலாம்.

மேற்படி சந்திரனே தேய்பிறையாயிருந்து ஷை கோணங்களிலேயே இருந்தால் நன்மை தீமை இரண்டையும் தனது திசைபுக்திக்குத் தகுந்தபடியே அநுபவிப்பாள்.

மேற்படி சந்திரன் க்ஷீணனுகி கேந்திரங்களிலிருக்கில் அவளின் விஷயம் ஆதிசேஷனே வர்ணிக்கவேண்டும்.

க்ஷீண சந்திரனுகி கோணங்களிலிருக்கில் இன்பம் துன்பம் என்னும் இரண்டையுங்கலந்து அனுபவிப்பாள்.

2-11-ல் இருக்கில் முற்கால யோகமும் மற்றும் அந்தியகால யோகமும் உண்டென்றாலும் மத்தியில் கொஞ்சம் கஷ்டமுடையவள்.

மேற்படி சந்திரன் 3-6-8-12-ல் நிற்கில் க்ஷீண சந்திரனுபின் கால்பலனும் சுக்கிலபக்ஷ சந்திரனுபின் விசேஷ கொடியபலனும் உண்டாகும்.

மேற்படி ராசிக்குடையோன் சூரியனுகவிருந்து அவையாவன: சிங்கராசியில் ருதுவாகி மேற்படி சூரியன் கேந்திரங்களிலிருக்கில் அரசனைப்போன்றவள்.

மேற்படி சூரியனே கோணங்களிலிருக்கில் அமைச்சனைப்போன்றவள், அரசர்களால் மெச்சத்தகுந்தவளென்று பொதுவாய்க்கூறலாம்.

மேற்படி சூரியன் ருது லக்கினதிபதியாகவிருந்து 6-8-12-ல் இருக்கில் வியாதியில்லாதவளும், தைரியமுடையவள், அமங்கிலி, வீண் செலவு செய்பவளென்று பொதுவாய்க் கூறலாம்.

2-11-ல் நிற்கில் நன்மையும் தீமையும் அடுத்து அடுத்து உண்டாகும்.

மற்றவை சமம் அல்லது அற்பமென்று கூற சாஸ்திரங்களில் இடமுண்டு.

ருதுலக்கினம் தனுசு மீனம் என்னும் இவ்விரண்டினுள் ஒன்ருக இருந்து மேற்படி லக்கினதியான குரு, கோணம் என்னும் 1-5-9-ல் நிற்கில் அவள் பிராம்மணனென்னும் பிரம்மத்தைக்கண்ட புருஷனேடு வாழ்க்கைப்படுவாள்.

கேந்திரங்களி லிருக்கில், சைவாகமபுராண சாஸ்திர யிச்சையும், சைவாகமமுடையவர் சேர்க்கையும், இன்பதுன்பம் என்னும் இரண்டையும் கலந்து அனுபவிப்பவளும் ஆவாள்.

3-6-8-12-ல் நிற்கில் அவள் எல்லா கலைகளையும் படித்துணர்ந்தவளாயினும், அவள் யோகபாவ விஷயங்கள் சீர்குன்றி நிற்கும்.

மேற்படி குரு 2-11-ல் நிற்கில் சுகம் துக்கம் என்பவைகளைப் பொருட்படுத்தாது எல்லாவற்றையும் ஒன்றாகப் பாவிப்பாள், கடவுள் பக்தியுடையவள்.

மகரம் கும்பம் என்னும் ராசிகளில் ருதுவாவது அவ்வளவு சிலாக்கியமானதல்ல. மேற்படி லக்கினத்தோற்கு கிரகங்கள் எவ்விதமான நற்க்ஷேத்திரம் நற்பலம் நல்லோர் பார்வை முதலியன இருந்தாலும், அவை அவ்வளவு மேலான ஜாதகமல்லவென்றும், மேற்படி லக்கினாதிபதி உச்சம்பெற்றும், அல்லது மேற்படி லக்கினங்களிலொன்றில் ருதுவாகி, அந்த லக்கினத்தை உச்சம்பெற்ற சுபகோட்களும் நோக்கில் அந்த ஜாதகி ராஜரீகம் செய்வாள் என்பது சாஸ்திரங்களின் கருத்தாகும் என்றுங்கொள்க.

இவ்வாறு பற்பல நூற்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்யும்போதுள்ள சுருக்க விஷயங்களை இங்கு ஆராய்வோம்.

1. லக்கினாதிபதி சுபனாகவிருந்து லக்கினம் 5-9 என்னும் க்ஷேத்திரங்களில் ஆக்ஷி உச்சமாவது, அந்த ஜாதகியின் பூர்வபுண்ய வசமேயாகும். அப்படிப்பட்டவர்கள் கற்பு-செல்வம்-புத்ரர் என்பவை குறைவின்றி தீர்க்க ஆயுளும் சுமங்கிலியும் ஆவார்களென்பது சாஸ்திரங்களின் முக்கிய கொள்கை.

2. மேற்படி லக்கினாதிபதியே பாவனாக இருந்தாலும் மேற்சொன்ன 1-5-9-ல் இருந்தாலும் மேற்சொன்ன சுபத்துவம் குறைவுபடாது. ஆனாலும் யோகம் புத்திரர் முதலியவைகள் சிற்சில காலங்களில் ஏற்றத்தாழ்வாயிருக்கும்.

3. ருது லக்கினாதிபதி மேற்படி கேந்திரங்களிலோ, கோணங்களிலோ யிருந்தாலும், மேற்படி லக்கினாதி தனது பகைவருடன் கூடினாலும் சிற்சில காலங்களில் புத்திர நட்டம், யோகபங்கம் முதலிய உண்டு.

4. மேற்படி ருதுலக்கினாதிபதி எந்த கிரகமாயினும் பகை நீச்சம் முதலியவைகள் பெறில் அவர்கள் நின்ற ஸ்தானத்திற்குத்

தருந்தபடி கால்பலன்-அரைபலன்-முக்கால்பலன்-முழுப்பலன் - ஒன்றேகால்பலன் என்பதைக் கொடுக்கும்.

இவை புருஷ ஜாதகத்திற்கும், ஸ்திரீ ஜாதகத்திற்கும், ருது ஜாதகத்திற்கும் ஒன்றேயாகும்.

சிலர் "கெட்டவன் கெட்டானுகில் கிட்டுமே ராஜயோகம்" என்னும் பொது செய்யுள்களைச் சொல்லி, கேட்போரை பிற்காலத்தில் துன்பத்திற்கு ஆளாக்குவதை வாசகர்கள் கவனிப்பாராக.

## இரண்டாம்பாவம்

இரண்டாம் இடம் என்பது வாக்கு-நேத்ரம்-குடும்பம்-தனம்-வித்தை. என்னும் முக்கிய இடமாகும்.

இரண்டாம் வீட்டைக்கொண்டு அவள் குடும்ப விஷயமும், அவளின் வாக்கு நாணயங்களையும், வித்தை சாதுரியத்தையும், தன்மை முதலியவற்றைக் கூறலாம். எப்படியெனில்,

2-ஆம் வீட்டோன் இரண்டாம் ராசிக்கு கேந்திரம் கோணம் பெறுவது விசேஷபலம். 2-11 என்னும் ஸ்தானம் பெறுவது அரைபலம். மற்றும் 3-6-8-12-ல் இருப்பது கால்பலம் அரைக்கால் பலமுமேயாகும்.

வாருலவுமுலையாய்கேள் இரண்டாம்வீட்டோன்
மன்னவனுய்கோணமதில் கொடியோர்இன்றி
சீருலவுசுபகோளின் பார்வைபெற்ருல்
சிறப்பானவாழ்வுண்டு செல்வமுண்டு
பேருலவுபுத்திரரும் மெத்தவுண்டு
பேதமுளபாவருடன் சேர்ந்தும்பார்த்தும்
வேறுபெரும்சிலகாலம் வாழ்க்கையென்றும்
விருதாப்பியகாலமதில் விதவையாமே.

(இ-ள்) ருது லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டுக்குடைய கிரகம் குருவாக இருந்து, மேற்படி குரு 5-9 என்னும் ஸ்தானங்களில் கொடிய கோட்களுடன் சேராது சுபகோட்களின் பார்வையும் பெற்றிருந்தால் மேற்படி பெண்ணுனவள் சிறப்பான வாழ்க்கையே நடத்துவாளென்றும், விசேஷ செல்வங்களையுடையவளென்றும், அனேக புத்திரர்களை யுடையவளென்றுங் கூறுக. மேற்படி குரு பாவகோட்களுடன் சேர்ந்தோ அல்லது பார்த்தோ நிற்கில் அவளின் குடும்ப

வாழ்க்கையானது சிற்சில காலங்களில் வேறுபடும் என்றும் தன் விருதாப்பிய காலத்திலேயே விதவையாவாளென்றுங் கூறுக எ-று.

மற்றும் ருதுபாவ விளக்கம் என்னும் நூலிலிருந்து சிலவற்றை இங்கே விளக்குவோம்.

1. ருதுபாவத்திற்கு இரண்டாம் வீட்டுக்குடையவன் ஜென்ம லக்கினத்திற்கு கேந்திரகோணம் என்னுமிவற்றிலிருக்கில் அந்த ஜாதகியின் பர்த்தா குடும்பமானது நாளுக்குநாள் சந்திரகலை வளருவதுபோல் வளர்ந்து தனக்கும், தனது பர்த்தாவுக்கும், அந்த குடும்பத்திற்கும் யோகமுண்டாகும். பர்த்தாவின் குடும்பத்தவரும் இவளை பிரமாதமாகப் பேசுவார்.

2. இரண்டாம்ராசி யதிபதி பாவனுக இருந்து இரண்டாம் வீட்டிற்கு கேந்திரகோணம் என்னுமிவற்றிலிருந்து ருதுலக்கினத்திற்கு 5-9-ஆம் வீட்டதிபர் நோக்கில் இவள் குடும்பமே செழித்திருக்கும். இவள் பர்த்தாவின் சகோதராள் பந்துக்கள் என்னும் இவர்கள் இவளை விட செல்வத்திலும், கௌரவத்திலும் குறைந்தே காணப்படுவார்கள்.

3. ருது லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டோன் 8-ஆம் வீட்டோனுடன்கூடி, இரண்டாம் ராசிக்கு 2-11-ஆம் ராசியிலும், சந்திரனுக்கு 5-9-ஆம் ராசியிலும் நிற்க, அந்த ஜாதகி தன் பர்த்தா குடும்பத்தவரை மதியாது, தன் குடும்பத்தை பலரும் மதிக்கும்படியான நிலையில் நடத்துவாள்.

4. ருது பாவாதிபதி 7-8-ஆம் வீட்டில் ஒருவருடனும் கூடி இரண்டாம் ராசிக்கு 6-8-12-ல் நிற்கில், விவாகமான சிலநாளுக்குள் தன் குடும்பத்தை மாத்திரம் தனியாய் நடத்துவதற்கு எத்தனிப்பாள்.

5. சிங்கராசியில் ருதுவாகி இரண்டில் சுக்கிரன் சனி நிற்கினும், கன்னி-மிதுனம் என்னும் ராசியில் ருதுவாகி இரண்டில் சந்திரனிருக்கினும், துலாம் ரிடபமென்னும் ராசியில் ருதுவாகி இரண்டில் சூரியன் சந்திரன் நிற்கினும், விருச்சிகம்-மேடம் என்னும் ராசியில் ருதுவாகி இரண்டில் புதன் நிற்கினும், தனுசு-மீனம் என்னும் ராசியில் ருதுவாகி இரண்டில் புதன்-சுக்கிரன் நிற்கினும், மகரம்-கும்பம் என்னும் ராசியில் ருதுவாகி இரண்டில் சூரியன்-சந்திரன்-செவ்வாய் இவர்கள் நிற்கினும், அந்த ஜாதகிக்கும் அவள் பர்த்தா குடும்பத்திற்கும் சிற்சில காலங்களில் சண்டையுண்டாகும்.

6. மேற்சொன்னபடியே கிரகமிருந்தாலும், ருதுலக்கினதிபதியும் இரண்டாம் வீட்டுக்குடையவனும் ஆக்ஷிபெற்றிருந்தாலும், அல்லது 1-4-5-7-9-10 என்னுமிடங்களில் ஆக்ஷிபெற்ற கிரகங்கள் மேற்படி இரண்டாம் வீட்டைப்பார்த்தாலும் இந்த ஜாதகியின் குடும்பமும், இவளின் பர்த்தா குடும்பமும், எற்றத்தாழ்வின்றி யோகபாகங்களில் ஒன்றுயும் ஒற்றுமையாகவுமே இருக்கும்.

7. ருதுபாவாதிக்கும் 8-ஆம் பாவாதிக்கும் மித்ருவாயின் மேற்படி ஜாதகியும், மேற்படி ஜாதகியின் பர்த்தா குடும்பத்தவரும் ஒற்றுமையாயிருப்பர். மேற்படி ருது லக்கினதியும், குடும்பாதியும், நட்பு கோட்களாயிருக்கினும் மேற்சொன்னபடியே ஒற்றுமையுண்டு எனவும் கூறவேண்டும்.

8. இரண்டாம் வீட்டோன் சுபனுகவோ, பாபியாகவோ இருந்து ஆக்ஷி யுச்சங்களாகி வேறுவிதமான பாவக்கோட்களின் சேர்க்கையின்றி, சுபகோட்களால் பார்வைபெற்றிருக்கில், அந்த ஜாதகியின் குடும்பமானது மிக்க சீருடையதாயும், புராணமுதலியவைகளில் மிக்க தேர்ச்சி பெற்றவளாயுமிருப்பாள்.

9. இரண்டாம் வீட்டோன் உச்சம்பெற்று இரண்டாம் வீட்டை நோக்கில் அந்த ஜாதகியின் குடும்பமானது நாளடைவில் விருத்தியடையும்.

10. இரண்டாம் வீட்டோன் சுபனுகி பாவகோளுடன் கூடி 3-6-8-12 என்னும் க்ஷேத்திரங்களிலிருக்கில் விபாதி-விரயம்-பங்கம்-உதவியின்மை முதலிய பலனே நடக்கும்.

11. இரண்டாம் வீட்டோன் சுபனுகி நீச்சம்-பங்க அஸ்தமயம் பெற்று எந்த ராசியிலிருந்தாலும் அந்த ஜாதகிக்கு பொருள்சேர்வது மிக்க கடினம், அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் பிறர் கொடியதாகவே நினைப்பர்.

12. இரண்டாம் வீட்டுக்குடைய கிரகம் பாவியாகி ருதுலக்கினத்திற்கோ அல்லது சந்திர லக்கினத்திற்கோ கேந்திரம் கோணம் முதலிய க்ஷேத்திரங்களிலிருக்கில், அந்த ஜாதகியை எவரும் கண்டு அஞ்சுவார், தன் குடும்பமும் மதிப்புபெற நடக்கும் என்றும் கூறுக.

13. இரண்டாம் வீட்டுக்குடையவர்களோடு எத்தனை கிரகம் சேர்ந்தனவோ அவரவர்கள் திசைபுக்தி காலங்களில் நற்பலன் தீப்பலன் முதலியன உண்டாகுமென்பது சாஸ்திரங்களின் கருத்து.

14. இரண்டாம் வீட்டுக்குடைய கிர்கம் பாவியாகி கேந்திரம் பெறுவதும், சுபனுகி கோணம்பெறுவதும் முக்கியமென்றும் கூறுவதாகும்.

சுபனே அல்லது பாவியோ ஆக்ஷி உச்சம்பெறுவதும் முக்கியம். அப்படியிருக்கில் அந்த ஜாதகி கல்வி - செல்வம் - குணம் - குடும்பம் என்னுமிவற்றின் தன்மை முதலியவைகள் விசேஷகுணம் பொருந்தியே யிருக்குமென்பது சாஸ்திரங்களின் முக்கிய கருத்தாகும். மூன்றும்பாவமென்பது ருது ஜாதகத்திற்கு விசேஷமல்ல என்பதைப் பற்றி விடுத்தனம்.

## நான்காம்பாவம்

சொல்லுமந்தநான்காதி யுடனேவெய்யோன்
சூழ்ந்திருக்கசிலகாலம் சுகம்மேலாகும்
வெல்லுமந்தசேய்நிற்கில் சுகமோதுஞ்சும்
விரவுகின்றசனிநிற்கில் பாழதாகும்
எல்லையிலாபாம்புநிற்கில் அலைச்சலுள்ளாள்
ஏந்துமதிதானிருக்கில் சமமதாகும்
தொல்லையிலாகுருவெள்ளி சூழ்ந்துநிற்கில்
தொல்புவியில்சுகமதிகம் சொல்லுவாயே.

(இ-ள்) ருது லக்கினத்திற்கு நான்காமிராசி அதிபனுடன் சூரியன் கூடில் அவளுக்கு நாளுக்குநாள் சுகமுண்டாகும். செவ்வாய் கூடில் நாளுக்குநாள் சுகம் குறையும், சனி நிற்கில் அவள் சுகம் பூரணமாய் கெடும், இராகு கேதுக்களிலொருவர் கூடில் வெகு அலைச்சலுடையவள், சந்திரன் கூடில் தனது அந்தியகாலம் வரையில் சமமான சுகத்தையே அனுபவிப்பவள், குரு சுக்கிரன் இவ்விருவரிலொருவர் கூடில் எந்நாளும் மேலான சுகத்துடனேயே காலங்கழிப்பாள் எ-று.

கூறியநான்காதியுடன் புதனேகூடில்
கொழுமைபெறும்ராணியைப்போல் வாழ்வாள்பாரு
வீறியநான்காதிபதி யாரேயாகில்
விளங்கியதோர்செல்வமெலாம் பகைவராலே
கூறியநற்பந்துவினுல் நாசமாகும்
குணமானஎட்டாகில் அவள்தனக்கு
பாரியநற்சுகமெல்லாம் சில்நாள்பின்னே
பரிகாரமாகுமெனப் பகருவாயே.

(இ-ள்) ருது லக்கினத்திற்கு நான்காம்வீட்டுக்குடையவனுடன் புதன் கூடியிருக்கில் அவள் ராணியைப்போன்ற சுகத்துடன் காலங் கழிப்பவளாவாள், நான்காம் வீட்டுக்குடையவன் ருது ராசிக்கு ஆறும் ராசியிலிருக்கில் தனது பந்துவாலும், சத்துருக்களாலும் நாசமாய்ப் போகும், எட்டிலிருக்கில் சிலநாளுக்குப் பிறகு அவள் சுகம் யாவும் குன்றிப்போகுமென்றுங் கூறுவாயாக எ-று.

சுகமுண்டாவது தனத்தினலேயாம் மேற்படி தனத்தை எவ்வித வகையில் சிலவழித்து பின்பு சுகமிழந்து உயிரிழப்பாள் என்பதை விளக்கியதாகும்.

அஞ்சாதகதிருடனே சனிசேய்நாலோன்
அட்டமத்திற்ருனிருக்கப் பாம்புநோக்க
கொஞ்சுமிவள்சுகங்குன்றி சீரும்கெட்டு
குவலயத்தோரவமதிக்கும் வாழ்வுநேரும்
துஞ்சுமதிநாலோனும் கரியபாம்பும்
துயர்கொடுக்கும்விரயமதி லாகிற்கேளு
நெஞ்சுகெட்டுத்தடுமாறி பலவற்ருலும்
நினைந்துநினைந்துருகிடுவாள் நிலமையீதே.

(இ-ள்), எவருக்கும் பெரியகோளென விளங்கும் சூரியனுடன் சனியும், செவ்வாய் நான்காம் வீட்டுக்குடையவன் இந்நால்வரும் கூடி ஓர் ராசியிலிருக்கவும், அவரைப் பாம்புகள் இரண்டினுள் ஒன்று நோக்கவுமாகில் அவளின் சுகம் குறைவதுடன், இப்பூமியிலுள்ள யாவரும் அவமதிக்கத்தக்க வாழ்க்கையையும் நடத்துவாள். மற்றும் மேற்படி ஜாதகி ருதுவாகும்காலம் தேய்ப்பிறைச் சந்திரனகி மேற்படி சந்திரனுடன் ருதுராசிக்கு நான்காம் வீட்டுக்குடையவனும் கூடி அவர்களும் இராகு சம்பந்தப்பட்டு விரயமென்னும் 12-ஆம் ராசியில் இருக்கவுமானல் அவளின் மனம் தடுமாறி பற்பல விஷயங்களையும் நினைந்து நினைந்து உருகித் தன்வாழ்க்கையை மிக துக்கத்தோடு நடத்துவாள் எ-று.

தாழ்வில்லாலக்கினத்தோன் மதியின்வீட்டோன்
தளராதநான்கிடத்தோன் பகைநீசத்தில்
சூழ்ந்திருக்கவவள்விஷய மோங்காதப்பா
சுந்தரியின்தேகமது வாடும்பாரு
தாழ்வானவியத்ததிபன் நான்கோன்வெய்யோன்
தளர்வானஆறிடத்தில் வீழ்ந்திருக்க

வாழ்வானசுகங்குன்றி பலருமேச
வணக்கமுடனெவர்களையும் நத்துவாளே.

(இ-ள்) மேன்மையையுடைய ருது லக்கினாதிபதியும், சந்திர னிருந்த வீட்டுக்குடையவனும், நான்காம் வீட்டுக்கதிபதியும், பகை ஸ்தானம் அல்லது நீசஸ்தானமென்னும் க்ஷேத்திரங்களிலிருக்க அந்த ஜாதகியின் சுகம் எவ்வளவு இருந்தாலும் ஓங்காது. அவள் சரீரமானது நாளுக்குநாள் வாடிப்போகும் என்றும் ருது லக்கினத் திற்கு பன்னிரண்டாம் வீட்டுக்குடையவனும், நான்காம் வீட்டுக் குடையவனும், சூரியனும்கூடிப் பன்னிரண்டாமிடத்திலிருக்க அவள் வாழ்க்கையானது குன்றி யாவரும் கேலிசெய்யும் தன்மையாய் எல் லோரையும் வணங்கி அவரிடம் தன் வாழ்நாளைக் கழிப்பாள் எ-று.

நான்காமிடம் என்பது முதன் முதலாகத் தாய் - சுகம் - வியா பாரம்-மனை-மேம்பாடு என்னும் முக்கிய க்ஷேத்திரமாகும். அவ்வித பாவாதியான நான்காம் வீட்டோன் க்ஷீணம் பெறுவதோ அத்தமயம்- மோக்ஷம்-பகை-நீசம் என்பவை பெறுவது. சுபகிரகமாயினும் பாவக் கிரகமாயினும் கொடியதேயாகும். ஆனதால் முன்சொன்ன இரண்டு செய்யுளாலும் 6-3-8-12-ஐ மிகக் கொடியதென்றும், அவ்வாறான கிரகங்களுடன் சேர்ந்திருப்பதோ அல்லது மேற்படி க்ஷேத்திரங்களி லிருப்பதோ அவ்வளவு நன்மையல்லவென்பது ருது ஜாதகம், பெண்கள் ஜாதகம், புருஷ ஜாதகம் என்னும் மூவகைக்கும் கொடிய தென்றே ஏற்படுகிறது. நாம் முக்கியமாய் எந்த ஜாதகத்தை யெடுத் தாலும் விசேஷமாய் கவனிக்கவேண்டியது என்னவெனில்.

1. நாம்குறித்த பாவாதிபதி சுபனா அல்லது அசுபனா
2. ,, எந்த க்ஷேத்ரம் பெற்றான்
3. ,, எவர்களுடன் கூடினான்
4. ,, எவர்களால் பார்வையுற்றார்
5. ,, எவர்கள் க்ஷேத்ரத்திலிருக்கிறான்
6. ,, பஞ்சபலத்தில் எந்தபலம்

என்னும் விஷயத்தை ஆராய்வோமாயின், அவர்களின் உண்மைபலன் விளங்கும். உதாரணமாக நான்காம் பாவத்தை சோதிக்க கீழ்க்கண்ட சக்கரத்தைக் கவனியுங்கள்.

வெகுதானிய வருஷம் ஆவணி மாதம் 20-தேதி பகல் நாழிகை 1-க்கு ருதுவானதாக வைத்துக்கொள்ளுவோம் அதற்கு கிரகங்களின் வரலாறு.

| | | | |
|---|---|---|---|
| சனி | கேது | | |
| குரு | இராசி | | |
| | | | அ-கு ல-பு |
| சந் | | சுக் ரா | |

1. மேற்படி ராசிசக்கிர ருது லக்கினாதிபதி தினசரிக்கோட்களில் பாபி.
2. மேற்படி ருது லக்கினாதிபதி லக்கினகேந்திரம் பெற்றிருக்கிறான்.
3. தனக்கு சமம் நட்பு என்னும் கிரகங்களான புதன் அங்காரகனுடன் கூடினான்.
4. சுபர்களிலொருவரான குருவுடன் கூடினான்.
5. தன் சுயக்ஷேத்திரத்திலிருந்துள்ளான்.
6. ஆக்ஷி வீடடைந்தான்.

இதனால் இந்த ஜாதகியின் விஷயம் பிற்காலத்தில் எக்காலத்தும் குறைவுபடாது. ஏனெனில் லக்கினாதிபலமாகும்.

## நான்காமிடச்சோதனை

1. 4-ஆம் வீட்டோன் தினசரிக்கோட்களில் பாபி.
2. ,, தசமகேந்திரம் பெற்றான்.
3. ,, தனக்குப் பகைவனான புதனுடனும், நட்பு கிரகமான சூரியனுடனும் கூடினான்.
4. ,, பஞ்சம அட்டமாதியான குரு கேந்திரம்பெற்றுப் பார்க்கிறான்.
5. ,, லக்கினாதி சூரியன் வீட்டிலுள்ளான்.
6. ,, நட்பு ஸ்தானத்திலுள்ளான்.

இவற்றால் முன் சொல்லிவந்த 4-செய்யுட்களாலும், மற்றுமுள்ள விஷயபாவத்தாலும், அவள் விஷயம் தாழ்வுபடாதென்றும், சுகம் குறையாதென்றும் கூறுக. இவ்வாறே மற்றைய பாவங்களுக்கும் அறிந்து கூறுவது நலம்.

எந்த க்ஷேத்திராதிபதியும் தன் பகைக்கோட்களுடன் கூடு வதோ, அல்லது பகைக்கோட்களால் பார்க்கப்படுவதோ, கொடிய ஸ்தானங்களில் சேருவதோ, அல்லது கொடிய ஸ்தானதிபதிகளுடன் சேருவதோ கொடியதேயாகும்.

மற்றும் பஞ்சபலங்களில் உச்சம் பெறுவது $1\frac{1}{4}$-பலமென்றும், கேந்திரம் பெறுவது 1-பலம் என்றும், ஆக்ஷி பெறுவது $\frac{3}{4}$-பலம் என்றும், நட்புபெற்ற கிரகங்களுக்கு $\frac{1}{2}$-பலம் என்றும், பகைப்பெற்ற கிரகங்களுக்கு $\frac{1}{4}$-பலம் என்றும், நீச்சம்பெற்ற கோட்களுக்கு $\frac{1}{8}$-பலம் என்றும் கூறுவது எவருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

ஆனதால் எவ்வித பாவாத்பாவங்களுக்கும் இவ்வித விசேஷ பாவபலன்களை ஆலோசிப்பது மிக்க சிரேஷ்டமானதாகும்.

பொதுவாய் லக்கினதிபதி இரண்டாம் வீட்டிற்கும் ஆதிபத்தி யம் பெறுவதும், லக்கினதிபதி நான்காம் வீட்டிற்கும் அதிகாரம் பெறுவதும், லக்கினதிபதியே 10-ஆம் வீட்டுக்கும் அதிகாரம் பெறு வதும் விசேஷமென்று ஜாதக பலபாவ விளக்கத்தால் அறியலாம்.

இவை ருது ஜாதகங்களுக்கு மாத்திரமன்றி, ஆண் பெண் என் னும் இருவகை ஜெனன ஜாதகங்களுக்கும் பொருந்தும் என்பதாம்.

## ஐந்தாம்பாவம்

கூறியதோர்பாவமதற் கைந்தாம்வீட்டில்
குருவிருக்கில்பிதுர்செல்வ முடையவளேயாகும்
வீறியதோர்புகரிருக்கில் பிதுர்பூமியுள்ளாள்
விரும்புமதிதானிருக்கில் தாய்ச்செல்வமுடையாள்
தேரியதோரைந்தினிலே குருவிருந்துவெய்யோன்
குலவுமந்தலக்கினத்தில் குறிப்பாகநிற்க
பாரியதோர்பிதுர்தனங்கள் யாவையுமேபெற்று
பாக்கியவதியாவாளெனப் பகருவாயே.

(இ-ள்) நாம் இதுவரையில் சொல்லிவந்துள்ள ருது லக்கினத் திற்கு 5-ஆம் ராசியில் குரு விருக்க அந்த ஜாதகி பிதுர் செல்வமுடை யவளென்றும், ஷ்டி ராசியில் சுக்கிரனிருக்க பிதுர்வகையில் பூமி யுடையவளென்றும், ஷ்டி ராசியில் சந்திரனிருக்கில் தாய்ச்செல்வ மதிகமுடையவளென்றும் கூறுவதோடு மேற்படி ஐந்தாம் ராசியில் குருவும் ருதுலக்கினத்தில் சூரியனு மிருந்தால் அவள் பிதாவின் பூஸ்திதி யாவும் இவ்ளே கைக்கொள்வாள் என்றுங் கூறுவாயாக எ-று.

உரைக்கலாம்ஐந்தினிலே சேயும்நின்று
உயர்வானலக்கினத்தோன் புகரேயாகி
பெருக்கவேநவகோணம் பெற்றுசோமன்
பெலமானநான்கிடத்தி லிருக்கவேதான்
பொறுக்கவேசோதரர்கள் செல்வத்தாலும்
புவிதனிலேதான்தேடும் பொன்னினாலும்
மறுக்கவேமுடியாத வாழ்வுண்டாகி
மன்னவனைப்போன்றிருப்பாள் மகிழ்ச்சிகூறே.

(இ-ள்) ருது லக்கினத்திற்கு ஐந்தாம்ராசியில் குருவும் லக்கினாதிபதி சுக்கிரனாகயிருந்து ருதுராசிக்கு 9-ஆம் ராசியிலும், சந்திரன் நான்காமிடத்திலு மிருக்கவுமானால், அந்த ஜாதகி தனது சகோதர சகோதரிகளின் செல்வத்தாலும், தான் சுயார்ச்சிதமாய் தேடியுள்ள செல்வத்தாலும், எந்நாளும் நீங்கப்படாத வாழ்வுடையவளாய் அரசன்போன்று இனிது வாழ்ந்திருப்பாளென்றுங் கூறுவாயாக. எ-று.

மாட்டாதலக்கினத்தோன் புந்தியாகி
மதியைந்தில்நீலனவன் நவத்தில்நிற்க
தேட்டமாய்பெற்றபிள்ளை பகையேயாகும்
தெவிட்டாதகுருநோக்கில் ஒன்றுதீர்க்கம்
வாட்டமாம்பாவியவர் ஐந்தோன்தன்னை
வளமாகக்கூடிடினும் நோக்கினாலும்
ஓட்டமாம்பெற்றபிள்ளை பலித்திடாது
உண்டானால்சத்துருவென் றோதுவாயே.

(இ-ள்) ருது லக்கினாதிபதி புதனாகவிருந்து 5-ல் சந்திரனும் 9-ல் சனியும் நிற்க, அவள் பெற்ற பிள்ளைகள் அவளுக்கே கொடிய சத்துருவாகும். மேற்படி ஐந்தாம் வீட்டையோ ஒன்பதாம் வீட்டையோ குருநோக்கில் அவளுக்கு ஒரே புத்திரனே தீர்க்கமா யிருக்கும். மேற்படி 5-ஆம் வீட்டைப் பாவர்கள் நோக்கினாலும், கூடினாலும் அவளுக்கு புத்திரர் பிறந்து மரிப்பார்கள். அப்படி நிலைத்திருக்கின் மேற்படி ஜாதகிக்கு சத்துருவாகவே யிருப்பார்க ளென்றுங் கூறுவாயாக எ-று.

சரியானஐந்துடையோன் சுபனேயாகி
சலிப்பில்லாகேந்திர கோணத்தில்நிற்கில்
நெறியானகௌரவமும் யோகமுண்டு
நின்றவர்கள் பாவருடன்கலந்திருக்க

குறியானகௌரவங்கள் கொஞ்சமற்பம்
கோதற்றபாவர்களே ஐந்தோனாகி
சரியானசுபர்களிட பார்வையற்றால்
சஞ்சலமுண்டாகுமென்று சாற்றுவாயே.

(இ-ள்) ருது லக்கினத்திற்கு 5-ஆம் வீட்டுக் குடையவர்கள் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் இவர்களி லொருவராக விருந்து கேந்திரகோணங்களிலிருக்கில் அவளுக்கு மிக்க கௌரவமும் யோகமும் உண்டாகுமென்றும், மேற்படி சுபர்கள் பாவர்களுடன் கலந்து யிருக்கில் சிலகாலங்களில் கௌரவம் அற்பமடையுமென்றும், ஐந்தாம் வீட்டுக்குடையவர்கள் பாவர்களான சூரியன்-செவ்வாய்-சனி-இராகு கேதுவாக விருந்து சுபர்களின் பார்வையற்று யிருப்பார்களே யாமானால், அவள் கௌரவம் யோகம் முதலியவைகளுக்கு சஞ்சலமும் உண்டாகுமென்று கூறுக எ-று.

## ஆறும்பாவம்

கூறியவாறுதியுடன் குஜனேகூடி
குறிகேந்திரகோணமதில் பலத்துநின்று
பாரியநன்மதியவனை நோக்கிநின்றால்
பலரிகழசகோதரனே சத்ருவாவன்
வீரியநற்புதனுடனே யாரேனுங்கூடி
விளங்குகின்றஆறெட்டில் வீழ்ந்திருக்க
பாரியநற்றாய்வகையி லெல்லாம்சத்ரு
பலபேரும்சுவர்கள் பேசுவாயே.

(இ-ள்) ருது லக்கினத்திற்கு ஆறும் வீட்டுக்குடையவனுடன் செவ்வாய்கூடி கேந்திரகோணங்களில் ஆக்ஷி உச்சங்களால் பலம் பெற்று, சந்திரனை நோக்குவார்களாகில் அவள் சகோதரனே அவளுக்குக் கொடிய சத்துருவாகி பலரும் இகழ்ச்சிசெய்யும்படியாயிருக்கும். மேற்சொன்ன ஆறும்வீட்டுக் குடையவனுடன் புதன்கூடி மேற்படி லக்கினத்திற்கு 6-8-ல் நிற்க, அவள் தாய் வகை பந்துவெல்லாம் பலரும் எசத்தகுந்த கொடிய சத்துரு ஆவார்களென்றுங் கூறுக எ-று.

மந்தனுடன்சோமன் சேயாறெட்டாகில்
மானிலத்திலன்னியரே சத்ருவாகும்
இன்னிலத்தி லிவளையொன்றும் செய்யாதப்பா
இருமூன்றோன்மதிகுருவும் கேந்தரிக்க

மந்திரமும்சூன்னியமும் நோயுண்டாகும்
மாற்றவரால்துன்பமுண்டு மகிழ்வாய்கேளு
சிந்தைமகிழ்ஏழவனுக் காரேனப்பா
சிறப்புடையசத்ருவெனில் புருஷனுமே.

(இ-ள்) ருது பாவத்தில் 6-ஆம் ராசியிலேனும், 8-ஆம் ராசியிலேனும், சனி-சந்திரன்-சேய் இவர்கள் கூடிநிற்க, அவளுக்கு அன்னியமனுஷரே சத்ருவென்றும், அந்த சத்துருக்களால் இவளையொன்றும் செய்யமுடியாதென்றும், மேற்படி 6-ஆம் வீட்டுக்குடையவனுடன் குருவும்கூடி சேந்திரத்திலிருந்தால் அவளுக்கு சிலகாலங்களில் மந்திரம் சூன்னியம் முதலிய உண்டாகுமென்றும் முன்சொன்ன 6-ஆம் வீட்டுக்குடையவனுக்கு 7-ஆம் வீட்டுக்குடையவன் சத்துருவாகி அவளுக்கு அவள் புருஷனே சிலகாலங்களில் சத்துருவாவான் எ-று.

6-ம் வீட்டுக் குடையவனுக்கு 7-ஆம் வீட்டுக்குடையவன் சத்ருவாகில், அவள் புருஷனே சத்துரு என்பதை மேற்படி 6-7-ஆம் வீட்டுக் குடையவர் திசை புக்தி அந்திர சூக்ஷுமகாலங்களில் சொல்லுக.

பொதுவாய் எந்த ஜாதகங்களுக்கும் ஆறும் வீட்டோனென்னும் ரோகாதிபதி ஆறும் வீட்டிற்கு கேந்திரம் கோணம் பெற்றிருக்கில் அவளுக்கு மேற்படி 6-ஆம் வீட்டுக் குடையவன் திசைபுக்தி வருங்காலம் அந்தந்த கிரககாரகத்திற்குத் தக்கபடி வியாதியைக் கொடுக்குமென்றும்.

ஆறும் வீட்டோன் தன் க்ஷேத்திரத்திற்கு 3-6-8-12 முதலிய க்ஷேத்திரங்களி லிருக்கில், அவளுக்கு விசேஷமாய் ரோகபாதையுண்டாகா தென்பதும் சாஸ்திரங்களின் கருத்தாகும். மற்றும் 6-ம் வீட்டுக் குடையவன் மேலே சொன்னபடி கேந்திரகோணங்களில் வலுப் பெற்றிருக்கின் கீழ்க்கண்ட வியாதியைத் தரும் என்பதாம்.

சூரியனுகில் இருமல் ஊஷ்ணநோயும், சந்திரனுகில் சீதளவியாதி, உதிர வியாதி, பாண்டு வியாதி, ஜுரம் முதலியனவும், குஜனுகில் எலும்புருக்கி வாய்வு நெருப்பால் காயம் முதலியனவும், புதனுகில் கட்டி பிளவை முதலிய தசையைப்பற்றிய நோயும் வாய்வு நோயுமாம், குருவாகில் ராஜப்பிளவை பயித்தியம் முதலியனவும்,

சுக்ரனாகில் கெற்பநோய் மர்மஸ்தானங்களில் பாதை முதலியனவும், சனியாகில் நரம்புநோய் பேய் பிசாசு பீடை முதலியனவும் உண்டாகும், பொதுவாய் 6-ல் சனி ராகு நிற்கில் அவளுக்கு வியாதிபாதை யதிகமுண்டாகுமென்பது சாஸ்திரங்களின் கருத்து.

## ஏழாம்பாவம்

7-ஆம் பாவ விஷயமாய் முன்கூறிய முதல் பாவத்திலேயே விரிவாய்க் கூறியுள்ளேன். ஆனதால் இங்கு ருது ஜாதகப்படி 7-ஆம் பாவாதிபனைக்கொண்டு அவளின் பர்த்தாவின் தொழில் விவரங்களை கவனிப்போம்.

1. 7-ஆம் வீட்டிற்கு பத்தாம் வீடான ருது லக்கினத்திற்கு நாலாம் வீட்டோன் சூரியனாகில் தன்னிடம் பல ஆட்கள் அடிமை செய்யத்தகுந்த கௌரவத்துட னிருப்பான்.

2. நான்காம் வீட்டோ னிருந்து அங்கிசாதிபதி புதனாகில் வாதம் வயித்தியமும், சூரியனாகில் உத்யோகமும், சந்திரனாகில் கைத்தொழில் செய்பவனும், செவ்வாயாகில் பயிர்த்தொழில் செய்பவனும் குருவாகில் சைவத்தொழில் செய்பவனும், சுக்கிரனாகில் பொன் வெள்ளி விற்பவனும், சனியாகில் அடிமைத்தொழில் செய்பவனும் ஆவான்.

3. 10-ஆம் வீட்டோன் 7-ஆம் வீட்டோன் இவ்விருவரும்கூடி புதன்வீட்டி லிருக்க அந்த ஜாதகிக்கு வரும் புருஷன் வியாபாரம் செய்யுந் தன்மையுடையவனாவான்.

4. 7-ஆம் வீட்டிற்குடையவனுடன் நாலாம் வீட்டோனும்கூடி சுக்கிரன் வீடேறி அம்சாராசியில் 7-ஆம் வீட்டோன் சுக்ரனாகவரில் அவளுக்கு கிடைக்கும் புருஷன் பொன் வெள்ளி முதலியவைகளை விற்று ஜீவிப்பவனாவான்.

5. 7-ஆம் வீட்டோனும் குருவும் கூடி ருது லக்கினத்திற்கு கோணத்திலிருந்து அம்சாராசியில் நாலாம் வீட்டோன் செவ்வாயாகில் அவளுக்கு கிடைக்கும் புருஷன் இரும்புவியாபாரி யாவானென்றுங் கூறுக.

6. 7-ஆம் வீட்டோன் புதசாரமேறி 4-ஆம் வீட்டோன் குருவாகி ஆக்ஷி உச்சங்களால் பலம்பெற்றிருக்க, அவள் புருஷன் கதை காவியம் முதலியன செய்யும் வித்துவானாக விருப்பான்.

7. ஏழாம் வீட்டோன் சந்திரனும் நாலாம் வீட்டில் சனி நின்று, அம்சையில் நாலாம்வீட்டில் சந்திரனுடன்கூடி யிருக்கில் துர் தேவதை யுபாசனத்தால் ஜீவனம் செய்பவனுவான்.

8. ருதுலக்கினம் மீனமாயும் அல்லது கன்னி தனுசாகவிருந்து 7-ஆம் வீட்டோன் ஆக்ஷிபெற்று 4-க்குடையவன் 7-க்கு கோணம் பெற்றிருக்கில் அவள் புருஷன் கணித வித்துவானுவான் என்றுங் கூறுக.

9. 7-ஆம் வீட்டோன் சனியங்கிசமேறி நாலாம் வீட்டோன் 6-8-12-ல் க்ஷீணமடைந்தும், மேற்படி 4-ல் ராகு கேதுக்களி லொரு வர் நிற்கவும் ஆனுல் அவள் புருஷன் புல் வைக்கோல் முதலியவற்றை சுமந்து ஜீவனம் செய்வான்.

10. 7-ம் வீட்டோன் சுக்ரசாரமேறி நாலாம் வீட்டோன் புத சாரமேறி ருதுலக்கினத்திற்கு கேந்திரமும், 7-ஆம் வீட்டிற்கு கோண மும் பெற்றிருக்கில் அவள் புருஷன் நவரத்தின வியாபாரம் செய்பவ னுகவு மிருப்பான்.

11. 7-ஆம் வீட்டோன் அம்சாராசியில் மகரகும்பத்திலிருந்து ருது லக்கினத்திற்கு நான்காம் ராசியில் புதன் குரு இவர்களிருக்க அவளுக்குக் கிடைக்கும் புருஷன் சிற்பத்தொழில் செய்பவ னுவான்.

12. லக்கினுதி லக்கினத்தை நோக்கவும் 7-ஆம் வீட்டோன் நான்கா மிராசியை நோக்கவும், ருதுலக்கினத்தில் ஆறும் வீட்டோன் சூரியனுடன்கூடி எந்தராசியிலிருந்தாலும் அவளுக்குக் கிடைக்கும் கணவன் தனது பிதாவால் தேடிவைத்த பொருளைக்கொண்டு சுகித் திருப்பான்.

13. ருது லக்கினத்திற்கு 4-ம் வீட்டோன் 6-8-12-ல் நீச்சம் பகை பெற்றும், 7-ஆம் வீட்டோன் 7-க்கு 6-8-12-ல் நிற்கவும் நான்கா மிராசியில் சனி-ராகு-கேது இவர்கள் நிற்கவும், ஆனுல் அவ னுக்குக் கிடைக்கும் புருஷன் பல தொழிலைச் செய்வானுயினும் சிலகாலங்களில் வறுமைமுதலியனவற்றுலும் கஷ்டப்படுவானென்றுங் கூறுவாயாக.

14. பொதுவாய் 7-ஆம் வீட்டோனும் 4-ஆம் வீட்டோனும் ஆக்ஷி உச்சம் நட்பு கேந்திரம் கோணம் பெறுவது விசேஷம்.

## எட்டாம்பாவம்

1. ருது லக்கினத்திற்கு 8-ஆம் பாவாதிபதி சுபனுகவிருந்து ஆக்ஷிபெற்றிருக்கில் அவள் எத்தகைய துன்பமிருக்கினும் தீர்க்க மாங்கல்யவதியும், பூரண ஆயுளும் உடையவளாவாள்.

2. மேற்படி 8-ஆம் பாவம் சுத்தமாகயிருந்து மேற்படி பாவாதிபதி 8-ஆம் ராசிக்கு கேந்திரமும், ருது லக்கினத்திற்கு 2-5-9-11 என்னும் ராசியிலிருந்தாலும், பூரண ஆயுளும் தீர்க்க மாங்கல்யவதியுமா யிருப்பாள்.

3. ருது லக்கினத்திற்கு 8-ஆம் ராசியதிபனுடன் 7-ஆம் வீட்டுக்குடையவனும், லக்கினுதிபதியும் சுக்கிரனும்கூடி கேந்திரங்களில் இருக்கில் சதிபதிகளிருவரும் நீங்காத ஒற்றுமையும், செல்வம் புத்திரர் இவைகளை அநேகம் உடையவராயும், தீர்க்கமாங்கல்ய முடையவளாயும் வாழ்வாள்.

4. 8-ஆம் பாவாதியும் குருவும்கூடி எந்த ராசியிலிருக்கினும் ருது லக்கினுதி கேந்திரகோணங்களிலிருக்து மேற்படி கோட்களை நோக்குவார்களாகில் அந்த ஜாதகி எந்நாளும் நீங்காத பர்த்தா சுகமும் மாங்கல்யவதியும் பொன்னுபரணங்களைப் பல வுள்ளவளுமாவாள்.

5. 8-ஆம் பாவாதிபதி எந்த கிரகமாயிருக்கினும் கேந்திரங்களாலும், கோணங்களாலும் பலம்பெற்று, சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் இவர்களால் பார்வையுற்று நிற்கின் அந்த ஜாதகி சுகமும் மாங்கல்யமு முடையவளாகவே வாழ்வாள்.

6. 8-ஆம் வீட்டில் ஓர் பாவகிரகமிருக்கின் அவள் வாழ்க்கையில் சிலநாளில் துன்பமும், விருத்தாப்பிய விதவையும் ஆவாள்.

7. 8-ஆம் வீட்டில் 2-பாவகோட்களோ, அல்லது 2-பாவகோட்களுக்கு மேற்பட்ட பாவகோட்களோ கூடியிருக்கின் அவள் மத்திய கால விதவையென்றும் சாஸ்திரபிரமாணமுண்டு.

8. 8-ஆம் வீட்டிற்குடைய கிரகம் எந்த கிரகமாயிருக்கினும், ருது ஜென்மலக்கினத்திற்கு 6-8-12-ஆம் ராசியிலிருக்கினும், 8-ஆம் பாவத்தை பாவக்கோள் பார்க்கினும் விதவையென்றே கூறவேண்டும்.

9. 8-ஆம் பாவாதிபதி குரு சுக்கிரர் இவர்களில் ஒருவராக இருந்து நீச்சம், பகை முதலியவற்ருல் க்ஷீணமடைந்து நிற்கினும், அந்த ஜாதகி விதவையாகி மரிப்பாளென்றே கூறவேண்டும்.

10. 8-ம் பாவாதிபதி புதன் சந்திரனுகவிருந்து மேலே கூறிய படி நீச்சம், பகை முதலியவற்ருல் பலயீனமடைந்து நிற்கினும் அந்த ஜாதகி விதவையானபின் மரிப்பாளென்றே கூறவேண்டும்.

11. 8-ஆம் வீட்டுக்குடையோன் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரனென்னும் சுபர்களில் ஒருவனுகவிருந்து சூரியன்-சனி-செவ்வாய்-ராகு-கேது இவர்களில் ஒருவருடன்கூடி ருது லக்கினத்திற்கு 3-ல் இருக்கில், சீக்கிரம் விதவையும், 6-ல் நிற்கில் சுமார் 6-வருடங்களுக்குள் விதவையும், 12-ல் நிற்கில் மத்தியகால விதவையென்றுங் கூறுக.

12. ருது லக்கினத்திற்கு 8-ஆம் ஆதிபதி மேலே சொன்ன பாவர்களிலொன்ருகி நீச்சம், பகை பெற்ற சுபர்களுடன்கூடி எங்கு நின்ருலும் அந்த ஜாதகி தன்வயது மத்தியில் விதவையென்றுங் கூற வேண்டும்.

13. 8-ஆம் வீட்டோன் 8-க்கு 8-லும், 3-ஆம் வீட்டோன் 12-லும், சந்திரனுக்கு 12-ல் குரு சனியும், சுக்கிரனுக்கு 7-ல் செவ்வாயும் நிற்க ருதுவானவளுக்கு விவாகமாவது கடினம்.

14. 3-8-க் குடையவர்கள் கூடி 12-ல் பகை நீச்சம்பெற்று சுபர்கள் பார்வையற்றும், பாவர்கள் பார்வைபெற்றுமிருக்க, அந்த ஜாதகிக்கு விவாகமில்லையென்றும், காந்தர்வ விவாகமே உண்டு என்பதும் சாஸ்திரங்களின் கொள்கை.

15. 8-ஆம் வீட்டோனுடன் ராகுவும், 3-ஆம் வீட்டோனுடன் கேதுவும்கூடி, எந்த க்ஷேத்திரத்திலிருந்தாலும் அவள் சோரபுருஷனையடைந்து சுகித்திருப்பாள்.

8-ஆம் ராசியதிபதி பகை நீச்சம் பெருது நிற்பது விசேஷம்.

## ஒன்பதாம்பாவம்

9-ஆம் இடம் என்பதை முன்னமே புத்திரத்தானமென்பதை கூறியுள்ளேனுகையால், இங்கு அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. 9-ஆம் இடம் என்பது 1-வது புத்திரஸ்தானம், 2-வது பாக்கியஸ்தானம் என்னும் முக்கிய க்ஷேத்திரமேயாகும். ஆதலால் இங்கு புத்திர பலன்களை விவரிப்போம்.

1. புத்திரத்தானுதியான 9-க் குடையவன் ராகுவுடனே, கேதுவுடனே கூடியிருக்கில் புத்திர அற்பமாகும். ஆயினும் ருது லக்கினத்திற்கு ஒன்பதாம் வீட்டுக்குடையவன் ராகு கேதுக்களுடன் கூடி

யிருந்தாலும், லக்கினாதிக்கு கேந்திரகோணங்களிலிருக்க அவளுக்கு கர்ம புத்திரனுண்டு.

2. 9-ஆம் வீட்டுக்குடையவன் குருவாகி மேற்படி புத்திரத் தானத்திற்கு 3-6-8-12-ல் இருக்கில், அந்த ஜாதகிக்குப் பிறக்கும் குழவிகள் எல்லாம் நசிந்துபோம்.

3. புத்திரத்தானாதியான 9-ஆம் வீட்டுக்குடையவன் சனி-ராகு கேதுடன்கூடி, ருது லக்கினத்திற்கு 3-6-8-12-ல் நிற்க அவளுக்குப் பிறக்கும் புத்திரன் நிலைப்பது அரிதாகும்.

4. 9-ஆம் வீட்டுக்குடையவன் நீச்சம் பகை அஸ்தமனமாகி மேற்படி கிரகத்துடன் குருவும் கூடியிருக்கினும் மேற்படி ஜாதகிக்குப் பிறக்கும் குழவிகள் யாவும் மரிக்குமென்பது சோதிடர்களின் கொள்கை.

5. ருது பாவத்திற்கு 9-ஆம் வீட்டுக்குடையவன் சந்திரன்-புதன்-சுக்கிரன்-குரு என்னும் இந் நால்வருக்குள்ளாக இருந்து தனது பகைக் கிரகங்களுடன் கூடில் அந்த ஜாதகிக்குப் பிறக்கும் புத்திர புத்திரிகள் இந்த ஜாதகிக்குச் சத்துருவாகவே இருக்கும்.

6. மேற்படி 9-ஆம் பாவாதிபதி பாவக்கோளென்னும் சூரியன்-சனி-குஜன் என்னும் இவர்களில் ஒருவராகயிருந்து மேற்படி கோட்கள் மேற்படி ஸ்தானத்திற்கு கேந்திரங்களிருந்தாலும், அந்த ஜாதகி தன் புத்திரர்களின் சுபா சுபங்களை அனுபவிப்பது அரிதாகும்.

7. 5-ஆம் பாவாதியுடன் 9-ஆம் ஆதிபதிசேர்ந்து இவ்விருவரி லொருவர் பகை நீச்சத்திலிருக்க, அந்த ஜாதகியின் புத்திரர் அவ் வளவு சிலாக்கியமானவர்களல்ல.

8. 9-ஆம் வீட்டுக்குடையவன் எந்த கிரகமாயினும், லக்கினத் திற்கு கேந்திரம், கோணம் என்னுமிடங்களில் இருக்கில் அந்த ஜாத கிக்குப் பிறக்கும் குழவிகள் யாவும் தன் தாய்க்குத் தொண்டு செய்வ தாகும்.

9. 9-ஆம் வீட்டோன் குரு-சுக்கிரன்-புதன்-சந்திரனாக இருக் கில் சற்குணம் நன்மார்க்கம் நிறைந்த பிள்ளைகளும், சனி-குஜன்-சூரி யனாகில் துன்மார்க்கப் பிள்ளைகளும் ஜெனிக்கும் என்பது சாஸ்திரங் களின் கொள்கையாகும்.

10. 9-ஆம் வீட்டுக்குடையோன் பாவக்கிரகமாயினும், சுபக் கிரகமாயினும், ருது லக்கினத்திற்கு கேந்திரம் கோணம் என்னும்

ஸ்தானம்பெற்று இருக்கில் அவளுக்குப் பிறக்கும் குழவிகள் மிக்க நன்மார்க்கமுடையதாயும், தனது தாய்க்கு மிக்க அன்பு செலுத்துவதாயும் இருக்கும்.

11. பொதுவாக 9-ஆம் வீட்டுக்குடைய கோட்கள் எக்கோளாயினும், தனது ஆக்ஷி வீட்டிற்கு கோணம் பெறுவது விசேஷபலமென்றும், கேந்திரம் பெறுவது மேற்சொல்வியதைவிட விசேஷபலமென்றும், 2-11-ல் இருப்பது அரைபலமென்றும் கூறவேண்டியதாய் சாஸ்திரங்களுள்ளன.

மேற்படி 9-ஆம் ஸ்தானாதிபதி பாவர்களாயிருக்கின் நீச்சம் பகைபெறுவது கால்பலம் புத்திரசுகம் உண்டென்றும் (அவையாவன புத்திரனிருந்தும் பலனில்லை யெனல்) ஆக்ஷி உச்சம் பெறுவது விசேஷமென்றும், நட்பு பெறுவது அரைபலமென்றும் கூறுவதுண்டு

புத்திரபாவங்களை அறுவித சோதனையால் ஆராய்ந்தறிக. அவையாவன, 9-ம் வீட்டுக்குடையவன் எவர்கள் வீடேறினன்? எவரால் பார்க்கப்பெற்றான்? எவர்களுடன் கூடினன்? என்பதை ஆராய்ந்து புத்திரபலன் கூறுக.

## 10-ஆம் இடம்

1. ருது லக்கினத்திற்கு 10-ஆம் வீட்டுக்குடைய கிரகம் சூரியனாகில் எவ்விதகாரியத்தையும் துடுக்குத்தனமாய் செய்பவள், பகவத் தியானம் நிறைந்தவள், சைவாகமநெறியுடையவளும் ஆவாள், ஷை 10-ஆம் வீட்டுக்குடையவனுடன் சந்திரன்கூடியிருக்கில் அம்பாள் உபாசியும், தன்வயதிற்கு மூத்த ஸ்திரீ ஜனங்களிடத்தே விஸ்வாசமுடையவளும், தீர்த்தமாடுவதில் பிரியமுடையவளாவாள்.

2. ருது ராசிக்கு |10-ஆம் வீட்டுக்குடைய கிரகம் சூரியனுடன் கூடி எந்தராசியிலிருந்தாலும் அவள் தன் குடும்ப மனுஷரால் மிக்க புகழ்ச்சியும் மேன்மையும் செய்யத்தகுந்த தொழிலையே செய்பவளும், ஈஸ்வரபக்தியும் உடையவளாய், தன்தேசமெங்கும் தன் பெயர் விளங்கும்படி செய்பவளாவாள்.

3. ருது லக்கினத்திற்கு 10-ஆம் வீட்டுக்குடையவன் புதனுடன் கூடியோ அல்லது புதனால் பார்க்கப்பட்டோ புதன் சாரமேறியோ நிற்கில் அந்த ஜாதகி வியாபாரத்தில் மிக்க கருத்துடையவளும் பலவித தந்திரத்தால் பணம் சம்பாதிப்பவளும் எல்லோர்க்கும் நல்லவளும் ஆவாள்.

4. ருது பாவாதியுடன் செவ்வாயும் 10-ஆம் ராசியதிபதியுடன் சுக்கிரனும்கூடி நிற்கில் அந்த ஜாதகி மன்மதனையொத்த புருஷனையடைய ஆசைபடுபவளும், சிற்றின்ப போகஇச்சையில் மிகுந்தவளும், வெகு கோபக்காரியும், தனது பந்துமித்திரர்களை வையுங் குணமுடையவளும் ஆவாள்.

5. ருது லக்கினத்திற்கு 10-ஆம் பாவாதியுடன் குரு கூடி எந்த ராசியிலிருக்கினும், அந்த ஜாதகி நற்செய்கை நற்குணம் நல்லெண்ணம் முதலியவைகளை யுடையவளாய், அரசர்களிடத்தும் பிராமணர்களிடத்தும் பக்தி பூர்வகமாய் நடந்துகொள்வாள். மற்றும் ஷை ஜாதகி சிவாலயம் விஷ்ணு ஆலயம் கட்டுவித்தல் முதலிய விசேஷ சுபகாரியங்களைச் செய்விக்கும் தன்மையுடையவளாக விளங்குவாள்.

6. ருது லக்கினத்திற்கு பத்தாம் வீட்டுக்குடையவன் சனி சூரியன் இவர்களுடன் கூடியிருக்கில் அவள் எத்தொழிலைச் செய்யினும் பிறருக்கு வைராக்கியமாகவே செய்யத்தகுந்தவள்.

7. 10-ஆம் ராசியதிபதி செவ்வாயுடன் கூடியிருக்கில் அந்த ஜாதகி எக்காரியத்தையும் வீரவைராக்கியத்துடனும், கோபத்துடனும் செய்துமுடிப்பாள்.

8. 10-ஆம் வீட்டோன் சனியுடன் கூடிநிற்கில் பிறருக்குத் தீமைசெய்யும் விஷயங்களிலும், சனிபார்வை பெறில் மனமார்த்தமாய் தீமைசெய்ய முயலபவளும், ராகு கேதுடன் கூடியிருக்கில் தீயகாரியங்களையே செய்ய ஆசைப்படுபவளும் ஆவாள் என்றுங் கூறுக.

9. 10-ஆம் வீட்டோன் பாவனுக இருக்கினும் சுபர்களுடன் கூடி கேந்திரகோணங்களிலிருக்கில் அவள் மனம் கொடிய காரியங்களைச்செய்ய இச்சைப்படுமாலுைம் கொடியதைச் செய்ய இடந்தாராது.

10. 10-ஆம் வீட்டோன் சுபகிரகங்களி லொருவராக இருந்து பாவர்களுடன் கூடியிருக்கில், அவள் செய்வது நன்மையான காரியங்களேயாயினும் முடிவில் அவள் செய்யும் காரியம் தீமையாகவே தெரியும்.

11. 10-ஆம் வீட்டுக்குடையவன் சுபகிரகமாயும் ஷை சுபகிரகம் கேந்திரகோணத்திலும், பாவக்கிரகமாயின் கோணத்திலும் நிற்பது அந்த ஜாதகியின் செய்கைக்கு எந்நாளும் தாழ்வு வாராது.

12. பாவக்கிரகமாகி கோணம் பெறுவது முக்கால் சுபமும், சுபக்கிரகமாகி கேந்திரம் பெறுவது சிலாக்கியமல்லவென்பதும் சாஸ்திரங்களின் கருத்தாகும்.

13. 10-ஆம் வீட்டில் ஆக்ஷி உச்சம் நட்புபெற்ற கோட்களும் 10-ஆம் வீட்டோன் கோணங்களில் ஆக்ஷி நட்பு உச்சம்பெறுவது அவரவர்கள்செய்த புண்ணியமேயாகும்.

## 11-ஆம் இடப்பலன்

1. ருது லக்கினத்திற்கு பதினோராம் இடத்தைக்கொண்டு அவளுக்கு எந்தமார்க்கத்தில் லாபம் உண்டாகுமென்பதை யறியலாம். 11-ஆம் வீட்டோன் எவனோ அவன் சுபனுயின் சுபகாரியத்திலும், பாவியாயின் துற்காரியங்களில் லாபமுண்டாகு மென்பது சாஸ்திரங்களின் பொதுகொள்கையாகும்.

2. பதினோராம் வீட்டோன் தன் சுய ஸ்தானங்களுக்கு கேந்திரம் கோணம் பெற்றிருப்பானேயாமானுல் அவளுக்கு எக்காரியத்தைச் செய்யினும் பூரணலாபமும் அதனுல் கௌரவமும் உண்டாகுமென்பது சாஸ்திரங்களின் கருத்து.

3. ஷெ 11-ஆம் வீட்டோன் சுபனுயினும் பாவனுயினும் 11-ஆம் வீட்டுக்கு 6-8-12-ல் மறைந்திருக்கில் அவளுக்கு எக்காரியத்தைக்கொண்டும் லாபம் உண்டாகமாட்டாது.

4. 11-ஆம் வீட்டோன் சுபகிரகங்களான சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் என்னும் இந்நால்வரில் ஒருவராகவிருந்து, தன் தன் க்ஷேத்திரங்களுக்கு கோணமாகிய 1-5-9-ல் இருக்கில் அவள் தன் மனப்பூர்வமாய் துற்விஷயங்களி லாசைப்படாது நன்மார்க்க விஷயங்களிலேயே பொருள் சம்பாதிக்க இச்சைப்படுவாள்.

5. மேற்சொன்ன 11-ஆம் வீட்டுக்கிறைவன், தன் தன் ஸ்தானங்களுக்கு கேந்திரங்களிலிருக்கில் தன் மனப்பூர்வமாய் ஞாயார்த்தமான விஷயங்களில் பொருள் சம்பாதிக்க இச்சைப்படுவாள்.

6. 11-ஆம் வீட்டோன் பாபியாகி 3-6-8-12-ல் நிற்கில் அவள் எக்காரணத்தைக்கொண்டும் நஷ்டமடைந்தே தீருவாளென்றும், ருது லக்கினத்னத்திற்கு 2-10-11 என்னும் க்ஷேத்திரங்களாயின் எவ்விததொழிலாயிருக்கினும் லாபமுண்டாகவேண்டும் என்னும் கருத்தையே மேற்கொண்டவளாவாள்.

7. 11 - ஆம் வீட்டோன் சுபகிரகங்களி லொருவராகி 3-11-க்கு 3-6-8-12 - லும் ருது லக்கினத்திற்கு கேந்திரகோணங்களிலுமிருக்கில் அவள் மனமார்த்தமாய் துற்விஷயங்களில் பணம் சம்பாதிக்க இச்சைப்படாள். ஆயினும் பிறர் உதவியினுலோ பிறர் வார்த்தையினுலோ மேற்படி விஷயங்களில் லாபம் பெற இச்சைப் படுவாள்.

8. 11-ஆம் வீட்டுக்குடையவன் சுபனுகி பாவனுடன்சேர்ந்து யிருந்தாலும், பார்வைமுதலியவற்ருல் பலம் பெற்றிருந்தாலும் அவள் சிற்சில காலங்களில், மோசம், துராக்கிருதம், வழக்கு முதலியவைகளைத் தொடுத்து பொருள்பெற இச்சைபடுவாள். ஆயினும் அவை வெகு சிரமமாகவே முடியும்.

9. 11-ஆம் வீட்டோன் பாவனுகி சுபகிரகங்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பெற்ருே இருப்பார்களாகில் அவள் சுயேச்சையாய் துற்காரியங்களில் பொருள் சம்பாதிக்க இச்சைப்படுவாளாயினும் பிறரால் ஷை துற்காரியங்களுக்கு பிரவேசிக்கவொட்டாமல் தடுக்கப் படுவாள்.

10. ருது லக்கினத்தோனும் 3-11-ஆம் வீட்டோனும் கலந்து ஒருவர்க்கொருவர் பகையின்றி எந்த ராசியிலிருந்தாலும் அந்த ஜாதகி உத்தமியென்றும், எவ்வித காரியங்களைச்செய்தாலும் நன்மார்க்க காரியங்களையே செய்வாளெனவும், ஷை ஸ்திரீக்கு எக்காலத்தும் தீமையென்பதே அணுகாதெனவுங் கூறவேண்டியதாகும்.

பொது

வாக்கினிலும்லாபத்தினிலும் தீயோர்நின்று
    வாகானமூன்றினிலே புகரும்சேர
தேக்கியதோர்பொன்னவனும் குருவேயாகில்
    திரண்டமங்கைகாமத்தை யுடையோளாகி
போக்கிடுவாள்புருஷனையும் சிலநாட்குள்ளே
    புந்தியவன்மூன்றெட்டி லிருந்துநோக்க
ஆக்கியதோராயுள்மட்டும் பலராலன்ருே
    அனுபவிப்பாள்லாபமதை அறிந்துகூறே

என்றதை யாராய்ந்தறிந்து பொருள் கூறுக.

ஷை செய்யுள் வெள்ளைச்சொற்களாகையால் உரை எழுதவேண்டுவது அனுவசியமென விடுத்தனம்.

## 12-ஆம் இடப்பலன்

1. ருது லக்கினத்திற்கு 12-ஆம் வீட்டோன் சுபனாகி 1-4-7-க்குடையவனுடன் கூடினால், அந்த ஜாதகி மனவருத்தம், சுகமீனம், பர்த்தாவிரோதம் என்னு மிப்பலன்களுண்டாகும்.

2. ருது லக்கினத்திற்கு 5-9-க்குடையவர்கள் ஷஷ்டி விரயாதி யுடன்கூடி எந்த ராசியிலிருந்தாலும், அந்த ஜாதகிக்குச் சிற்சில காலங்களில் பூர்வபூஸ்திதி நாசம், புத்திரவிரோதம், துன்பம் முதலியன உண்டாகும்.

3. பன்னிரண்டாம் வீட்டோன் பாபியாகவிருந்து தன் சுய க்ஷேத்திரத்திற்கு 6-8-12 என்னு மிடங்களிலிருந்து நீச்சம் பெறுவார்களேயானால் அவள் சிக்கனமான சிலவும் பந்து பர்த்தா உற்றார் முதலியவர்களால் நஷ்டமடையாதவளாயும், தன் காரியத்தில் கண்ணும் கருத்துமுடையவளாய் தன் காலத்தைக் கழிப்பாள்.

4. ஷஷ்டி பன்னிரண்டாம் வீட்டோன் சுபகோட்களி லொருவனாக இருந்து மேலே சொன்னபடி தனது சுயக்ஷேத்திரத்திற்கு 3-6-8-ல் நிற்க, அவள் சிற்சில காலங்களில் நற்செய்கை, மங்களகாரியம், தேவர், பிராம்மணர், தீர்த்தயாத்திரை முதலிய விஷயங்களுக்காகத் தன்பொருளைச் சிலவு செய்பவளாவாள்.

5. பன்னிரண்டாம் வீட்டோன் ஜென்மலக்கினத்திற்கேனும், சந்திரலக்கினத்திற்கேனும், 7-10-ஆம் வீட்டுக்குடையவர்களுடன் கூடினால், அந்த ஜாதகி தன்பொருளை தனது பர்த்தாவாலும் தனது சுயவியாபாரத்தாலும் இழந்துபோவாள்.

6. 12-ஆம் வீட்டோன் 3-ஆம் க்ஷேத்திராதிபதியுடன்கூடி நட்புபெற்றும், 3-ஆம் வீட்டோன் லக்கினத்திலும், 3-ஆம் வீட்டில் சந்திரனிருக்கவுமானால், அந்த ஜாதகி தன்பொருளை தன்னுடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்குக் கொடுப்பாள்.

7. 12-ஆம் ராசியில் கேதுவும், 12-ஆம் வீட்டோன் குருநின்ற ராசிக்கு 12-லும், சந்திரனிருந்த ராசிக்குக் கோணத்திலும் நிற்க அவள் தனது பொருளை சன்யாசி முதலியவர்களுக்கு அளிப்பாள்.

8. 12-ஆம் வீட்டோன் சுபனாக இருந்து ஆக்ஷி உச்சங்களால் பலம்பெற்று சந்திரனுக்கு கேந்திரம்பெற அவள் மெத்தை மேடைகளில் வாழ்வாளெனவுங் கூறவேண்டும்.

9. 12-ஆம் வீட்டோன் சுபனாக இருந்து, நீச்சம் பகையால் பல மிழந்து சந்திரனிருந்த ராசிக்கு 3-6-8-12-ல் நிற்கில் குச்சுவீடு-குடிசைவீடு-கூறைவீடு என்னுமிடங்களில் வசிப்பவளாவாள்.

10. 12-ஆம் வீட்டோன் பாபியாகி, ஜென்மலக்கினத்திற்காவது, சந்திர லக்கினத்திற்காவது, கேந்திரகோணங்களில் இருக்கில் அன்னியர் மனையும் அழகான மாளிகையாயுமுள்ள இடத்தில் வாசம் செய்வாள்.

11. 12-ஆம் வீட்டோன் பாவியாகி நீச்சம் பகையால் பல மிழந்து, சந்திரனுக்கு 2-11-ல் நிற்கில் சத்திரம் முதலிய பொதுவான இடங்களில் வாசம் செய்வாள்.

12. 12-ஆம் வீட்டோன் மேலே சொன்னபடியே பாவியாக விருந்து பகை நீச்சம்பெற்று, சந்திரனுக்கு 3-6-8-12-ல் நின்று சுப கோட்களின் பார்வை சேர்க்கையற்று நிற்கில் அவள் மரத்தடி குட்டிச் சுவர் முதலிய இடங்களில் வெகு சிரமத்துடன் வாழ்க்கை செய்வாள்.

13. ருது ஜாதகத்திற்கோ, பெண்கள் ஜனன ஜாதகத்திற்கோ, 12-ஆம் வீட்டோன் கேந்திரகோணங்களில் பலம்பெற்று இருப்பது விசேஷமென்றும், ஜென்மலக்கினம் சந்திர லக்கினத்திற்கு கொடிய ஸ்தானங்களிலிருப்பது கொடியதென்றும், சாஸ்திரங்களில் பொதுவாய் முறையிடும்.

பாவபலன் முற்றிற்று.

---

## லக்கினபலன்

1. ருதுலக்கினம் மேடராசியாகி இருக்கில் சிற்றின்பசுகத்தில் இச்சைப்படுபவள், எல்லோருடனும் கூச்சமின்றி பேசத்தகுந்தவள், நல்லோர் பொல்லாரென்னும் கருத்தறியாதவள், எவராலும் புகழப் படுபவளென்றுங் கூறுவாயாக.

ரிடபம்

2. ருதுலக்கினம் இடபமாகில் மேலே கூறியபடியே சிற்றின்ப சுகங்களில் இச்சையுடையவளும், தனது பந்துக்களிடம் சினேகிப்பது போலவே மற்றோரிடத்திலும் சினேகம் செய்பவளும், நானாவித கல்வி அறிவு ஊக்கம் முதலியன உடையவளும் ஆவாள்.

மிதுனம்

3. ருது லக்கினம் மிதுனமாகில் எவர் சொல்லையும் கேளாது தனது இஷ்டம்போல் தனது குடும்ப வேலைகளைச் செய்யத்தகுந்த

வளும், எல்லாவிதமான தொழிலேயும் சிரமமின்றி செய்யத்தகுந்த வளும் ஆவாள்.

கடகம்

4. கடகமென்னும் ராசியில் ருதுவானவள், எக்காரியத்தையும் துஷ்டத்தனமாய் செய்யத்தகுந்தவள், மனமார்த்தமாய் நஷ்டதுஷ்ட காரியங்களுக்கு பிரவேசிப்பவளும், பிறர்காணுத, ஒளித்து வாழ்பவளும் ஆவாள்.

சிங்கம்

5. சிங்கமென்னு மிராசியில் ருதுவானவள் எக்காரியத்தைச் செய்யினும் மிக்க நெறியும், பக்திபூர்வமாய் செய்யத்தகுந்தவளும், எவராலும் துன்பப்படாதவளும், தீர்க்கமாங்கல்யம், தீர்க்கபுத்திரர்களும், நல்லெண்ணமுடையவளும் ஆவாள்.

கன்னி

6. கன்னியாராசியில் ருதுவானவள் புருஷனுக்கு பயந்தவள் அழகு-செல்வம்-புத்திரர் இவைகளேயுடையவள், பொன் பூஷணங்களேச் சேகரித்துவைத்து பிறர் மதிக்கத்தக்க நிலேயில் வாழ்பவளும், மாங்கல்யவதியாய் உயிரிழப்பவளும் ஆவாளெனக் கூறுக.

துலாம்

7. துலாராசியில் ருதுவானவள் எவ்வித காரியங்களேயும் பிறர் அறியவொட்டாமலும், எக்காரியத்திலும் கடினமாய் நடந்துக்கொள்ளக் கூடியவள், சங்கீதம் முதலியவகையில் ஆசையுடையவள், எந்நாளும் சிறப்பும் பெருமையும் உடையவள்.

விருச்சிகம்

8. விருச்சிக ராசியில் ருதுவானவர்கள் போக இச்சையில் ஆசையுடையவர்கள், நானுவிதமான கார்யா கார்யங்களேயும் அறிந்தவள், எவருக்கும் நல்லவள், துடுக்குத்தனமும், பணச்சிலவும், மோசமும் உடையவள் என்றுங் கூறுக.

தனுசு

9. தனுசு லக்கினத்தில் ருதுவானவள் முதலிலும் கடைசியிலும் வறுமையுடையவள், மத்திய வயதில் யோகமுடையவள், பக்ஷிகளேக் கொல்வதில் மனமுடையவள், திருட்டுத்தனமுடையவள் என்றுங் கூறுவாயாக.

மகரம்

10. மகரமென்னும் ராசியில் ருதுவானவள் நல்லோர் பொல்லோ ரென்னும் தாரதரங்களைத் தெரிந்தவளும், கடவுளிடத்தும் புருஷ னிடத்தும் பெரியோரிடத்தும் பக்தியுள்ளவளும் ஆவாள்.

கும்பம்

11. கும்பம் என்னும் ராசியில் ருதுவானவள் படபடப்பாய் பேசத்தகுந்தவள், சுகமில்லாதவள், நன்மை என்பதைக் கொஞ்ச மேனும் செய்யாதவள், ஆபரணங்களைச்சேர்க்க எண்ணமுடையவள் என்றுங் கூறுவாயாக.

மீனம்

12. மீனராசியில் ருதுவானவள் எவருக்கும் தெரிந்தவள், அன் னியரால் போற்றத்தகுந்தவள், அன்னிய தேசசஞ்சாரி, கைப்பொரு ளைப் பிறருக்குச் சிலவு செய்பவள், நானுவித வருமானமுடையவள் என்றுங் கூறுக. இவை லக்கினப் பொதுப்பலன் என்பதாம்.

## 2-வது நக்ஷத்திரப்பலன் விளக்கம்

1. அசுவினியென்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் முகத் தழகும் வாழ்க்கை அழகும் பொருந்தியவள், எக்காலத்தும் தன் குடும்ப சங்கதிகளை வெளிவிடாதவள், நன்மார்க்கம், நற்குணம் உடை யவளெனவுங் கூறுவர்.

2. பரணி என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் கண்டிப்பாய் பேசத்தகுந்தவள், எல்லோரையும் ஒன்ருய் மதிப்பவள், ஏற்பவர்க்கு ஈயும்தன்மை யுடையவள் எனவும் கூறுவர்.

3. கார்த்திகை என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் தரித் திரமுள்ளவளாயினும், கடவுளிடத்தும், பந்துக்களிடத்தும் பயமுடை யவள், வைராக்கிமுயடையவள் எனவுங் கூறுக.

4. உரோகணி என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் தனது தாய் தந்தையரிடத்தும், பந்துக்களிடத்தும் மிகுந்த ஆசையும் அழகிய குழந்தையைப்பெற்று மகிழ்பவளும், எந்நாளும் நீங்காதபடி எல்லா சம்பத்துடையவளும் ஆவாள் என்றும்.

5. மிருகசிரத்தில் ருதுவானவள் சிற்றின்பத்தில் பிரியமுடை யவளென்றும், பலவிதமான தொந்தரை காரியங்களில் பிரவேசிப்பவ ளும் ஆவாளென்றும், தெய்வபக்தி யுடையவளென்றுங் கூறுக.

6. திருவாதிரை என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் எக்காரியத்திலும் வெறுப்புடையவள், தியாகம் செய்பவள், மோசமில்லாதவள், பலவிததொழில் செய்யத்தகுந்தவள்.

7. புனர்வசு என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் சகல சுகங்களையும் உடையவள், நன்மையுடையவள், சுகதேகி, விவசாய வியாபாரமுடையவள், பலவிதமான ஆபரண பூஷணமுடையவள் எனவுங் கூறுக என்பதாம்.

8. பூசம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் கல்வி செல்வம் புத்திரர் முதலிய எல்லா சம்பத்தும் உடையவள், நூதன மாடமாளிகையுடையவள், அழகும் புண்ணியமும் வாய்ந்தவள் எனவுங் கூறுக.

9. ஆயிலியம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் தேக பலயீனம் புத்திர புத்திரிகளைப் பெற்றிருப்பவள், கிலேசமும், உதவி இல்லாமையுமாம், அன்னவஸ்திரங்களுக்குப் பஞ்சமில்லாதவள்.

10. மகம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் வாழ்க்கையில் எவ்வித துன்பமும் இல்லாதவள், வைராக்கியமுடையவள், ஸ்தூல தேகமுடையவள், வளமான புத்திர புத்திரிகளையுடையவள், சிலாக்கியமுடையவள்.

11. பூரம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் ஆபரண பூஷணாதிகள்மேல் பிரியமுடையுவள், தாய் தந்தையருக் கினியவள். புத்திரதோஷ முடையவள், எவருக்கும் நல்லவள், ஆலோசனைக்காரி.

12. உத்திரம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் சீலமுடையவள், கல்நெஞ்சம், பொருள் சம்பாதிக்க இச்சைப்படுபவள், தாரதம்மிய முடையவள், ஆயுராரோக்கியமும், அயிஸ்வரியமும் உடையவள்.

13. அஸ்தம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் காரிய ஆலோசனையும், எல்லோரிடமும் சினேகிப்பவளும், பொன்னாபரணங்களைப் பல உடையவளும், காரியவாதியும், உயர்ந்த நடையுடையவளுமாம்.

14. அஸ்தம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் அழகு, குணம் என்னும் நன்னடக்கையும் அழகிய ரூபமும் உடையவள், எவரையும்மதியாதவள், வேல்போன்ற கூரியகண்ணுடையவள்; எந்த காரியத்தையும் ஆலோசித்துச் செய்பவளும் ஆவாள்.

15. சித்திரை என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள், புத்திர புத்திரிகளைப் பெற்றிருப்பவள், எல்லோருக்கும் நல்லவள், நானுவிதமான சாஸ்திரங்களை யறிந்தவளும் ஆவாள்.

16. சுவாதி என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் பர்த்தாவுக்கு நல்லவள், கிருஷிதொழிலையுடையவள், மேலான பிரபுக்கள் நேச விஸ்வாசமுடையவள், யாத்திரைப் பிரியமுடையவள்.

17. விசாகம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள், சயன சுகம் குறைந்தவள், மாங்கல்யமிழந்து உயிரிழப்பவள், நற்செய்கை நற்காரியமுடையவள் எனவுங் கூறுக.

18. அனுஷம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் பெலயீனதேகமும், அன்னவஸ்திரங்களுக்குப் பஞ்சமில்லாதவள், சிலாக்கியமுடையவள், நோயுடையவள்.

19. கேட்டை என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் போக இச்சை யதிகமுடையவள், விசாலமான முகமும் புயவலிமையும் உடையவள், சகல பிரீதியுடையவள்.

20. மூலம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் நம்பிக்கையுடையவள், புத்திர புத்திரி சுகம் உடையவள், கோபமில்லாதவள், குடும்பத்திற்கு ஒழுக்கமுடையவள், நல்லவள்.

21. பூராடம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் சல்லாபமுடையவள், மனோதைரிய முடையவள், தனது புருஷனை மதியாதவள், பொன் பொருள் பல உடையவள்.

22. உத்திராடம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் வாகனங்களாலும் பூமியாலும் சுகத்தை அனுபவிக்கத்தக்கவள், இல்லற தருமம் உடையவள், நன்மார்க்கமுடையவள்.

23. திருவோணம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் சகல பாக்கியமும் பொருந்தியவள், இலேசான நடையுடையவள், சாந்தமுடையவளும் ஆவாள்.

24. அவிட்டம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் போக முடையவள், பொன் பூஷணங்களைச் சேர்க்க ஆசை யதிகமுடையவள், அனுசாரமில்லாதவள் என்றுங் கூறுக.

25. சதயம் என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் பொருள் சிலவு அதிகமுடையவள், தெய்வபக்தியுடையவள், பிறரால் பகை யில்லாதவள், வாகனங்களை யுடையவள்.

26. பூரட்டாதி என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் திட சரீரமுடையவள், பூஸ்திதி யுடையவள், புத்திரசுகம் குறைந்தவள், விவசாயத்தால் ஜீவிப்பவள், சாந்தமுடையவள்.

27. உத்திரட்டாதி என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் மனக்குறைபுடையவள், அலேச்சலும் விசனம் துன்பம் இவற்றை யுடையவள் புத்திர புத்திரிகள் உடையவள்.

28. ரேவதி என்னும் நக்ஷத்திரத்தில் ருதுவானவள் வியாதி யால் சிலகாலங்களில் துன்பப்படுபவள், மனதில் திகில் உடையவள், உண்மையை உரைப்பவள், அன்னவஸ்திரங்களுக்குப் பஞ்சமில்லாத வள் எனவுங் கூறுக.

## ருதுத் திதிபலன்

### பிரதமை

1. பூர்வபக்ஷமோ அல்லது கிருஷ்ணபக்ஷத்திலோ பிரதமை திதியில் ருதுவாகில் லாப நஷ்டங்களை யொன்றாய் பாவிப்பவள், சில காலம் கஷ்டம் முதலியன உடையவள், அழகான சரீரமுடையவள்.

### துதியை

2. துதியை திதியில் ருதுவானவள் தனது புருஷனுக்கு இனிய வளும், புருஷனைச் சார்ந்தவர்களுக்குக் கொடியவளும், அலங்காரம் செய்யப் பிரியமுடையவள், நல்லவள்.

### திருதியை

3. திருதியையில் ருதுவானவள் எக்காரியத்திலும் துன்பமடை யாதவள், உல்லாசமானவள், பெண் குழவிகளை அனேகம் உடையவள், ஜீவகாருண்ய முடையவளும் ஆவாள்.

### சதுர்த்தி

4. சதுர்த்தியில் ருதுவானவள் குடும்பதொல்லையுடையவள், வீண் செலவுடையவள், நாசக்காரி பந்துவிரோதமுடையவள், தனது இஷ்டம்போல் நடக்கத்தகுந்தவள்.

### பஞ்சமி

5. பஞ்சமியில் ருதுவானவள் குடும்பவொற்றுமையும் நாய் தந்தையர்களால் நன்மையையுடையவள், புருஷனால் சுகமடைபவள், விசேஷ புத்திர புத்திரிகளை யுடையவள்.

சஷ்டி

6. சஷ்டி திதியில் ருதுவானவள் தருமம் செய்பவள், கடவுள் பக்தியுடையவள், எல்லோருக்கும் தெரிந்தவள், குலாசாரவிதி வழுவாதவள். புத்திர வாஞ்சை யில்லாதவள்.

சப்தமி

7. சப்தமியில் ருதுவானவள் பொன் பூஷணம் பூமி ஆடு மாடு உடையவள், கணவனுக்கு இனியவள், மகா வல்லமையுடையவள், அனேக புத்திர புத்திரிகளை யுடையவள்.

அட்டமி

8. அட்டமியில் ருதுவானவள் சிற்றின்ப இச்சையும், செல்வமும் உடையவள், தன்னை அலங்கரித்துக்கொள்ள ஆசையுடையவள், நானாவித தந்திரமுடையவள், புத்திரதோஷமுடையவள்.

நவமி

9. நவமியில் ருதுவானவள் ஆசாரம் உடையவள், சிற்சில காலங்களில் வறுமையுடையவள், கோபம் உடையவள். எந்நாளும் சில கஷ்டங்களையுடையவள், அற்ப புத்திரர்களையுடையவள்.

தசமி

10. தசமியில் ருதுவானவள் புருஷனுக்கும் மாமன் மாமிக்கும் நல்லவள், அழகுடையவள், தருமஞ்செய்ய ஆசைப்படுபவள், சிறப்பும் பெருமையும் உடையவள், வெகுபுத்திரர்.

ஏகாதசி

11. ஏகாதசி என்னும் திதியில் ருதுவானவள் கடவுளிடத்து நீங்காத பக்தியும், புருஷன் முதலிய மற்றோரிடத்தும் நீங்காத ஆசையும், குடும்பகஷ்டமும் உடையவள்.

துவாதசி

12. துவாதசி திதியில் ருதுவானவள் பலருக்கும் நல்லவள், அனேக புத்திர புத்திரிகளையுடையவள், தனது இனத்தவரால் மதிக்கத்தகுந்தள், திடசரீரம் உடையவள்.

திரயோதசி

13. திரயோதசியில் ருதுவானவள் பிறருக்கஞ்சாதவள், கணவனுக்கு பயப்படாதவள், நியாயத்தை விடுத்தவள், எவருக்கும் கீழ்ப்படியாதவள், சிற்றின்பமுடையவள்.

சதுர்த்தசி

14. சதுர்த்தசியில் ருதுவானவள் நாசக்காரி, [illegible] அறிவு, எவரையும் சீறிவிழுவாள், சிற்றின்பமுடையவள், [illegible] பெருங்கவியும் ஆசையும் உடையவள், சுகமில்லாதவள்.

அமாவாசை பூரணை

15. அமாவாசை அல்லது பூரணிமையில் ருதுவானவள் உல்லாசமாயிருக்க ஆசைப்படுபவள், சங்கீதம் தெரிந்தவள், அழகான தேஜஸ் உடையவள், நானாவித உபாயம் தெரிந்தவள் என்றுங் கூறுவாயாக.

## ருதுவாரப்பலன்

1. ஆதிவாரமாகிய ஞாயிற்றுக்கிழமையில் ருதுவாகில் அவளுக்கு புத்திரரில்லையென்பது சாஸ்திரங்களின் கருத்து. ஆயினும், ஞாயிற்றுக்கிழமையில் பிறந்தவள் அற்பபுத்திரர்களை யுடையவள், ஜென்ம சூரியனாகில் அற்ப புத்திரருடையவள் எனவுங் கொள்க.

திங்கள்

2. சோமவாரமாகிய திங்கட்கிழமையில் ருதுவானவள் எக்காலத்தும் நீங்காத சந்தோஷமுடையவள், சுமங்கிலி, தன்பர்த்தா குடும்பமானது நாளுக்குநாள் சந்திரகலைபோல் வளரும் ஆயுதபூஷண சம்பத்துடையவள்.

செவ்வாய்

3. மங்களவாரமென்னும் செவ்வாய்க்கிழமையில் ருதுவானவள் சீக்கிரம் சந்தோஷி, அற்பமாங்கல்ய முடையவள், இடபேதகவாசி சிற்றின்ப இச்சையுடையவள், நானாவித சந்தோஷி.

புதன்

4. புதவாரமென்னும் புதன்கிழமையில் ருதுவானவள் சகல சௌக்கியமும் உடையவள், அநேக புத்திரர்களைப் பெற்றிழப்பவள். ஆபரணம் பூஷணம் பலவற்றை யுடையவள், பந்துசுகம் உடையவள்.

வியாழன்

5. குருவாரமாகிய வியாழக்கிழமையில் ருதுவானவள், நன்னடக்கை, நல்லொழுக்கம் முதலியன உடையவள், தீர்க்க ஆலோசி சன்மார்க்கமுடையவள், குரு விஸ்வாசமும் தெய்வபக்தியும் உடையவள்.

## வெள்ளி

6. சுக்கிரவாரமென்னும் வெள்ளிக்கிழமையில் ருதுவானவள் எல்லாவித [illegible]ம் உடையவள், சகல சாஸ்திரங்களையும் கற்பவள், பல[illegible] [illegible]ச்சி யுடையவள், நன்மைசெய்ய முற்படுபவளென்றும் கூறுவதோடு மகா பதிவிரதையென்றுங் கூறுவர்.

## சனி

7. சனிவாரமென்னும் சனிக்கிழமையில் ருதுவானவள் சிறு குடையவள், சிலாக்கியமில்லாதவள், நன்கொடை யில்லாதவள், பல மைந்தர்களைப் பெற்று இழப்பவள், க்ஷீணதேகி பலகஷ்டமும் தொல்லையும் உடையவள் என்றும் கூறுவர்.

இதுவரையில் கூறிவந்த ருதுபாவங்களை அந்நாள்முதல் இந்நாள்வரையில் பண்டைய சாத்திரநூலை மேற்கொண்டு எவரும் இவ்வாறு கண்டித்து கூறியதில்லை. இந்நூலிலும் சில பொதுவாகவும் சிற்சில விஷயங்களைக் கண்டிப்பாயும் கூறியிருப்பது வாசகர்கள் கவனிக்கத் தக்கதேயாகும். ஆயினும் இந்நூலிலுள்ள விஷயங்களில் பாவபலன்களைத் தவிர மற்றுமுள்ள வாரபலன் - திதிப்பலன் - லக்கினபலன்- நக்ஷத்திரபலன் என்பது பொதுவாய்க் கூறியுள்ள விஷயமாதலாலும், மேற்படி விஷயங்களைப் பொதுவாய் வைத்து மற்றுமுள்ள விஷயங்களை அவையாவன, பாவாத்பாவ விஷயங்களையே விசேஷமாகக்கருதி அவரவர்கள் பொதுப்பலனைத் தெரிந்துகொள்வதோடு அந்தந்த பாவங்களால் ஏற்படும் தோஷங்களுக்கு தெய்வபக்தியாலும், நவகோட்களின் உபாசனத்தாலும், அவரவர்கள் தோஷங்களுக்கு சிரமபரிகாரம் செய்துகொள்ளுதல் நலமாகும். மற்றும் அவரவர்கள் சிரத்தைக்குத் தக்கபடி ஓர் சூக்ஷமமார்க்கத்தால் (அவையாவன) தெய்வ பக்தியால் நீக்கி இன்பமடையுமாறு வேண்டுகின்றனம்.

இந்நூலின் முக்கிய கொள்கையை இந்நூலின் 1-2-3-வது பக்கத்தில் காணலாம்.

---

## ருதுதோஷ பரிகாரம்




## மாததோஷ பரிகார சக்கரம்

மாததோஷ பரிகாரம்:—அவையாவன, ஆகாதமாதங்கள் எனக் குறிப்பிட்டுள்ள சித்திரை-ஆடி-ஐப்பசி-கார்த்திகை என்னும் மாதங்களில் ருதுவானவர்களுக்கு சிற்சில கஷ்டங்கள் உண்டெனக் குறிப்பிட்டுள்ளார்.

அவையாவன: இந்நூலினுள்ளபடி சித்திரை மாதத்தில் ருதுவானவளுக்கு பர்த்தாதோஷம் சுகம் குறைவு, ஆடிமாதத்தில் ருதுவானவள் புத்திரபாக்கியம் குறைந்தவள், ஐப்பசி மாதத்தில் ருதுவானவள் க்ஷேத்திரபலங் குறைந்தவள் என்றபடியும், கார்த்திகையில் ருதுவானவள் பலவிதமான விரோதமுள்ளவள் என்று குறிப்பிட்டபடி, மேற்படி மாததோஷங்களுக்குப் பொதுப்படையான தோஷ பரிகாரங்களை இங்கு கூறுவாம்.

எப்படியெனில், மாதம் என்பது சந்திரனால் உண்டாகிய தென்பதையும், மேற்படி சந்திரனே உலகமாதா என்பதையும், எவரும் மறுக்கமுடியாது. ஆதலால், மாததோஷத்திற்கு ஈஸ்வரி பூஜையே செய்யவேண்டும்.

அவை எப்படியெனில், மதி நாளாகிய சோமவாரத்தன்று, அல்லது பௌர்ணமியன்று, மேற்படி மாதங்களில், அவையாவன, சித்திரை-[illegible]-ஐப்பசி-கார்த்திகை என்னும் மாதங்களில் ருதுவானவளை, அன்று உதயமுதல் அஸ்தமம் வரையில் விரதமிருக்கச்செய்து அன்றுமாலை [illegible] மணிக்குமேல் அவளுக்கு வெள்ளை வஸ்திரமுடுத்தி மேற்கண்டவாறு சக்கரமெழுதி அதன்மேல் உட்காரவைத்து, பிராம்மணர் அல்லது சைவர்களால் தூபதீப நைவேத்தியம் செய்வித்து சொல்லும் மந்திரம்.

ஓம் பஞ்சாக்ஷரி வாவா, ஓங்கார பஞ்சாக்ஷரி வாவா, ரீங்கார பஞ்சாக்ஷரி வாவா, ஐயும்-கிலியும்-சவ்வும்-ஸ்ரீயும் சரஹணபவ என்று ஜெபித்து அவள்மீது அக்ஷதை தெளித்து உரு 108 முடிந்தவுடன் அவளை அவ்விடத்தினின்று எழுப்பி ஆலாத்தி செய்து சுத்த ஜலத்தால் ஸ்நானம் செய்விக்கும்படி செய்யவும்.

மறுநாள் காலையில் மேற்படி ஸ்திரீயை எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யும்படி செய்யவும். இவை மாததோஷ பரிகாரமாகும்.




நக்ஷத்திரதோஷ பரிகாரசக்கரம்

## நக்ஷத்திரதோஷ பரிகாரம்

முன் கூறியுள்ள நக்ஷத்திரபலனில் ஆகாதெனக் குறிப்பிட்டுள்ள கொடிய நக்ஷத்திரங்களில் ருதுவானவர்களுக்குச் சிற்சில கஷ்டங்களுண்டாகும் என்று குறிப்பிட்டபடி, மேற்படி நக்ஷத்திர தோஷங்களுக்கு பரிகார விவரங்களை இங்கு கூறுவாம்.

கொடிய நக்ஷத்திரங்களில் ருதுவானவர்களை ருதுவான நாள்முதல் 3-நாள் வரையில், கல்யாணமான ஸ்திரீகளை தனது புருஷன் முகத்தில் விழிக்காமலும், விவாகமாகாத ஸ்திரீகளை சிவந்த ஆடை உடுத்தாமலு மிருக்கச்செய்து, மூன்றும்நாள் மாலையில் ஸ்நானம் செய்ய வைத்து ருதுசாந்திக்காக குறித்த நாளையில். அல்லது ருதுசாந்தியான மூன்றும் நாளையில் ருதுவான ஸ்திரீக்கு புதிய வெள்ளை வஸ்திரமுடுத்தி, மேற்கண்ட சக்கரத்தை பூமியில் எழுதி அதன்மேல் உட்காரவைத்து, பிராமணர்களால் சகல தூபதீப நைவேத்தியத்துடன் கலச ஆவாஹனம்செய்து, ஓமகுண்டம் செய்வித்து மேற்படி குண்டத்தை வலம்வரச்செய்து, பின்பு ஸ்நானம் செய்வித்து, தான் அணிந்துள்ள வெள்ளை வஸ்திரத்தை ஏழைகளுக்கு தானம் செய்தும், மறுநாள் மாலையில் காளி அம்பாள் முதலிய ஆலயங்களுக்கு நெய்தீபமேற்றி நிவேதனம் செய்து, ஆலயப்பிரதக்ஷணம் செய்யில் மேற்படி நக்ஷத்திரதோஷத்திற்கு பரிகாரமாகும்.

இதனை அவரவர்கள் சக்திக்கு தகுந்தபடி புதியவஸ்திரம் அல்லது சலவைசெய்த வஸ்திர முடுத்தியும், நெய்தீப மென்பதை நல்லெண்ணை தீபமிட்டும் செய்யலாம். தன்னால் இயன்றவரையில் ஏழைகளுக்கு அன்னமளிக்கவேண்டும்.

---



திதிதோஷ பரிகார சக்கரம்

## திதிதோஷ பரிகாரம்

கொடிய திதிகளில் ருதுவான ஸ்திரீகளுக்கும் முன் கூறியபடியே சில தோஷங்கள் உண்டாகையால் திதிதோஷ பரிகாரம் செய்யும் விதம்.

ஆகாத் திதிகளில் ருதுவாகிய பெண்ணை ருதுசாந்தி செய்தபின் அவள் ருதுவான திதிமுதல் 5-நாள் [illegible]டும் விரதம் [illegible]செய்தும், ஆண் பெண் [illegible]ளும் இருவரும் [illegible] பேசாது காலையிலும் மாலையிலும் ஸ்நானம் செய்து அவரவர்களுக்கு வேண்டிய தேவதா ஆராதனை செய்தும், இவ்வாறு நாட்கள் 5-ஆனவுடன் 5-ஆம் நாள் பிராமணரை [illegible] சகல ஆபதிய நைவேத்தியங்களுடன் கலச ஆவாஹனம் செய்து [illegible] தீர்த்தங்களை [illegible] மண்ணின்மீது புரோக்ஷிதம் செய்து [illegible] சக்கரம் எழுதி அதின்மீது உட்காரவைத்து கலசம் நிறுத்தி அர்க்கியம் செய்தும், ஹோமகுண்டம் செய்தும், பசு முதலியவற்றைப் பிராமணர்களுக்கு தானம் செய்தும், அவர்களாசி பெற்ற பின், விவாகமான ஸ்திரீ புருஷனுடன் பேசவேண்டாம், ருதுவான [illegible] விழிப்பதோ சிலாக்யமாகும்.

## பொதுவாய் எல்லா ஸ்திரீகளும் காலையும் [illegible]லையும் உபாஸனம் செய்யவேண்டிய மந்திரம்

“ஓம் அம்பா மகாதேவி, சச்சிதானந்தி, சாம்ப[illegible] நீல கண்டாயி, திருநேத்திரி, டம்பா வைரவி, ராஜ ரா[illegible] அடியே னுக்குவந்த ஆபத்துகளைத்தீரும் அம்மனி மகே[illegible] [illegible] காலையும் மாலையும் ஜெ[illegible] செய்வாராயின் அவர்களுக்குண்டாகும் சகல தோஷங்களும், சகல கஷ்டங்களும் பானுவைக்கண்ட பனிபோல விலகும்.

## பெண்களுக்கு உண்டாகும் புத்திரதோஷம் வறுமை துன்பம் முதலிய தோஷங்களுக்கு பொதுவாய்க் கூறிய தோஷபரிகார மந்திரம்

ஜெயத்காளிய விலேயே
[illegible]லாகாலபத்சண்டோ ம[illegible]ருமவட்டவி
[illegible]ண்டப்ரதண்ட தண்டோதபா
நீ[illegible]வேவேம்புவே முத்யபா தாம்புவே
[illegible]த்யசம்போதரி கலியகெள தாரியே
கௌமாரிகஜ்ஜணி சுலாங்ா தெள்பாமி
பலப்ர தங்களும் நிஷ்டநிஷ்டங்கமேடி
சுமங்க கேசீதாடி கடகண்டா
மெட்டகல ஜாபிஜோடி
[illegible]யபதோன சக்தி ஹ[illegible]குகோரி
[illegible] [illegible] கிலசாயு[illegible]தி
ப[illegible]தது
ஜ[illegible]கந்திரகவெள்பஞ்சரி [illegible]ணிநீ
[illegible]சாவேணிநீ அறஜன சகோதரி
ச[illegible]சமை க்ருபாகரி
[illegible] ஹுல் வியாபதா[illegible]
ப[illegible]ராஷா ஹம்குஜெ பால[illegible]ஷபிராமி
[illegible]ராபிசாபி ஞாருமே
[illegible]ம் குகு குகு ரும்ரும்
[illegible]ங களுக்குமா தாரா ரிய[illegible]யா
பங்கு பந்து நிகடுருவே
கன்னியே எத்தன்னமாத[illegible]
மந்திரவடிவாசியே ம[illegible]வாரியே
லவட மஹாதுர்க்கியே
நிற்குணவதாக்ஷியே
[illegible]டுமசாக்ஷியே
[illegible]க்கிராவளி பதுமகந்[illegible]வளி

...த்திட்டா மேலாம்பட்டாயியே
...பந்திதோரணி புண்ணியசூடாமணி
...ரபடமும் சோரவே
...படமும் கூறவே
...டமாய் தண்டு கிடுகி டெனவேரவி
நடு...டெனவேபுவி
உக்ரவீரங்களும் அக்ரகாரங்களும் தக்ஷக் கடாயுதே
பவளம்சம்பவதே பாரோதரி எம்குளோதரி
எதானதா லேகுராகு பக்கா சோகுதல்லி
ராமம்மா திக்குனா கேவம்மா
தப்புகேவலநின்னமைந்தநா தாளினநம்மா
பேருலகதாரியே பெருமைசிங்காரியே
ஓம் ரம் ரீம் நசி மசி சுவாஹா.

## பெண்களின் விரதபலன்

எந்த ஸ்திரீகளும் ஆதிவார விரதமிருக்கில் சிவபி... கூடி...மும், சகலதுன்ப நிவர்த்தியும், தனது இன்னல் நீங்கி இன்ப... ண்டாகும்.

சோமவார விரதமிருக்கின் லக்ஷ்மிகடாக்ஷமும், கே... சித்தியும், நீங்காதவாழ்வும், அன்னவஸ்திர விருத்தியும், ...களின் உதவியும், பெரியோர் நட்பும் உண்டாகும்.

மங்களவார விரதமிருக்கின் சத்துரு ஜெயமும், ... நேயம், சந்தோஷம், நல்வரவு, நல்லோருதவி முதலியன உ...ம்.

புத்வார விரதமிருக்கின் சகல ...பாக்கியங்களும், ...வில் விருத்தி, பல்விதகாரிய அனுகூலம், நல்லோர் ... முதல... ண்டாகும்.

குருவார விர...ருக்கின் தான் கோரிய தெய்வ அ...ம் சகல சௌக்கியமும், கௌரவ விருத்தியும், பொன் விருத்... ண்டாகும்.

சுக்கிரவார விரதமிருக்கின் லக்ஷ்மி விலாசமும், பர்...ம், எவ்விதமான துன்பங்களுண்டாயினும் பனிபோல் நங்குத...

சனிவார விரதமிருக்கின் பலவித சம்பத்தும், நீங்... ...ந்துக்கள் வரவும், வியாதி நிவர்த்தியும், தனதான்ய...யும், ...ங்கள விலாசமும் உண்டாகும் என்பதாம்.

ருதுநூல் சாஸ்திரம்

ஸ்ரீ சிவஜெயம்
ஸ்ரீ ஷண்முக விலாஸ் ஜோதிட சாலை,
M. 8. வெங்கடசுப்பிரமண்ய ஜோஸியர்.
மன்னார்குடி.